2024 ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் வேட்பாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் பிரச்சார செலவின அறிக்கைகள் குறித்த பகுப்பாய்வு

2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டது

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

2024 ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் வேட்பாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் பிரச்சார செலவின அறிக்கைகள் குறித்த பகுப்பாய்வு

2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டது

2024 ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் வேட்பாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் பிரச்சார செலவின அறிக்கைகள் குறித்த பகுப்பாய்வு

2026

Research by: Manjula Gajanayake

Design: Haritha Dahanayaka

Transparency International Sri Lanka
366, Nawala Road, Nawala,
Rajagiriya,
Sri Lanka.

Phone: +94 11 4 369 781
Fax: +94 11 2 865 777
Email: tisl@tisrilanka.org
Web: www.tisrilanka.org

Twitter: twitter.com/tisrilanka
LinkedIn: lk.linkedin.com/company/tisrilanka
Facebook: facebook.com/tisrilanka
Instagram: instagram.com/transparency_sri_lanka
YouTube: youtube.com/tisrilankatube

Transparency International Sri Lanka (TISL) is an independent, non-governmental, non-profit and nonpartisan organisation with a vision of Sri Lanka in which government, politics, business, civil society and the everyday lives of citizens are free from corruption. As the fully accredited national chapter in Sri Lanka of the Berlin-based Transparency International (TI), TISL partners and works with TI and its chapters world-wide.

உள்ளடக்கம்

அறிமுகம்	02
பின்னணிச் சூழல்	03
அரசியல் நிதியை ஒழுங்குபடுத்துவதில் நிறுவனங்களின் பங்கு	05
தேர்தல்களுக்கு அப்பாற்பட்ட அரசியல் நிதியளிப்பு	05
நடைமுறைப்படுத்தலின் மூலம் கற்றுக் கொண்ட பாடங்கள்	06
உலகளாவிய ஒப்பீடுகளும் தேசிய அளவிலான குறைபாடுகளும்/ இடைவெளிகளும்	06
வெளிப்படைத்தன்மையுடனான கலாசாரத்தை நோக்கிய நகர்வு	07
ஆய்வு முறைமை	07
வரையறைகள் மற்றும் சவால்கள்	09
ஜனாதிபதித் தேர்தலின் வரவு மற்றும் செலவின அறிக்கைகள் பற்றிய பகுப்பாய்வும் அவதானிப்பும்	10
பிரதான முடிவுகள் மற்றும் முக்கிய அவதானிப்புகள்	11
ஒட்டுமொத்த மதிப்பீடு	23
பரிந்துரைகளும் எதிர்கால முன்னெடுப்புகளும்	51
முடிவுரை	54

அறிமுகம்

இலங்கையின் தேர்தல் உரையாடல்களில், தேர்தல் பிரச்சார செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் என்பது அதிகமாக பேசப்படும் ஒரு பிரதான கருப்பொருளாக மாறி வருகிறது. இது ஒப்பீட்டளவில் புதியதொரு விடயமாகத் தென்பட்டபோதிலும், இவ் விவகாரம் இந்நாட்டிற்கு முற்றிலும் அறிமுகமில்லாததொன்றல்ல. உண்மையில், 1977 ஆம் ஆண்டிற்கு முன்னரும்கூட, தேர்தல் செலவினமானது தேர்தல் செயன்முறையின் ஒரு முக்கிய அங்கமாகவே இருந்துவந்துள்ளது.

புதியதோர் அரசியல் கலாசாரத்தை உருவாக்குவோம் என்ற வாக்குறுதியுடன் ஆட்சிக்கு வந்த “நல்லாட்சி” (யஹபாலன) அரசாங்கத்தின் எழுச்சியோடு, இவ்விவகாரம் மீண்டும் ஒருமுறை பரவலான கவனத்தைப் பெற்றது. சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுவது உள்ளிட்ட ஆட்சிமுறைமைக் கட்டமைப்புகளின் மறுசீரமைப்பே இச் செயற்திட்டத்தின் முக்கிய நோக்கமாக அமைந்திருந்தது. இந்த வேலைத்திட்டத்தின் கீழ், 2015 நவம்பர் 13 அன்று “இலங்கைத் தேர்தல் ஆணைக்குழு” (ECSL) நிறுவப்பட்டது. இது நாட்டின் தேர்தல் வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகின்றது.[1] இந்த வரலாற்றுச் சாதனையானது, இதற்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட, ஆனால் பெருமளவுக்கு வெற்றியளிக்காமல் போன சீர்திருத்த முயற்சிகளின் அடித்தளத்திலேயே சாத்தியமானது. குறிப்பாக, 2001 ஆம் ஆண்டின் 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைக் குறிப்பிடலாம். சில மட்டுப்பாடுகள் இருந்தபோதிலும், சுயாதீனமான மேற்பார்வைக் கொள்கையை நிலைநிறுத்துவதில் அது இன்றும் ஒரு வரலாற்று அடையாளமாகவே பார்க்கப்படுகிறது.[2]

இலங்கையின் அதுவரையான பிரத்தியேகத் தேர்தல் முறையின் கீழ் நடத்தப்பட்ட இறுதி பாராளுமன்றத் தேர்தல் என்பதால், 1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலானது தனித்துவமான முக்கியத்துவம் பெறுகின்றது.[3] அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் தேர்தல் கட்டமைப்பில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியதுடன், அச் செயற்பாட்டின் போது தேர்தல் பிரச்சாரச் செலவினங்கள் குறித்த சட்டம் உள்ளிட்ட சில முற்போக்கான வழிமுறைகளும் நீக்கப்பட்டன. குறிப்பாக, 1980 களின் சீர்திருத்தக் காலப்பகுதியில் அறிமுகம் செய்யப்பட்ட எந்தவொரு தேர்தல் சட்டமும், பிரச்சாரச் செலவினங்களை ஒழுங்குபடுத்துவது பற்றிப் போதியளவு கவனம் செலுத்தவில்லை. அதுவரை, தேர்தல் செலவுகளை முறைப்படுத்தும் பிரதான சட்ட ஆதாரமாக 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) கட்டளைச் சட்டம் விளங்கியது. வேட்பாளர்கள் தங்களது செலவின அறிக்கைகளைத் தேர்தல் அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும் போன்ற ஏற்பாடுகள் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. வேட்பாளர்கள் தங்களின் சார்பில் செயற்படுவதற்காக முகவர்களை (Agents) நியமித்துக் கொள்ளும் வாய்ப்பினை அவர்களுக்கு வழங்கியமை, இச்சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு முக்கிய அம்சமாகும். எனினும், இவ் ஏற்பாடு பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு மாத்திரமே பொருந்தக்கூடியதாக இருந்ததால், இதன் செயல் எல்லை வரையறுக்கப்பட்டதாகவே காணப்பட்டது.[4]

1...இலங்கைத் தேர்தல் ஆணைக்குழுவின் முதலாவது தலைவராக திரு. மஹிந்த தேசப்பிரிய அவர்கள் பொறுப்பேற்றார். இவ்வாணைக்குழு தலைவரையும் உள்ளடக்கியதாக மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. பேராசிரியர் ரத்னஜீவன் ஹூல் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி திரு. நலின் அபேசேகர ஆகியோர் இவ் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

2...இலங்கை அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு, 2001 ஒக்டோபர் 3 அன்று சட்டமாக நடைமுறைக்கு வந்தது. அரச நிறுவனங்களை அரசியல்மயமாக்கலில் இருந்து விடுவிப்பதற்கும், உயர்பதவிகளுக்கான நியமனங்களின் போது எழக்கூடிய நலன்களின் முரண்பாடுகளை (Conflicts of interest) இல்லாதொழிக்கும் நோக்கத்துடனும் கொண்டுவரப்பட்டதால், இச் சீர்திருத்தம் இலங்கையின் ஆட்சிமுறைமைச் செயற்பாட்டில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்தது..

3..இலங்கையின் 1977 பாராளுமன்றப் பொதுத்தேர்தல் 1977 ஜூலை 21ஆம் திகதியன்று நடைபெற்றது. இத் தேர்தல் எளிய பெரும்பான்மைத் தேர்தல் முறையில் ”முதலில் வென்றவரே தேர்ந்தெடுக்கப்பட்டவர்” (First Past the Post) முறையின் கீழ் நடத்தப்பட்டதுடன், இத் தேர்தல் முறையின் கீழ் நடத்தப்பட்ட இறுதிப் பொதுத்தேர்தலும் இதுவாகும். அக்காலப்பகுதியில், நாட்டில் காணப்பட்ட 160 தேர்தல் தொகுதிகளிலிருந்து ஆரம்பத்தில் 168 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் நியமனங்கள் மற்றும் தெரிவுகளின் மூலம், இலங்கையின் இரண்டாவது தேசிய அரசுப் பேரவையின் (8 ஆவது பாராளுமன்றம்) மொத்தப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 196 ஆக உயர்ந்தது. .

4..அக் காலகட்டத்தில், தேர்தல் திணைக்களத்தில் 23 அரசியல் கட்சிகள் மாத்திரமே பதிவுசெய்யப்பட்டிருந்தன. எளிய பெரும்பான்மைத் (First Past the Post) தேர்தல் முறையின் காரணமாக, வேட்பாளர்கள் தத்தமது அரசியல் கட்சிகளுடன் நேரடியாக அடையாளப்படுத்தப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டனர். இது சில சுயேச்சை (Independent) வேட்பாளர்களும் எளிதாக வெற்றியீட்டுவதற்குத் துணைபுரிந்தது. அத்தோடு, 1989 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில், இடைத்தேர்தல்கள் (By-elections) மிகவும் இயல்பானவையாக இருந்ததுடன், நாட்டின் அரசியல் போக்கைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாகவும் விளங்கின.

பின்னணிச் சூழல்

தற்போதைய சட்டத்தின் ஒரு தனித்துவமான சிறப்பம்சம், அது முதன்மையாக அரசியல் கட்சிகளையும் வேட்பாளர்களையும் மையப்படுத்தியதாக அமைந்திருப்பதாகும். எனவே, இலங்கை இத்துறையை முற்றிலும் ஒரு புதிய கோணத்திலிருந்து அணுக முனையவில்லை. மாறாக, நாட்டின் தேர்தல் நடைமுறையானது 1931 ஆம் ஆண்டிலிருந்தே ஒரு தெளிவான சட்டக் கட்டமைப்பிற்குள் படிப்படியாகப் பரிணமித்து வந்துள்ளது. தூய்மையானதோர் அரசியல் பண்பாட்டை நோக்கிய கோரிக்கைகள் கடந்த தசாப்தங்களில் பெரும் தீவிரமடைந்து, இன்று அரசியல் மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் பொதுவானதும் பரவலானதுமான எதிர்பார்ப்புகளாக மாறியுள்ளன. ஆட்சிமுறைமையில் ஏற்பட்ட காத்திரமான மாற்றங்களின் பின்னணியில் இயற்றப்பட்ட இப் புதிய சட்டமானது, இத்தகையதொரு சூழலமைவின் அடிப்படையிலேயே விளங்கிப் புரிந்துகொள்ளப்பட வேண்டும்.[5]

2015 ஆம் ஆண்டு வரை, இலங்கையின் அரசியல் நிறுவனங்கள் தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துவதனை ஒரு முன்னுரிமைக்குரிய தேவையாக உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. இலங்கைத் தேர்தல் ஆணைக்குழு நிறுவப்படுவதற்கு முன்னர், நாட்டின் தேர்தல்கள் யாவும் பெரும்பாலும் 1980 களின் முற்பகுதிக்குரிய சட்டக் கட்டமைப்புகளின் அடிப்படையிலேயே நடத்தப்பட்டு வந்தன. அப்போதிருந்த முன்னாள் தேர்தல் திணைக்களமானது, தேர்தல்களை நிர்வகிக்கும் பொறுப்பைக் கொண்டிருந்த போதிலும், சட்டச் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதில் ஒரு காத்திரமான பங்கினை ஆற்றியிருக்கவில்லை. எவ்வாறாயினும், புதிய தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்பட்ட பிறகு, சிவில் சமூக அமைப்புகளினதும் தேர்தல் கண்காணிப்பு குழுக்களினதும் பலத்த ஆதரவோடு இவ்விவகாரம் பெரும் உத்வேகமெடுக்கத் தொடங்கியது. இவ்வமைப்புகள், தேர்தல் பிரச்சாரச் செலவினை ஒழுங்குபடுத்துவதனை தங்களது செயற்திட்ட நிரலின் உயர் இலக்காக முதன்மைப்படுத்தின.[6]

2019 ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இச் சீர்திருத்தப் பாதையானது கூடுதல் வேகத்தைப் பெற்றதுடன், புதிதாக அமைக்கப்பட்ட ஆணைக்குழு தேர்தல் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதில் மிக முக்கிய பங்காற்றியது. இத்தகைய முயற்சிகளின் உச்ச பெறுபேறாக, நாட்டின் சட்டவாக்க வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமைந்த 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தை உன்னிப்பாக ஆராய்கையில், இது தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துவது குறித்த உலகளாவிய அணுகுமுறைகளுடன் தெளிவான முறையில் ஒத்துப்போவதை அவதானிக்க முடிகிறது. எவ்வாறாயினும், இதன் ஸ்திரத்தன்மையையும் செயற்திறனையும் உறுதிப்படுத்துவதற்கு சில விதிகளை மேலும் செப்பனிட வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது.

இச்சட்டமானது, 1977 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட சட்டக் கட்டமைப்பைப் போன்றே தகவல்களை வெளிப்படுத்துவதற்கும், அறிக்கையிடுவதற்கும் பலத்த முக்கியத்துவம் அளிக்கிறது. அக்காலகட்டத்திலும் அனுமதிக்கப்பட்ட செலவினப் பிரிவுகள், நிதிப் பிரகடனங்கள், செலவு வரம்புகள் மற்றும் தடைகள் (Sanctions) போன்ற நிபந்தனைகளின் ஊடாக வெளிப்படைத்தன்மைக்கு இவ்வாறே முன்னுரிமை அளிக்கப்பட்டிருந்தது. பொறுப்புக்கூறலை வலுப்படுத்துவதற்கான கொள்கை வகுப்பாளர்களின் நோக்கத்தையே இது வெளிப்படுத்துகின்றது. இருப்பினும், இதில் குறிப்பிடத்தக்க சில குறைபாடுகள் இன்னும் நிவர்த்தி செய்யப்படாமல் உள்ளன: சுயாதீனமான ஒரு மேற்பார்வை அமைப்பை நிறுவுதல், சமர்ப்பிக்கப்படும் செலவின அறிக்கைகளை சரிபார்ப்பதற்கான வலுவானதொரு கண்காணிப்பு செயன்முறையை உருவாக்குதல் அல்லது

5.இலங்கை தனது முதலாவது பாராளுமன்றத் தேர்தலை 1947 ஆம் ஆண்டில் நடத்திய போது, தேர்தல் பிரச்சாரச் செலவினங்களை ஒழுங்குபடுத்துவதற்கான நன்கு வரையறுக்கப்பட்ட சட்டங்களின் தொகுப்பு ஏற்கனவே நடைமுறையில் இருந்தது. முக்கியமாக, அக்காலகட்டத்திலும்கூட, ஒட்டுமொத்த அரசியல் நிதி விவகாரங்களை விட, தேர்தல் பிரச்சாரச் செலவினங்களை முறைப்படுத்துவதிலேயே, இலங்கை அதிக கவனம் செலுத்தியது. அதன்படி, ஒரு குறிப்பிட்ட தேர்தல் தொகுதியில் ஒரு வாக்காளருக்காக ஒதுக்கப்படக்கூடிய அதிகபட்ச செலவு வரம்பு சதம் 20 அல்லது முழு பிரச்சாரக் காலப்பகுதிக்கும் ஒரு வேட்பாளருக்கு ரூபாய் 5,000 என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அத்துடன், வேட்பாளரின் பிரதிநிதி ஒருவர் (தேர்தல் பிரச்சார மேலாளர்/முகவர்) 2,000 ரூபாய் வரை செலவிட அனுமதிக்கப்பட்டார். இந்த ஏற்பாடுகள் 1946 ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசகட்டளைச் சட்டத்தின் (Ceylon Order in Council) “தேர்தல் முகவர், தேர்தல் செலவினங்கள் மற்றும் குற்றங்கள்” (Election Agent, Election Expenditure and Offences) என்ற தலைப்புகளின் கீழான பல பிரிவுகளில் விரிவாக வகுத்துரைக்கப்பட்டிருந்தன..

6. தேர்தல் பிரச்சார நிதியை ஒழுங்குபடுத்தும் சட்டங்களைக் கொண்டுவருவதில் தேர்தல் ஆணைக்குழு ஆரம்பத்தில் முன்னின்று செயற்படவில்லை. எனினும், உள்ளூர் தேர்தல் கண்காணிப்புப் பணிக் குழுக்களினதும், சில துறைசார் வல்லுநர்களினதும் அர்ப்பணிப்புமிக்க தொடர் முயற்சிகளின் விளைவாக, திரு. மஹிந்த தேசப்பிரிய அவர்களின் தலைமையின் கீழ் ஆணைக்குழு இப்பாதையில் நகரத் தொடங்கியது. அக் காலகட்டத்தில், ஓர் அரச சார்பற்ற நிறுவனமொன்றின் தலைமையிலான தேர்தல் கண்காணிப்புக் குழுவினால் தயாரிக்கப்பட்ட சட்ட வரைவு ஏற்கனவே தயாராக இருந்தது. அதேவேளையில், “அரசியல் நிதியை ஒழுங்குபடுத்துதல் குறித்த புது டெல்லி பிரகடனத்தில்” கையெழுத்திடுவதற்காக 2015 ஆம் ஆண்டில் மூன்று பிரதிநிதிகள் இந்தியா சென்றிருந்தனர். இந் நிகழ்வு இலங்கையில் அத்தகையதொரு சட்டத்தை உருவாக்குவதற்கான கவனத்தை ஈர்ப்பதில் பாரிய செல்வாக்கைச் செலுத்தியது. இப் பிரதிநிதிகள் குழுவில் இலங்கைத் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரத்னஜீவன் ஹூல், “சண்டே டைம்ஸ்” நாளிதழின் பிரதி ஆசிரியர் திரு. அந்தனி டேவிட் மற்றும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) தேசிய ஒருங்கிணைப்பாளர் திரு. மஞ்சுள கஜநாயக்க ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர். தெற்காசியாவில் அரசியல் நிதி ஒழுங்குமுறைமை குறித்த புது டெல்லி பிரகடனம் பின்னர் 2015 டிசம்பர் 16 அன்று முறைப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனுக்குடன் விவரங்களை வெளிப்படுத்தும் (Real-time disclosure) பொறிமுறைகளைக் கையாளுதல் போன்ற விடயங்கள் குறித்து இச்சட்டம் போதிய கவனம் செலுத்தவில்லை. இனிவரும் காலங்களில் காத்திரமான ஒழுங்குமுறைமைகளை உருவாக்க வேண்டுமாயின், விடுபட்டுள்ள இப்பிரதான காரணிகள் குறித்து தொடர்ச்சியான கலந்துரையாடல்களும் கவனமான பகுப்பாய்வுகளும் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

அதிகக் கவனத்தைப் பெற வேண்டிய மற்றுமொரு கருத்தியல் அணுகுமுறை தொடர்பிலும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டும். இலங்கையின் தற்போதைய சட்ட வரம்பானது, தேர்தல் பிரச்சாரச் செலவுகள் மீது மட்டுமே கூடுதல் கவனம் செலுத்துகின்றது. எனினும், இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள அரசியல் விமர்சகர்கள், ஆய்வாளர்கள் மற்றும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் பெரும்பாலும் பரந்தளவிலான அரசியல் நிதி ஒழுங்குமுறைமை குறித்தே பெரும் ஆர்வம் காட்டுகின்றனர். இதன் காரணமாக, ஒரு பரவலான தவறான விளக்கம் தற்காலத்தில் தோற்றம் பெற்றுள்ளது. இவ் விடயம் குறித்து தற்போதைய சட்டத்தில் நேரடியாகக் குறிப்பிடப்படவில்லை என்றபோதிலும், பல தேர்தல் நிபுணர்களும் எழுத்தாளர்களும் இலங்கையின் தற்போதைய தேர்தல் செலவின ஒழுங்குபடுத்துதல் சட்டத்தை அரசியல் நிதி என்ற அகன்ற பரிமாணத்தில் வைத்தே மதிப்பிட முனைகின்றனர். ஆகவே, காத்திரமான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு முன்பதாக, அரசியல் நிதி ஒழுங்குமுறைக்கும் தேர்தல் பிரச்சாரச் செலவின ஒழுங்குமுறைக்கும் இடையிலுள்ள கோட்பாட்டு மற்றும் நடைமுறை ரீதியான வேறுபாடுகளையும், இலங்கைச் சூழலில் அவற்றின் தனித்தனி பயன்பாடுகளையும் விளங்கிக்கொள்வது ஓர் இன்றியமையாத முதற்படியாகும். இலங்கையில் அரசியல் நிதி ஒழுங்குமுறைமை சார்ந்த கலந்துரையாடல்களில் திறம்பட ஈடுபடுவதற்கு இவ்வித்தியாசத்தை உணர்தல் அவசியமாகும். ஏனெனில், தேர்தல் செலவின ஒழுங்குமுறை என்பது தேர்தல் கால எல்லையை மட்டுமே உள்ளடக்குகின்ற வேளையில், அரசியல் நிதியானது அதற்கு அப்பாற்பட்ட பரந்த அரசியல் பணப் பரிமாற்றங்களை உள்ளடக்கியதாகும்.

தேர்தல் பிரச்சாரச் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் செயன்முறையில் காணப்படும் பிறிதொரு சிறப்பம்சம், சட்டத்தினால் நிறுவப்பட்ட ஒழுங்குமுறை அமைப்பின், பொதுவாக தேர்தல் முகாமைத்துவ அமைப்பின் (Election Management Body-EMB) பங்கு மற்றும் அதிகார வரம்பில் தங்கியுள்ளது. இலங்கையின் அனுபவம் தெளிவாக உணர்த்துவது என்னவெனில், தேர்தல் ஆணைக்குழுவே இதற்கான உத்தியோகபூர்வ ஒழுங்குமுறை அதிகார அமைப்பாகச் செயற்பட்ட போதிலும், அதன் முதன்மைச் சட்டப் பொறுப்பானது, வரவு மற்றும் செலவின அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவ் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறியவர்கள் பற்றி இலங்கைக் காவல்துறைக்கு (பொலிஸாருக்கு) அறிவிப்பதற்கும் மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதாகும். அதுமட்டுமன்றி, வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களின் தேர்தல் நிதிப் பயன்பாடு தொடர்பாக வெளித்தரப்பினரிடமிருந்து முறைப்பாடுகள் வரும்போது, அவற்றை அப்படியே பொலிஸாருக்கு அனுப்பி வைப்பதோடு ஆணைக்குழுவின் பணி பெரும்பாலும் முடிவடைந்து விடுகிறது. இத்தகையதொரு அதிகார அமைப்பிடம் இருக்க வேண்டிய பரந்த ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வைப் பணிகள் பெருமளவில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதையே இது வெளிப்படுத்துகின்றது.

இப்பின்னணியில் நோக்குகையில், காத்திரமான தேர்தல் பிரச்சாரச் செலவுக் கண்காணிப்புப் பொறிமுறையொன்றின் முக்கியத்துவம் மிகத் தெளிவாகப் புலனாகிறது. வரவு மற்றும் செலவினக் கணக்கு வெளிப்படுத்தல்களை ஆழமாகப் பரிசீலிக்கும் சட்டபூர்வ அதிகாரம் இவ் ஒழுங்குமுறை அமைப்பிடம் இல்லாதிருப்பதனாலும், தேர்தல் பிரச்சாரக் காலப்பகுதியில் முழுமையான வெளிப்படைத்தன்மையைப் பேணுவதில் வேட்பாளர்களுக்குச் சில கட்டுப்பாடுகள் காணப்படுவதனாலும், தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளின் உண்மைத்தன்மை குறித்து ஐயப்பாடுகள் தோன்றுவது தவிர்க்க முடியாததாகின்றது. மேலே விவரிக்கப்பட்ட குறைபாடுகள் அனைத்தும் தேர்தல் சட்டங்கள் முழுமையாக அமுல்படுத்தப்படாமல் போவதற்குக் காரணமாக அமைவதுடன், இறுதியில் இவை ஜனநாயக (மக்களாட்சி) நிர்வாகத்தில் காணப்படும் பரந்த சவால்களின் பிரதிபலிப்பாகவே புரிந்துகொள்ளப்பட வேண்டும். கல்விசார் முன்னைய மீளாய்வுகளில் இத்தகைய நிலைமையானது பொதுவாக “ஜனநாயகப் பற்றாக்குறை” (Democratic deficit) எனக் குறிப்பிடப்படுகின்றது.

அரசியல் நிதியை ஒழுங்குபடுத்துவதில் நிறுவனங்களின் பங்கு

இலங்கையின் தேர்தல் பிரச்சார நிதிச் சூழலில் காணப்படும் ஒரு முக்கியப் பிரச்சினை யாதெனில், தேர்தல் ஆணைக்குழு போன்ற நிறுவனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட பங்கினை ஆற்றுவதாகும். தற்போதைய தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டக்கட்டமைப்பின் கீழ் கூட, ஆணைக்குழுவின் கூடுதல் தலையீடும் தீவிர கண்காணிப்பும் அவசியமானதொரு தேவையாகவே நீடிக்கின்றது. ஆயினும், பாரம்பரியமாக ஆணைக்குழுவின் பங்கானது மிகவும் குறுகிய எல்லைக்குள்ளேயே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது: அதாவது செலவின வரம்புகளை நிர்ணயித்தல், பரிந்துரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதல், செலவின அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தாமதமாகச் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளைச் சட்ட அமுலாக்க அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வருதல் அல்லது பாரப்படுத்துதல் போன்றவற்றுடன் அது சுருங்கிவிடுகிறது. நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகளினால் ஆணைக்குழுவின் சட்ட ஆணை (Mandate) வரையறுக்கப்பட்டுள்ளதால், இன்னும் சுயமுனைப்புடன் கூடிய ஒழுங்குமுறை நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் மட்டுப்பாடுகள் நிலவுகின்றன.

ஓர் ஒப்பீடாக, பிற நாடுகளின் சட்டங்களை ஆராயும் போது, இலங்கையின் தற்போதைய சட்டக் கட்டமைப்பானது முறையாக அமுல்படுத்தப்படும் பட்சத்தில், அது ஆட்சிமுறைமை குறித்து குடிமக்களின் எதிர்பார்ப்புகளை உயர்த்துவதற்கும், தேர்தல் போட்டியில் அனைவருக்கும் சமமானதொரு வாய்ப்பை (Level playing field) உருவாக்குவதற்கும் சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளது என்பது புலனாகிறது. குறிப்பாக, கடுமையான பொருளாதார அழுத்தங்கள் நிலவும் தற்போதைய சூழலில் இவ்வேற்பாடுகள் அவசியமானவையாகும். ஆயினும், இச்சட்டத்தின் முழுமையான தாக்கத்தை வெளிக்கொணர்வதாயின், தேர்தல் ஆணைக்குழுவின் நிறுவனசார் ஆற்றல் (Institutional capacity) பலப்படுத்தப்பட வேண்டும். தற்போது, தேர்தல் பிரச்சாரச் செலவின முகாமைத்துவமானது தெளிவாக சீரமைக்கப்படவில்லை. அத்துடன் சட்டபூர்வ அதிகாரம் மற்றும் வளங்கள் ஆகிய இரண்டிலும் காணப்படும் மட்டுப்பாடுகள், முனைப்புடன் கூடிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஆணைக்குழுவின் திறனைக் கட்டுப்படுத்துகின்றன. எனவே, அரசியல் நிதி ஒழுங்குமுறைமையில் அர்த்தமுள்ள முற்போக்கான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு, சட்டவாக்க ஆதரவு, நிறுவனசார் சீர்திருத்தங்கள் மற்றும் மனிதவள மேம்பாடு ஆகியவற்றின் ஊடாக ஆணைக்குழுவை வலுப்படுத்துவது இன்றியமையாததாகும்.

தேர்தல்களுக்கு அப்பாற்பட்ட அரசியல் நிதியளிப்பு

மேற்கூறியவற்றைக் கருத்திற்கொள்ளும் போது, அரசியல் நிதியின் மிக முக்கியமான, அதேநேரம் பெரும்பாலும் கவனிக்கப்படாமல் விடுபடுகின்ற ஓர் அம்சம் அரசியல் கட்சிகளின் நிதிகள் மற்றும் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதாகும் என்பது தெளிவாகிறது. தேர்தல் ஆணைக்குழுவானது முதன்மையாகத் தேர்தல் காலப்பகுதியில் பிரச்சாரச் செலவினங்களை ஒழுங்குபடுத்துவதில் மட்டுமே கவனம் செலுத்துகின்ற வேளையில், டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) போன்ற அமைப்புகள் இன்னும் பரந்தளவிலான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையின் அவசியத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இதற்குரிய ஒரு பிரதான சான்றாக, திறந்த அரசாங்க பங்குடமையின் (Open Government Partnership) தேசிய செயற்திட்டத்தில் (2017-2018) இலங்கை உள்வாங்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். பிரச்சாரங்களுக்காகப் பெறப்படும் நிதியுதவிகளின் தொகையையும் அவற்றின் மூலங்களையும் பகிரங்கப்படுத்தும் பொதுப் பதிவேடொன்றை நிறுவுவதற்கேற்பத் தேர்தல் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அத்திட்டம் பரிந்துரைத்திருந்தது. இவ்வேற்பாட்டின் கீழ், உரிய பொறுப்புகள் தேர்தல் ஆணைக்குழுவிடமும், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிடமும் (CIABOC) ஒப்படைக்கப்பட்ட அதேவேளை, டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் ஒரு துணை நிறுவனமாக அதன் பங்களிப்பை வழங்கியிருந்தது.

2016 ஆம் ஆண்டு தொட்டு முன்னெடுக்கப்பட்ட கொள்கைசார் அழுத்தங்களின் விளைவாக, இலங்கைப் பாராளுமன்றம் புதிய தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தை முறைப்படி நிறைவேற்றியது. இருப்பினும், தேர்தல் காலப்பகுதிக்கு அப்பாற்பட்டு அரசியல் கட்சிகளுக்குக் கிடைக்கும் நிதி ஆதாரங்களைக் கண்டறியும் முழுமையானதொரு கட்டமைப்பு உட்பட, அரசியல் நிதியினை தொடர்ச்சியாக கண்காணிப்பதற்கான வலுவான பொறிமுறையொன்று இன்னும் நாட்டில் உருவாக்கப்படவில்லை.

நடைமுறைப்படுத்தலின் மூலம் கற்றுக் கொண்ட பாடங்கள்

2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து, தேர்தல் ஆணைக்குழுவானது இச்சட்டத்தை இதுவரை நான்கு வெவ்வேறு தேர்தல்களில் நடைமுறைப்படுத்தியுள்ளது. இது பெறுமதிமிக்க பல நடைமுறைசார் புரிதல்களை வழங்கியுள்ளது. இருப்பினும், இச்சட்டம் எந்தளவுக்குக் கடைபிடிக்கப்பட்டுள்ளது (Compliance) என்பது பற்றிய முறையான மதிப்பீடுகள் இன்னும் குறைவாகவே உள்ளன.

இலங்கைத் தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து இலகுவாகப் பெறக்கூடிய தகவல்கள் பெரும்பாலும் அடிப்படைப் புள்ளிவிவரத் தரவுகளாகவே உள்ளன. உதாரணமாக, செலவின அறிக்கைகளைச் சமர்ப்பித்த மற்றும் சமர்ப்பிக்கத் தவறிய வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் எண்ணிக்கை போன்ற விவரங்களையே அவை கொண்டுள்ளன. அத்துடன், ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கப்படும் சட்ட ரீதியான நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து ஆணைக்குழு அவ்வப்போது பொதுமக்களை அறியப்படுத்துகின்றது. இதைத் தவிர்த்து, விரிவான விவரங்களை எதிர்பார்க்கும் வாக்காளர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (Right to Information) கீழான விண்ணப்பங்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. இத்தகைய விண்ணப்பங்களுக்குப் பதிலளிக்க பொதுவாக 14 நாட்களுக்கு மேலாவதோடு, அவை பெரும்பாலும் முழுமையான அல்லது தெளிவான பதில்களை வழங்கத் தவறிவிடக்கூடும்.

விரிவான விவரங்களைச் சுயமுனைப்புடன் வழங்க வேண்டும் என்ற சட்டபூர்வக் கடப்பாடு எதுவும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இல்லாததன் காரணமாக, தேர்தலில் போட்டியிடுபவர்களின் பிரச்சாரச் செலவினச் செயற்பாடுகள் பற்றிய முழுமையான விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. இத்தகைய வெளிப்படைத்தன்மை இல்லாமையானது, பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதையும் அரசியல் மேற்பார்வையை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட இச்சட்டத்தின் உன்னத நோக்கத்தையே (Spirit of the law) சிதைக்கின்றது.

இன்னமும் விடைதெரியாது நீடிக்கும் பிரதான வினாக்கள் சில பின்வருமாறு:

1. அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் (சுயேச்சைக் குழுக்கள் உட்பட) உண்மையில் எவ்வளவு தொகையைப் பிரச்சாரங்களுக்காகச் செலவிட்டார்கள்?
2. வெவ்வேறு வகையான பிரச்சார நடவடிக்கைகளுக்காக எவ்வளவுத் தொகை நிதிப்பங்கீடுகள் மேற்கொள்ளப்பட்டன?
3. பொருள்சார் நன்கொடைகளாகவும் (In-kind donations) சேவைகளாகவும் பெற்றுக்கொள்ளப்பட்டவற்றின் உண்மையான அளவு என்ன?
4. இப்பிரச்சாரங்களுக்கான நிதி மூலங்களும் பங்களிப்புகளும் எங்கிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன?

இவ்வினாக்களுக்குச் சரியான முறையில் விடையளிப்பதாயின், செலவின அறிக்கைகள் முறையான அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு ஒழுங்கமைக்கப்பட வேண்டும். தற்போது, இத்தகவல்கள் மாவட்ட ரீதியிலான தேர்தல் காரியாலயங்களில் ஆவணமாக சேமிக்கப்பட்டு, தேர்தல் ஆணைக்குழுவின் தலைமையகத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், பொதுமக்கள் பார்வைக்காக ஒதுக்கப்படும் பத்து நாட்கள் கொண்ட உத்தியோகபூர்வ காலப்பகுதி கடந்த பின்னர், இவ் ஆவணங்களை இலகுவில் அணுக முடியாததால், வெளிப்படைத்தன்மையும் பொதுமக்களின் கண்காணிப்பும் பெருமளவு கட்டுப்படுத்தப்படுகின்றன.

உலகளாவிய ஒப்பீடுகளும் தேசிய அளவிலான குறைபாடுகளும்/இடைவெளிகளும்

பல நாடுகள் தேர்தல் பிரச்சார நிதிசார் வெளிப்படைத்தன்மை தொடர்பான சவால்களை நிகழ்நேர டிஜிட்டல் வெளிப்படுத்தல் தளங்களின் (Real-time digital disclosure platforms) ஊடாகக் கையாளுகின்றன. உதாரணமாக, அமெரிக்காவில் மத்திய தேர்தல் ஆணைக்குழுவானது (Federal Election Commission) தேர்தல் பிரச்சார நிதியளிப்பு தொடர்பான தகவல்களைத் தொடர்ச்சியாகப் புதுப்பித்து வழங்கி வருகின்றது. அதேவேளை OpenSecrets.org போன்ற சிவில் சமூகத் தளங்கள் இத்தரவுகளைப் பொதுமக்கள் இலகுவாக அணுகக்கூடியதாக மாற்றியுள்ளன.

இதற்கு நேர்மாறாக, பிரச்சாரச் செலவினங்களை ஒழுங்குபடுத்துவதற்கான காத்திரமான சட்டத்தை இலங்கை கொண்டுள்ள போதிலும், அதற்கிணையான ஒரு பொது வெளிப்படுத்தல் முறைமை (Public disclosure system) இன்னும் இங்கு உருவாக்கப்படவில்லை. மேலும் பரந்தளவில் நோக்குகையில், தெற்காசியப் பிராந்திய வலயமானது ஒட்டுமொத்தமாகத் தேர்தல் காலப்பகுதியில் டிஜிட்டல் வெளிப்படைத்தன்மையை நடைமுறைப்படுத்துவதில் மிகக் குறைந்தளவிலான முன்னேற்றத்தையே எட்டியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இப் பின்னணியில், கடந்த நான்கு தேர்தல்களிலிருந்து பெறப்பட்ட பெறுமதிமிக்க நடைமுறை அனுபவங்களைச் சாதகமாகப் பயன்படுத்துவதன் மூலம், இத்துறையில் இன்னும் வெகுவாக முன்னோக்கி நகர்வதற்கான அரியதொரு வாய்ப்பு தற்போது இலங்கைக்குக் கிடைத்துள்ளது.

தற்போது நிலவும் இக்குறைபாடுகளைச் சிவில் சமூக நிறுவனங்கள் ஓரளவிற்குச் சரிசெய்துள்ளன. விசேடமாக, கடந்த கால ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்களின் போது, தேர்தல் கண்காணிப்பு குழுக்களும் சிவில் சமூக அமைப்புகளும் ஒன்றிணைந்து தேர்தல் பிரச்சாரச் செலவு தொடர்பிலான விவரங்களை வெளிப்படுத்தும் “தேர்தல் செலவு மீட்டர்” (Campaign Finance Meter) எனும் இணையவழிக் கருவியொன்றை அறிமுகப்படுத்தின. இம்முயற்சியில் தேர்தல் ஆணைக்குழு நேரடியாக ஈடுபடாத போதிலும், அதற்கான தனது ஆதரவையும் அங்கீகாரத்தையும் வழங்கியிருந்தது. வாக்காளர்கள் தெளிவான தெரிவுகளை மேற்கொள்வதை உறுதிப்படுத்தும் பொருட்டு, முழு தேர்தல் காலப்பகுதியிலும் மேற்கொள்ளப்படும் பிரச்சார நிதியுதவிகள் மற்றும் பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பான வகைப்படுத்தப்பட்ட விவரங்கள் அவ் வாக்காளர்களுக்கு வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். இவ்வாறான முழுமையான தகவல்களின் துணையுடன் மாத்திரமே வாக்காளர்கள் தெளிவான புரிதலுடன் வாக்குச் சாவடிகளுக்குச் செல்ல முடியும்.

இந்த அனுபவங்களின் அடிப்படையில், டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா அமைப்பானது, முறையான ஆய்வு மற்றும் பொது அறிக்கையிடல் செயற்பாடுகளின் ஊடாகத் தேர்தல் நிதியளிப்பு பற்றிய ஒரு முழுமையான பார்வையை உருவாக்குவதற்கான சுயாதீன முயற்சியொன்றை முன்னெடுத்து வருகின்றது. இந்த முன்முயற்சியானது, வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதையும், பொறுப்புக்கூறலை வலுப்படுத்துவதையும், தேர்தல் நிதி தொடர்பான தகவல்களைப் பொதுமக்கள் எளிதாக அணுகுவதை உறுதிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.[7]

வெளிப்படைத்தன்மையுடனான கலாசாரத்தை நோக்கிய நகர்வு

இலங்கையின் வரலாற்றில் முதன்முறையாக, தேர்தல் பிரச்சார நிதி குறித்து இத்தகையதொரு முறையான ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இங்கு முன்வைக்கப்பட்டுள்ள முடிவுகளும் முன்மொழிவுகளும் வெறும் தொழில்நுட்ப பயிற்சிகள் (Technical exercises) அல்ல. மாறாக, அவை ஒரு காத்திரமான செயற்பாட்டுக்கான அறைகூவலாகும். செயற்திறன் மிக்க, வெளிப்படையான மற்றும் நடைமுறைப்படுத்தக்கூடிய தேர்தல் பிரச்சார நிதிச் சட்டக் கட்டமைப்பொன்றை உருவாக்குவதென்பது ஒரு கூட்டுப் பொறுப்பாகும். அதற்கு வலுவான நிறுவனங்களும், சிவில் சமூகத்தின் அதிக பங்களிப்பும், தகுந்த தகவலறிந்த குடிமக்களும் இன்றியமையாதவர்களாவர். அவ்வாறானதொரு சூழலில் தான், இலங்கையினால் இன்னும் பொறுப்புடைமை மிக்கதொரு அரசியல் கலாசாரத்தையும், நியாயமானதொரு தேர்தல் செயன்முறையையும் நோக்கி நகர முடியும்.

ஆய்வு முறைமை

இவ் ஆய்வானது, தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்ட விதிமுறைகளுக்கு இணங்க, அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்களினால் இலங்கைத் தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் செலவின அறிக்கைகளை முறைப்படி பரிசீலிக்கின்றது. இவ் அறிக்கைகள் யாவும், விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் வெளியிடப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட படிவங்களுக்கு அமைவாக, சட்டத்தினால் வரையறுக்கப்பட்ட கால எல்லைகளுக்குள் சமர்ப்பிக்கப்பட்டவையாகும்.

7..இலங்கையில் தேர்தல் பிரச்சாரச் செலவினங்களைக் கண்காணிப்பதென்பது மிகவும் அரிதான ஒரு நடைமுறையாகவே இருந்துவந்துள்ளது. 2019 ஆம் ஆண்டுக்கு முன்னர், இலங்கையின் தேர்தல் வரலாற்றில் எந்தவொரு அரச நிறுவனமோ அல்லது சிவில் சமூக அமைப்போ இத்தகைய கண்காணிப்பை மேற்கொண்டிருக்கவில்லை. தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம், தேர்தல் பிரச்சார நிதியை நிர்வகிப்பதற்கான சட்டபூர்வ மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்பு எதுவும் இல்லாத நிலையிலும், முறையே 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களின் போது இக்கண்காணிப்புச் செயல்முறையை முதன்முதலாக ஆரம்பித்திருந்தது. இம்முன்முயற்சிகளின் ஊடாகத் தயாரிக்கப்பட்ட விரிவான அறிக்கைகளை கீழ்வரும் இணைய முகவரிகளின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.
அ . http://bit.ly/4hmx8jK
ஆ. https://bit.ly/3TdubIi

இவ்வாய்வானது, 2024 செப்டம்பர் 21 அன்று நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2024 நவம்பர் 14 அன்று நடத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் ஆகிய இரு தேசியத் தேர்தல்களிலிருந்து பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டது. இதன்போது மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட செலவின அறிக்கைகளின் புள்ளிவிவர எல்லை பின்வருமாறு சுருக்கமாகக் காட்டப்பட்டுள்ளது:

ஜனாதிபதித் தேர்தல் 2024

- கோரப்பட்ட மொத்த அறிக்கைகள்: 76 (ஆரம்பத்தில் இது 78 ஆகக் காணப்பட்டது. வேட்பாளர் மற்றும் வேட்பாளரின் அரசியல் கட்சி ஆகிய இரு தரப்பினரும் தனித்தனியான செலவின அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், பிரச்சாரக் காலத்தில் வேட்பாளர் ஒருவர் மரணித்ததால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மொத்த அறிக்கைகளின் எண்ணிக்கை இரண்டினால் குறைவடைந்துள்ளது)
- கிடைக்கப்பெற்ற அறிக்கைகள்: 63
- சமர்ப்பிக்கப்படாத அறிக்கைகள்: 13

பாராளுமன்றத் தேர்தல் 2024

- கோரப்பட்ட மொத்த அறிக்கைகள்: 9,578 (மாவட்ட மட்ட வேட்பாளர்கள், கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள் மற்றும் தேசியப் பட்டியல் வேட்பாளர்கள்)
- கிடைக்கப்பெற்ற அறிக்கைகள்: 8,339
- சமர்ப்பிக்கப்படாத அறிக்கைகள்: 1,239

வகைப்பாடு

- மாவட்ட மட்ட வேட்பாளர்கள்: 7,412 அறிக்கைகள்
- அரசியல் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள்: 493 அறிக்கைகள்
- தேசியப் பட்டியல் வேட்பாளர்கள்: 434 அறிக்கைகள்

இவ் ஆய்வில் பகுப்பாய்வு செய்யப்பட்ட மொத்த அறிக்கைகளின் எண்ணிக்கை: 8,402 (இரண்டு தேர்தல்களையும் உள்ளடக்கியது).[8]

இதற்காக இரண்டு முதன்மை ஆய்வுமுறைமை அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டன:

1. ஆவணப் பகுப்பாய்வு (Document Analysis): தேர்தல் பிரச்சாரக் காலப்பகுதிகளில் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ சுற்றறிக்கைகள், வர்த்தமானி அறிவித்தல்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை விரிவாக மீளாய்வு செய்தல்.
2. ஒப்பீட்டு மீளாய்வு (Comparative Review): சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து செலவின அறிக்கைகளையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டு, அவற்றுக்கிடையிலான தொடர்புகளை முறையாகப் பரிசீலித்தல்.

தரவு சேகரிப்பு, மீளாய்வு மற்றும் பகுப்பாய்வு உள்ளடங்கிய ஒட்டுமொத்த செயன்முறையும் மூன்று மாத காலத்திற்குள் மேற்கொள்ளப்பட்டது.

இவ் ஆய்வின் செயற்பாட்டுப் படிமுறைகள் வருமாறு:

படிமுறை 01: தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து உத்தியோகபூர்வ அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல்.

படிமுறை 02: ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் அறிக்கைகளையும், பாராளுமன்றத் தேர்தலுக்கான

8. உரிய தரப்பினரால் தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட செலவின அறிக்கைகளில் சில, எவ்வித விவரப் பதிவுகளும் இன்றி முழுமையற்ற வடிவிலேயே காணப்பட்டன. இது ஆவணங்களை சமர்ப்பித்தவர்களின் தரப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் குறைபாடுகள் அல்லது கவனக்குறைவின் காரணமாக நிகழ்ந்திருக்கலாம். எனவே, இவ்வாறான அறிக்கைகள் யாவும் இந்த மீளாய்வுச் செயல்முறையிலிருந்து முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளன.

மாவட்ட மட்ட அறிக்கைகளையும் மீளாய்வு செய்தல்.

படிமுறை 03: பகுப்பாய்வின் போது குறிப்பிட்ட பிரிவுகளுக்கு முன்னுரிமை அளித்தல். அவை வருமாறு:

I. ஒவ்வொரு வேட்பாளராலும் பிரகடனப்படுத்தப்பட்ட அதிகபட்ச செலவினங்களைக் கண்டறிதல் மற்றும் அவை ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட செலவின உச்சவரம்பை (Expenditure ceiling) மீறியுள்ளனவா எனச் சரிபார்த்தல்.

II. அறிக்கைகள் முறையான அடிப்படையில் தயாரிக்கப்பட்டு, உத்தியோகபூர்வ வழிகாட்டல்களுக்கு இணங்க சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா என மதிப்பிடுதல்.

III. வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட பங்களிப்புகள் (Contributions) மற்றும் சேவைகள் உள்ளடங்கலாக, அவர்களுக்கு நிதி கிடைக்கப்பெற்ற மூலங்களை ஆராய்தல்.

IV. அமைச்சர்கள் மற்றும் சபாநாயகர் உள்ளடங்கலாக 225 பாராளுமன்ற உறுப்பினர்களினதும் செலவினங்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற பங்களிப்புகள் சார்ந்த விபரங்களை மீளாய்வு செய்தல்.

- பாராளுமன்றத் தேர்தல்களின் போது பெண் வேட்பாளர்கள் மேற்கொண்ட பிரச்சார நடைமுறைகளை ஆராய்ந்து வகைப்படுத்துதல். இதன்போது, அவர்களது பிரகடனப்படுத்தப்பட்ட வருமான வழிகள் மற்றும் அறிக்கையில் குறிப்பிட்ட செலவினங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.
- அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் செலவின போக்கினை பகுப்பாய்வு செய்யும் பொருட்டு, அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட செலவின அறிக்கைகளை மீளாய்வு செய்தல். இப்பகுப்பாய்வானது பாராளுமன்றத் தேர்தலுக்காகத் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச செலவின சதவீதத்தின் அடிப்படையில் (Percentage of maximum spending) மேற்கொள்ளப்பட்டது.

வரையறைகள் மற்றும் சவால்கள்

தேர்தல் செலவினச் சட்டத்தின் அறிமுகமானது, முன்னெப்போதையும் விட பெருமளவிலான தரவுகளையும் அதனுடன் இணைந்த மூலாவணங்களையும் முகாமை செய்ய வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. இதன் விளைவாக, இந்த பெருந்தரவுகளைப் (Big data) பதிவேற்றுவதற்கும் பேணுவதற்கும் பொருத்தமான டிஜிட்டல் தீர்வுகளைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் இலங்கைத் தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஏற்பட்டது. இதற்கு முன்னர், பாரிய தரவுத் தொகுதிகளைக் கையாள்வதில் தேர்தல் ஆணைக்குழுவிற்கிருந்த அனுபவமானது, முக்கியமாக நூற்றுக்கணக்கான முறைப்பாடுகளை நிர்வகிக்க வேண்டியிருந்த “தேர்தல் பிணக்கு தீர்த்தல்” (EDR- Election Dispute Resolution) செயன்முறையுடன் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்பட்டது.

இப்புதிய முறைமையின் கீழ், நேரில் வந்து ஒப்படைத்தல் (In-person delivery) மற்றும் மின்னஞ்சல் உட்பட பல சமர்ப்பிப்பு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்துடன், தேர்தல் ஆணைக்குழுவின் இணையதளத்தில் பதிவேற்றப்பட்ட நிழற்பட (ஸ்கேன் செய்யப்பட்ட) பிரதிகள் மூலமாகவும், உரிய வேண்டுகோளின் பேரில் நாடளாவிய ரீதியில் உள்ள 25 மாவட்டச் செயலகக் காரியாலயங்களில் காட்சிப்படுத்தப்பட்ட மூலப் பிரதிகள் மூலமாகவும், இச்செலவின அறிக்கைகளைப் பொதுமக்கள் பத்து நாட்களுக்குப் பார்வையிடுவதற்கான வாய்ப்பினை ஆணைக்குழு ஏற்படுத்திக்கொடுத்தது.

இத்தகைய முன்னேற்றங்களுக்கு மத்தியிலும் பல சவால்கள் எழுந்தன:

1. நியமப்படுத்தல்/தரப்படுத்தல் இன்மை: பல அறிக்கைகள் நிர்ணயிக்கப்பட்ட நியமப் படிவங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

2. தரவுகளின் தரம் சார்ந்த சிக்கல்கள்: அறிக்கைகளில் பல சமயங்களில் முழுமையற்ற அல்லது தெளிவற்ற பதிவுகள், கவனக்குறைவான தரவு உள்ளீடுகள் மற்றும் தொடர்ச்சியான பிழைகள் காணப்பட்டன.

3. தகவல் விடுபடல்: அத்தியாவசியமான விபரங்கள், குறிப்பாக நிதி மூலங்கள் தொடர்பான விபரங்கள் பல அறிக்கைகளில் இடம்பெற்றிருக்கவில்லை.

4. பகுப்பாய்வின் வரையறைகள்: இவ் வரையறைகள் முறையான
5. பகுப்பாய்வை மேற்கொள்வதைத் தடுத்தன. விசேடமாக, நிதி மூலங்களை அடையாளம் காண்பதிலும் செலவினங்களை வகைப்படுத்துவதிலும் பெரும் தடைகளாக அமைந்தன.

இதன் காரணமாக, அதிகளவிலான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், தரவுகளின் ஒட்டுமொத்தத் தரமும் நம்பகத்தன்மையும் சீரற்றதாகவே காணப்பட்டன. வேட்பாளர்கள், சுயேச்சைக் குழுக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஆகிய தரப்பினர் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட நியமப் படிவங்களையும் நிபந்தனைகளையும், அத்துடன் இலங்கைத் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளையும் மிகவும் துல்லியமாகப் பின்பற்றியிருந்தால், இத்தகைய குறைபாடுகளைப் பெருமளவில் குறைத்திருக்கலாம் என்பது திண்ணம்.

ஜனாதிபதித் தேர்தலின் வரவு மற்றும் செலவின அறிக்கைகள் பற்றிய பகுப்பாய்வும் அவதானிப்பும்

பொதுப்படையாக நோக்குகையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சார்பில் நியமிக்கப்பட்ட வேட்பாளர்களும் சுயேச்சை வேட்பாளர்களும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வரவு மற்றும் செலவின அறிக்கைகளை சமர்ப்பிப்பதில் ஒப்பீட்டளவில் அதிகப் பதிலளிப்பு வீதத்தை (Response rate) வெளிப்படுத்தியுள்ளனர் என்பது புலனாகிறது. எதிர்பார்க்கப்பட்ட 76 அறிக்கைகளில் 63 அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இது 82.9% அறிக்கைச் சமர்ப்பிப்பு வீதத்தைக் குறிக்கிறது. அதற்கமைய, 17.1% அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

வேட்பாளர்கள் தங்களின் வரவு செலவு விவரங்களை பிரகடனப்படுத்துவதைக் கட்டாயப்படுத்தும் புதிய சட்ட ஏற்பாடுகளின் கீழ் நடத்தப்பட்ட முதலாவது தேர்தல் இதுவென்ற வகையில், இப் பெறுபேறு விசேட கவனத்தை பெறுகின்றது. குறிப்பிட்ட சில வேட்பாளர்கள் எவ்வித பிரச்சார நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை என்பதுடன், மற்றும் சிலர் மிகக் குறைந்தளவிலான பிரச்சாரங்களையே மேற்கொண்டனர் என்பதும் உற்றுநோக்கத்தக்கது.[9] இவ்வாறானதொரு பின்னணியில், அதிக பெரும்பான்மையான செலவின அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையானது, வெளிப்படைத்தன்மையை நோக்கி எடுத்து வைக்கப்பட்டுள்ள ஒரு சாதகமான நகர்வாகும்.

இங்கு மேலதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு முக்கிய விடயம் என்னவென்றால், அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறிய மூன்று வேட்பாளர்கள் குறித்தும், அரசியல் கட்சிகள் மற்றும் வாக்காளர்கள் மூலம் பரிந்துரைக்கப்பட்ட 13 வேட்பாளர்கள் குறித்தும் தேர்தல் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இலங்கை பொலிஸார் வழங்கிய பதிலாகும். இத்தகைய இணங்காமை (Non-compliance) அல்லது சட்டமீறல்களைக் கையாள்வதற்கான சட்டப்பொறிமுறைகள் உரிய சட்ட ஏற்பாடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனவே, இது குறித்து முன்னெடுக்கப்படும் தொடர் சட்ட நடவடிக்கைகள், இவ் ஒழுங்குவிதிகள் எவ்வளவு தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதை வெளிப்படுத்தும் ஒரு பிரதான குறிகாட்டியாக அமையும்.

9 3 ஜனாதிபதி வேட்பாளர்கள் “அநேகமாக காணாமல் போயுள்ளனர்“, 24 பேர் இன்னும் களத்தில் செயற்படவில்லை: பொறுப்புக்கூறல் குறித்து தேர்தல் கண்காணிப்பகம் கேள்வி.

பிரதான முடிவுகள் மற்றும் முக்கிய அவதானிப்புகள்

இவ் அத்தியாயத்தின் தொடர்ச்சியானது பிரதான முடிவுகளின் அட்டவணைப்படுத்தப்பட்ட சுருக்கங்களை வழங்குவதுடன், அதன் பின்னிணைப்பாக அவதானிப்புகள் குறித்த விளக்கப் பகுப்பாய்வு முன்வைக்கப்படுகிறது.

அட்டவணை 01 - ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களின் செலவின அறிக்கைகள்

வேட்பாளரின் பெயர்	வேட்பாளரின் செலவுத் தொகை	வேட்புமனுத் தாக்கல் செய்த நபர் / கட்சியின் பெயர்	கட்சி / வேட்புமனுத் தாக்கல் செய்த நபரின் செலவுத் தொகை	மொத்தத் தொகை
அக்மீமன தயாரதன தேரர்	265,200	தெல்கந்துர ஆராச்சிலாகே சஞ்சீவ குமார குணரத்ன	செலவினங்கள் இல்லை	265,200
அபுபக்கர் முஹம்மது இன்பாஸ்	1,550,000	ஜனநாயக ஐக்கிய கூட்டணி	அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை	1,550,000
சிறிபால அமரசிங்க	செலவினங்கள் இல்லை	மைலன் ஆச்சிகே டான் அசங்க நந்தன ஸ்ரீ நாத்	75,000	75,000
கே.கே. பியதாச	175,000	அர்ச்சன ரணதுங்க	அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை	175,000
சரத் கீர்த்திரத்ன	அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை	தேசிய அபிவிருத்தி முன்னணி	அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை	அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை
கே.ஏ. குலரத்ன	500,000	டபிள்யூ.பி. ரத்நாயக்க	50,000	550,000
கே.ஆர். கிரிஷான்	செலவினங்கள் இல்லை	அருணலு ஜனதா பெரமுன	2,553,858.53	2,553,858.53
பள்ளிமுல்ல கபுகமகே அனுர சிட்னி ஜயரத்ன	1,000,000	எம்.எம்.ஜி. நந்திக பிரதீப் குமார	100,000	1,100,000
திலித் சுசந்த ஜயவீர	324,643,246.05	இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி	செலவினங்கள் இல்லை	324,643,246.05
சிறிதுங்க ஜயசூரிய	806,200	ஐக்கிய சோசலிச கட்சி	549,800	1,356,000
மயில்வாகனம் திலகராஜா	1,092,530	ஏ. பிரான்சிஸ்	செலவினங்கள் இல்லை	1,092,530
அகம்பொடிகே பிரசங்க சுரஞ்சீவ அனோஜ் த சில்வா	3,698,800	ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி	அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை	3,698,800
லலித் த சில்வா	1,647,250.50	ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி	50,000	1,697,250.50
அஜந்த த சொய்சா	3,886,500	ருஹுணு ஜனதா பெரமுன	3,886,500 (அதே ஆவணம்)	3,886,500
அநுர குமார திஸாநாயக்க	செலவினங்கள் இல்லை	தேசிய மக்கள் சக்தி	527,999,889.38	527,999,889.38
மஹிந்த தேவகே	செலவினங்கள் இல்லை	இலங்கை சோசலிச கட்சி	513,780	513,780
அரியநேந்திரன் பாக்கியசெல்வம்	அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை	தவச்செல்வம் சித்பரன்	அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை	பொருந்தாது
பியன்விலகே ஆண்டனி விக்டர் பெரேரா	1,300,000	எச்.எம். அசித பண்டார	அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை	1,300,000
அனுருந்த பொல்கம்பொல	92,500	ஆனந்த சுனில் சாந்த பெர்னாண்டோ	114,500	207,000
சஜித் பிரேமதாச	936,258,524.60	ஐக்கிய மக்கள் சக்தி	194,087,715.04	1,130,346,240

சரத் பொன்சேகா	33,588,901.72	சமீர தினேஷ் கலேஆரச்சி	செலவினங்கள் இல்லை	33,588,901.72
திஸாநாயக்க முதியான்சேலாகே பண்டாரநாயக்க	327,500	தீகல்ல முதியான்சேலாகே தனஞ்சய பண்டார தீகல்ல	50,000	377,500
சரத் பண்டாரநாயக்க	357,499	தேசிய அபிவிருத்தி முன்னணி	செலவினங்கள் இல்லை	357,499
பத்தரமுல்லே சீலாரதன தேரர்	அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை	செயலாளர், ஜனசெத பெரமுன	அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை	பொருந்தாது
நுவன் போபகே	50,000	மக்கள் போராட்ட முன்னணி	10,830,699	10,880,699
சரத் மனமேந்திர	செலவினங்கள் இல்லை	நவ சிஹல உருமய (NSU)	செலவினங்கள் இல்லை	பொருந்தாது
பேமசிறி மானகே	2,000,000	ஹபராதுவ நாணயக்கார கந்தம்பிகே கசுன் கயஷான்	50,000	2,050,000
அனுருந்த ரோஷன் ரணசிங்க	2,722,000	சரத் நந்த சில்வா	2,722,000 (அதே ஆவணங்கள்)	2,722,000
ஜனக ரத்நாயக்க	24,876,899	எக்சத் லங்கா பொதுஜன பக்ஷய	அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை	24,876,899
நாமல் ராஜபக்ஷ	406,566	சமபிம கட்சி	அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை	406,566
லக்ஷ்மன் நாமல் ராஜபக்ஷ	செலவினங்கள் இல்லை	ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன	388,393,085	388,393,085
விஜயதாச ராஜபக்ஷ	60,445,320	தேசிய ஜனநாயக முன்னணி	செலவினங்கள் இல்லை	60,445,320
ஏ.எஸ்.பி. லியனகே	செலவினங்கள் இல்லை	இலங்கை தொழிலாளர் கட்சி	செலவினங்கள் இல்லை	பொருந்தாது
ஜல்தொட்டகே டொன் கீர்த்தி விக்கிரமரத்ன	13,590,158	அபே ஜனபல கட்சி	செலவினங்கள் இல்லை	13,590,158
பிரியந்த விக்ரமசிங்க	208,990	நவ சமசமாஜ கட்சி	208,990 (அதே ஆவணங்கள்)	208,990
ரணில் விக்ரமசிங்க	990,327,687.16	சன்ன லலின் விக்கிரமசிங்க	அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை	990,327,687.16
பாணி விஜேசிரிவர்தன	189,884	சமாஜவாதி சமனத கட்சி	556,326	746,210
ஓஷல ஹேரத்	212,283	புதிய சுதந்திர முன்னணி	280,100	492,383

தேர்தல் சூழலும் தேர்தல் பிரச்சார சூழலமைவும்

வேட்பாளர்களால் முன்னெடுக்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரமானது ஒரு கடுமையான போட்டியைக் கொண்டதாக அமைந்திருந்ததுடன், தேர்தலின் ஒட்டுமொத்த போக்கையும் மாற்றியமைத்த பல புதிய அம்சங்களால் அது மேலும் தீவிரமடைந்தது. இந்தத் தீவிரத்தன்மை வேட்பாளர்கள் மத்தியில் மட்டுமன்றி, வாக்காளர்கள் மத்தியிலும் பரவலாக உணரப்பட்டது. இத்தகைய ஈடுபாட்டிற்கு முதன்மைக் காரணியாக விளங்கியது, தேர்தல் முடிவுகளை நிர்ணயிப்பதில் இரண்டாம் விருப்பு வாக்குகள் ஒரு தீர்மானமிக்க செல்வாக்கைச் செலுத்தும் என்ற பரவலான எதிர்பார்ப்பாகும். இது இலங்கை ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் முன்னெப்போதும் நிகழ்ந்திராததொரு புதிய திருப்புமுனையாகும்.

வாக்காளர்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க ஈடுபாட்டை ஏற்படுத்திய பிறிதொரு காரணியாக இத்தேர்தல் நடத்தப்பட்ட காலப்பகுதி விளங்குகின்றது. 2024 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், மிக அண்மைய தேர்தல் 2020 ஆம் ஆண்டிலேயே நடத்தப்பட்டிருந்தது. இந்த நீண்ட இடைவெளியானது வாக்காளர்களின் ஆர்வம் மற்றும் அவர்களின் பங்களிப்பு அதிகரிப்பதற்குக் காரணியாக அமைந்தது. மேலும், 2024 ஜனாதிபதித்

தேர்தலானது, 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டம் உட்பட புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பல சட்ட ஏற்பாடுகளின் கீழ் நடத்தப்பட்டது.[10]

1977 ஆம் ஆண்டிற்குப் பின்னர், ஏதேனும் ஒரு வடிவிலான தேர்தல் பிரச்சாரச் செலவினக் கண்காணிப்பு முறைமையொன்று (Campaign expenditure monitoring system) நடைமுறைப்படுத்தப்பட்ட முதலாவது சந்தர்ப்பமாக இத்தேர்தல் அமைந்தமை இதன் தனித்துவமான அம்சங்களில் ஒன்றாகும். இதன் விளைவாக, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த ஒழுங்குவிதிப் பொறிமுறைக்கு ஜனாதிபதி வேட்பாளர்களும் அவர்களின் அரசியல் கட்சிகளும் எவ்வாறு பதிலளிக்கின்றனர் என்பதை அவதானிப்பதில் பொதுமக்களிடையே குறிப்பிடத்தக்க ஆர்வமும் ஊக்கமும் காணப்பட்டது.

மேற்குறிப்பிட்ட அட்டவணையின் உள்ளடக்கங்களை மீளாய்வு செய்வதற்கு முன்னர், ஒரு முக்கியமான அவதானிப்பைக் குறிப்பிடுவது அவசியமாகும். தேர்தல் பிரச்சாரச் செலவின அறிக்கைகள் பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடியதாக உள்ள ஒரேயொரு தளம் இதுமட்டுமேயாகும். ஜனாதிபதி வேட்பாளர்களோ, அவர்களது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளோ அல்லது அவர்களுக்காக வேட்புமனுத் தாக்கல் செய்த வாக்காளர்களோ தங்கள் கட்சியின் தொடர்பு ஊடகங்கள் அல்லது ஊடகச் செயற்பாடுகள் உட்பட வேறு எந்தவொரு தளத்தின் ஊடாகவும் இவ் அறிக்கைகளைப் பகிரங்கப்படுத்தவில்லை. அதற்கமைய, இத்தகவல்களுக்கான அணுகலானது, தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் ஆவண வெளிப்படுத்துதல்கள் மற்றும் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ ஊடக வழிமுறைகளின் ஊடாக அவற்றைப் பெற்றுக் கொள்ளல் ஆகியவற்றிற்கு மாத்திரமே வரையறுக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது.

இப் போக்கானது, தாமாக முன்வந்து நிதியியல் விவரங்களை வெளிப்படுத்தும் நடைமுறை இலங்கையின் அரசியல் கலாசாரத்திற்குள் இன்னும் ஆழமாக வேரூன்றவில்லை என்பதை உணர்த்துகின்றது. பொதுப் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதில் நிதியியல் வெளிப்படைத்தன்மை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்ற போதிலும், அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் சட்டரீதியாகக் கட்டாயமாக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச அறிக்கைப்படுத்தல் தேவைகளுக்கு அல்லது நிபந்தனைகளுக்கு அப்பால், சுயவிருப்பின் பேரில் தகவல்களை வெளிப்படுத்தும் நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவில்லை.

திரட்டப்பட்ட தேர்தல் பிரச்சாரச் செலவினத் தரவுகள் தொடர்பான விளக்கம்

மேலே உள்ள அட்டவணையானது ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களின் மொத்தத் தேர்தல் செலவை முன்வைக்கிறது. இதிலிருந்து புலப்படும் ஒரு முக்கிய அவதானிப்பு யாதெனில், வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் பிரச்சாரங்களுக்கு நிதியளித்த மற்றும் அவற்றை முகாமை செய்த விதத்தில் காணப்பட்ட வேறுபாடுகளாகும். போட்டியிட்ட 38 வேட்பாளர்களில், 16 பேர் தங்கள் தேர்தல் பிரச்சாரங்களுக்கான நிதியைத் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்றிருந்தனர். அதேவேளை எஞ்சிய 22 வேட்பாளர்கள் முதன்மையாகத் தத்தமது அரசியல் கட்சிகளினால் அல்லது வேட்புமனுத் தாக்கல் செய்த வாக்காளர்கள் மற்றும் இதர பங்களிப்பாளர்களினால் (Other contributors) வழங்கப்பட்ட நிதியுதவிகளையே சார்ந்திருந்தனர்.

இதற்கான குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டாக, அநுர குமார திஸாநாயக்கவின் தேர்தல் பிரச்சாரத்தைக் குறிப்பிடலாம். இலங்கைத் தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட வெளிப்படுத்துதல் ஆவணங்களின்படி, அவரது தேர்தல் பிரச்சாரத்திற்கான நிதி அவரது அரசியல் கட்சியான தேசிய மக்கள் சக்தியினால் முழுமையாக நிதியளிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டுள்ளதுடன், வேட்பாளரால் தனிப்பட்ட ரீதியில் எவ்வித தேர்தல் பிரச்சாரச் செலவினங்களும் மேற்கொள்ளப்பட்டதாக அறிக்கைப்படுத்தப்படவில்லை. வேட்பாளர் தனது தனிப்பட்ட பிரச்சாரச் செலவினங்கள் எதையும் அறிக்கைப்படுத்தாத போதிலும், 10 பக்கங்களைக் கொண்ட விரிவான தேர்தல் பிரச்சார நிதி அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தார். அத்துடன், தேசிய மக்கள் சக்தியானது தேர்தல் பிரச்சார வருமானம், செலவினம் மற்றும் அதற்கான சான்று ஆவணங்கள் குறித்த விரிவான தகவல்களை உள்ளடக்கிய, ஏறத்தாழ 1,612 பக்கங்களைக் கொண்ட துணை ஆவணங்களின் முழுமையான தொகுப்பொன்றையும் சமர்ப்பித்திருந்தது.

குறித்த வெளிப்படுத்துதல் ஆவணங்களில் சில பங்களிப்பாளர்களின் முழுப் பெயர்கள், முகவரிகள் மற்றும் தேசிய அடையாள அட்டை (NIC) எண்கள் உள்ளடக்கப்படாமை உள்ளிட்ட சில குறைபாடுகள் காணப்பட்ட போதிலும், ஒட்டுமொத்த ஆவணப்படுத்தலின் தரமும் தேர்தல் பிரச்சார நிதி விவரங்களை வெளிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியும், தேர்தல் பிரச்சார செலவினங்களை ஒழுங்குபடுத்துதல்

10. 2024 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஜனாதிபதித் தேர்தலானது 2019 நவம்பர் 16 அன்றும், இறுதியான பாராளுமன்றத் தேர்தலானது 2020 ஆகஸ்ட் 5 அன்றும் நடாத்தப்பட்டன. இதற்கமைய, பிரதான தேசியத் தேர்தல்களுக்கு இடையே கிட்டத்தட்ட நான்கு வருட கால இடைவெளி நீடித்திருந்தது. இது இலங்கைத் தேர்தல் சூழலில் அரிதான ஒரு நிகழ்வாகும். ஏனெனில், 2000 ஆம் ஆண்டிலிருந்து, இலங்கையில் பொதுவாக மூன்று வருடங்களுக்கு ஒரு முறையாவது தேர்தல்கள் நடாத்தப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள அறிக்கைப்படுத்தல் நிபந்தனைகளைப் பின்பற்றுவதில் காட்டப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க பொறுப்புணர்வை அல்லது அர்ப்பணிப்பை எடுத்தியம்புகின்றன. இப் பகுப்பாய்வின் போது மீளாய்வு செய்யப்பட்ட ஏனைய பல சமர்ப்பிப்புகளுடன் ஒப்பிடுகையில், இவ்வெளிப்படுத்துதல்கள் ஒப்பீட்டளவில் உயர் மட்டத்திலான வெளிப்படைத்தன்மையைக் கொண்டிருப்பதுடன், மிகவும் அர்த்தமுள்ள பொது கண்காணிப்பிற்கும் வழிவகுக்கின்றன.

இதற்கு நேர்மாறாக, ரணில் விக்ரமசிங்க அவர்களின் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரம் தொடர்பான தேர்தல் பிரச்சார நிதி வெளிப்படுத்துதல்கள், தேர்தல் பிரச்சாரத்திற்கான நிதியுதவி மூலங்கள் குறித்த வரையறுக்கப்பட்ட தகவல்களையே வழங்குகின்றன. வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில், குறித்த தேர்தல் பிரச்சாரமானது பிரதானமாகச் சொந்த நிதியின் மூலம் முன்னெடுக்கப்பட்டதா அல்லது வெளிப்புறப் பங்களிப்புகளின் (External contributions) மூலம் நிதியுதவி அளிக்கப்பட்டதா என்பதைத் தீர்மானிப்பது கடினமாக உள்ளது.

குறித்த வேட்பாளரின் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சாரச் செலவினம் மற்றும் வருமானம் சார்ந்த அறிக்கையானது, வெறும் ஒரு பக்கப் பிரகடனத்தையும், அவ் வேட்பாளரின் சட்ட ரீதியான பிரதிநிதியிடமிருந்து பெறப்பட்ட ஒரு முகப்புக் கடிதத்தையும் (Covering letter) மாத்திரமே உள்ளடக்கியுள்ளது. இதன் விளைவாக, அர்த்தமுள்ள பொது கண்காணிப்பை மேற்கொள்வதற்குத் தேவையான மிகக் குறைந்தளவிலான தகவல்களையே இந்த வெளிப்படுத்துதல் ஆவணம் வழங்குகின்றது.

மேலும், கிடைக்கப்பெற்ற ஆவணப் பதிவுகளின் படி, குறித்த வேட்பாளருக்காக வேட்புமனு தாக்கல் செய்த வாக்காளரான சன்ன விக்ரமசிங்க, தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டிய தேர்தல் பிரச்சார நிதி அறிக்கையினை இப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதி வரை சமர்ப்பித்திருக்கவில்லை என அறியமுடிகிறது. இவ்வெளிப்படுத்துதல்களின் தன்மை மற்றும் பிரதான சட்டரீதியான அறிக்கைப்படுத்தல் கடமைகளை நிறைவேற்றத் தவறியுள்ளமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், இச்சூழ்நிலைகள் இச்சட்டத்தின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் இலக்குகளை வலுவிழக்கச் செய்வதாக நியாயமாக பொருள் கொள்ளலாம். தேர்தல் பிரச்சார நிதி சார் விதிமுறைகளுக்கு மிக உயர்ந்த மட்டத்திலான இணக்கப்பாடு எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதிப் பதவிக்காகப் போட்டியிடும் ஒரு வேட்பாளரின் விடயத்தில், இத்தகைய கரிசனைகள் விசேட முக்கியத்துவம் பெறுகின்றன.

பிரகடனப்படுத்தப்பட்ட உயர் அளவிலான செலவினங்கள், தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கும் இன்றியமையாத காரணியாக அமையவில்லை என்பதே மற்றுமொரு முக்கியமான அவதானிப்பாகும். மிக அதிகளவிலான பிரச்சாரச் செலவினங்களை குறிப்பிட்டிருந்த வேட்பாளர்கள் இறுதியில் வெற்றிபெறவில்லை என்பதையும், மாறாக மூன்றாவது அதிகூடிய செலவினத்தைக் கொண்டிருந்த வேட்பாளரே ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றினார் என்பதையும் இத்தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. உதாரணமாக, சஜித் பிரேமதாசவினால் குறிப்பிடப்பட்ட தேர்தல் பிரச்சாரச் செலவுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளுக்கான செலவினங்கள் ஆகியவை, அநுர குமார திஸாநாயக்கவின் செலவினங்களை விடவும் கிட்டத்தட்ட இருமடங்காகக் காணப்பட்டன. அதேவேளை ரணில் விக்ரமசிங்கவின் செலவினங்களும் திஸாநாயக்கவின் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் அதிகமாகவே இருந்தன.

அதேவேளை, இரு ஜனாதிபதி வேட்பாளர்கள் தங்களின் தேர்தல் பிரச்சாரத்திற்கென எவ்வித நிதியையும் செலவிடவில்லை என அறிக்கையில் தெரிவித்துள்ளமை இக் கண்டறிதல்கள் மூலம் புலனாகின்றது. போட்டியிட்ட 38 வேட்பாளர்களுள், சரத் மனமேந்திர (NSU) 1,911 வாக்குகளை (0.01%) மாத்திரமே பெற்றிருந்ததுடன், ஏ.எஸ்.பி. லியனகே 1,860 வாக்குகளைப் (இதுவும் 0.01%) பெற்றிருந்தார். இவர்கள் இருவருமே தங்களின் தேர்தல் பிரச்சாரங்களுக்காக எவ்வித செலவுகளையும் மேற்கொள்ளவில்லை எனவும், கட்டண அடிப்படையிலான எவ்வித சேவைகளையும் (Services acquired on charge) பெறவில்லை எனவும் பிரகடனப்படுத்தியிருந்தனர். நாடு தழுவிய ரீதியிலான தேர்தல் ஒன்றில் போட்டியிடுவதற்கான தளவாடத் தேவைகளுக்கு (Logistical demands) பொதுவாக ஆகக்குறைந்த மட்டத்திலான நிதியொதுக்கீடாவது அவசியமாகும் என்ற பின்னணியில், இவர்களின் இப்பிரகடனம் விசேட கவனத்திற்குரியதாகும். இந்த அவதானிப்பானது, தற்போதைய ஒழுங்குபடுத்துதல் முறைமையின் கீழ் சமர்ப்பிக்கப்படும் செலவின அறிக்கைகளின் நோக்க எல்லை (Scope) மற்றும் முழுமைத்தன்மை குறித்து முக்கியமான ஆய்வுசார் கேள்விகளை எழுப்புகிறது. குறிப்பாக, கட்சி நிதியுதவியுடன் கூடிய செயற்பாடுகள், பொருள்சார் பங்களிப்புகள் மற்றும் ஏனைய பணச்சார்பற்ற வளங்கள் (Non-monetary resources) உள்ளிட்ட தேர்தல் பிரச்சாரத்திற்கான மறைமுகமான நிதி ஆதரவு முறைகளை தற்போதிருக்கும் வெளிப்படுத்துதல் நிபந்தனைகள் (Disclosure requirements) முறைப்படி உள்வாங்கியுள்ளனவா என்பதை ஆராய வேண்டியதன் அவசியத்தை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இவ்வாறான போக்குகள், நடைமுறையிலுள்ள "அறிக்கையிடல் கடப்பாடுகள்" தேர்தல் பிரச்சார நிதியளிப்பின் உண்மையான கட்டமைப்பை எவ்வளவு தூரம் பிரதிபலிக்கின்றன என்பதை மதிப்பிடுவதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. விசேடமாக, பிரச்சாரத்தின் போது பல்வேறு முறைசார் மற்றும் முறைசாரா வழிகளில் நிதி கையாளப்படக் கூடிய ஒரு தேசிய தேர்தல் பின்னணியில் இது மிக முக்கியத்துவம் பெறுகின்றது. ஆகவே, மேலதிக பகுப்பாய்வானது, பிரகடனப்படுத்தப்பட்ட செலவின முறைமைக்கு அப்பாற்பட்ட பிரச்சாரச் சாத்தியக்கூறுகள் குறித்த அனுமானங்களில் கவனம் செலுத்துவதை விடுத்து, நடைமுறையிலுள்ள சட்ட விதிகளின் கீழமைந்த அறிக்கையிடல் கட்டமைப்பின் (Reporting framework) நிறைவுத்தன்மை/போதிய தன்மை (Adequacy) குறித்து மட்டுமே தொடர்ந்து கவனம் செலுத்துவதாக அமைய வேண்டும்.

மேலும், மூன்று ஜனாதிபதி வேட்பாளர்கள் தங்களது தேர்தல் பிரச்சார நிதி அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறியமை, வெளிப்படைத்தன்மையில் இடைவெளிகளைத் தோற்றுவித்துள்ளது. இது, 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தை மீறும் ஒரு செயலாக அமைவதோடு, இலங்கைத் தேர்தல் ஆணைக்குழுவின் நிறுவன ரீதியான வரையறைகளையும் (Institutional limitations) எடுத்துக்காட்டுகின்றது. ஏனெனில், தேர்தல் ஆணைக்குழுவின் பங்கானது அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், இணங்காமைகளை (Non-compliance) அதாவது சட்ட மீறல்களை உரிய தரப்பிற்குப் பரிந்துரைப்பதற்கும் மட்டுமே பெருமளவில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, சட்ட அமுலாக்கத்தில் காணப்படும் பலவீனங்கள், சட்டமீறல்களைத் தடுக்கும் ஆற்றலைக் (Deterrence) குறைப்பதுடன், தரவுகளின் நம்பகத்தன்மையைக் சீர்குலைத்து ஒழுங்குமுறைக் கட்டமைப்பின் ஒட்டுமொத்த நம்பகத்தன்மையையும் பலவீனப்படுத்தலாம்.

2024 ஜனாதிபதித் தேர்தலில் பெண் வேட்பாளர்கள் எவரும் போட்டியிடாமை, தேர்தல் பிரச்சார நிதி மற்றும் தேர்தல் பங்கேற்பு ஆகிய பரந்த பின்னணியில் விசேட கவனம் பெற வேண்டிய ஒரு கவலைக்குரிய விடயமாகும். அரசியல் கட்சிகள் மூலம் பெண்கள் பரிந்துரைக்கப்படுவதையும் அல்லது அவர்கள் சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிடுவதையும் தற்போதைய சட்டக் கட்டமைப்பு அனுமதித்த போதிலும், இத்தேர்தலில் பெண் வேட்பாளர்கள் எவரும் போட்டியிடாமை, கடந்தகாலத் தேர்தல்களில் நிலவிய மிகக் குறைந்தளவிலான பிரதிநிதித்துவத்திலும் பார்க்க மேலும் வீழ்ச்சியடைந்துள்ள ஒரு நிலையினைக் குறிக்கின்றது.

இப் போக்கானது, தனிநபர் வேட்பாளர்களின் தெரிவுகளைக் காட்டிலும், நிலவும் கட்டமைப்பு மற்றும் நிதிசார் தடைகளையே பறைசாற்றுகின்றது. இலங்கையின் ஆதாரங்களின் பிரகாரம், பெண்கள் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமாகக் காணப்படுகின்ற போதிலும், அரசியல் நிறுவனங்களில் அவர்களின் பிரதிநிதித்துவம் மிக மந்த நிலையிலேயே உள்ளது. குறிப்பாக 2024 ஆம் ஆண்டில் பாராளுமன்ற ஆசனங்களில் 9.7% மாத்திரமே பெண்களினால் வகிக்கப்பட்டது.[11] கடந்தகாலப் போக்குகள் இதனை விடவும் வீழ்ச்சியடைந்த பிரதிநிதித்துவத்தையே காட்டுகின்றன. பல பொதுத் தேர்தல் வட்டங்களில் பாராளுமன்றப் பெண் பிரதிநிதித்துவமானது வரலாற்று ரீதியாக 6% இற்கும் கீழமைந்த மட்டத்திலேயே நீடித்திருந்தது.[12] மேலும், கட்சி நிதியுதவிகளைப் பெறுவதில் உள்ள வரையறுக்கப்பட்ட வாய்ப்புகள், பலவீனமான நிதித் திரட்டல் வலையமைப்புகள் மற்றும் அரசியல் முடிவெடுத்தல் கட்டமைப்புகளில் நிலவும் திட்டமிட்ட புறக்கணிப்புகள் (Systemic exclusion) உள்ளிட்ட முதன்மைத் தடைகளை இவ் ஆய்வு மேலும் சுட்டிக்காட்டுகின்றது.[13]

இப்பின்னணியில், இலங்கையின் பிரதான தேசியத் தேர்தல் ஒன்றில் பெண் வேட்பாளர்கள் எவரும் போட்டியிடாமை, போட்டித்தன்மைமிக்க தேர்தல் அரசியலுக்குள் பெண்கள் பிரவேசிப்பதைத் தீர்மானிக்கும் கட்டமைப்பு ரீதியான தடைகளை, குறிப்பாக தேர்தல் பிரச்சார நிதியுடன் தொடர்பான தடைகளை பரிசீலிக்க வேண்டியதன் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. கட்சி நிதியளிப்பு நடைமுறைகள், உள்ளக வள ஒதுக்கீட்டு பொறிமுறைகள் (Internal resource allocation mechanisms), அரசியல் வலையமைப்புகளுக்கான அணுகல் மற்றும் தேசிய மட்டத்திலான தேர்தல் பிரச்சாரங்களுடன் தொடர்புடைய பாரிய நிதிசார் தேவைகள் உள்ளிட்ட காரணிகள், பெண் வேட்பாளர்களை விகிதாசாரமற்ற/சமமற்ற முறையில் (Disproportionately) பாதிக்கக் கூடும் என்பதுடன், சமத்துவமானதொரு தளத்தில் நின்று போட்டியிடுவதற்கான அவர்களின் திறனையும் மட்டுப்படுத்தக்கூடியதாகக் காணப்படுகின்றன.

இந்தக் கரிசனையானது 2024 ஜனாதிபதித் தேர்தலையும் கடந்து, அண்மைக்காலத்தில் இடம்பெற்ற அனைத்து ஜனாதிபதித் தேர்தல் போட்டிகளிலும் அவதானிக்கப்பட்ட ஒரு பரந்த போக்கைப் பிரதிபலிக்கின்றது. 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது ஒரேயொரு பெண் வேட்பாளர் மாத்திரமே களமிறங்கியிருந்த

11. இலங்கைத் தேர்தல் ஆணைக்குழு (2024). பாராளுமன்றத்தில் பெண் பிரதிநிதித்துவம். இணைய முகவரி: https://elections.gov.lk
12. சுதந்திரமான தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு (ANFREL, 2023). இலங்கையில் பெண்களின் அரசியல் பங்கேற்பு. இணைய முகவரி: https://aerc.anfrel.org
13. தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச அறக்கட்டளை (IFES, 2022). இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம்: தேர்தல் முறைமை பகுப்பாய்வும் பரிந்துரைகளும். இணைய முகவரி: https://www.ifes.org

அதே வேளையில், அரகலய மக்கள் போராட்டத்தின் இறுதிக்கட்டத்தில் அப்போதைய ஜனாதிபதி பதவி விலகவே எஞ்சிய பதவிக் காலத்திற்கான ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காக, 2022 ஜூலை 20 அன்று பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட இடைக்கால ஜனாதிபதி தெரிவு செயன்முறையும் முற்றிலுமாக ஆண் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான ஒரு போட்டியாகவே அமைந்தது. இத்தகைய நிகழ்வுகள், இலங்கையின் அதியுயர் அரசியல் போட்டித் தளங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் இன்னும் மிகக் குறைந்த மட்டத்திலேயே உள்ளது என்பதை உறுதிப்படுத்துவதுடன், அரசியல் தலைமைத்துவத்தை நோக்கிய தற்போதைய பாதைகளின் உள்ளடக்கும்தன்மை (Inclusiveness) குறித்தும் கேள்விகளை எழுப்புகின்றன.

இந்த ஏற்றத்தாழ்வை நிவர்த்தி செய்வதற்கு, வெறும் சட்டரீதியான ஏற்பாடுகளை அமுல்படுத்துவதையும் தாண்டிய தலையீடுகள் அவசியமாகின்றன. தேர்தல் பிரச்சார வளங்களுக்கான சமமான அணுகலை உறுதி செய்வதற்கும், அரசியல் கட்சி நிதியளிப்புகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையை மேம்படுத்துவதற்கும், அனைவரையும் மேலும் அதிகமாக உள்ளடக்கிய வேட்பாளர் தெரிவு செயன்முறைகளை ஊக்குவிப்பதற்கும், மற்றும் தேர்தல் போட்டிகளில் பெண்களின் காத்திரமான பங்களிப்பைக் கட்டுப்படுத்தும் கட்டமைப்பு ரீதியான தடைகளை நீக்குவதற்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிறுவன மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் அவசியமாகின்றன.

இத்தகையதொரு பின்னணியில், 2024 ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பெண் வேட்பாளரேனும் களமிறங்காமை என்பது வெறுமனே தற்செயலாக நிகழ்ந்த ஒரு தனித்தேர்தல் விளைவு என விளக்கமளிக்கப்படக் கூடாது. மாறாக, இது இலங்கையின் அரசியல் முறைமைக்குள்ளே வேரூன்றியுள்ள ஆழமான கட்டமைப்புச் சவால்களின் வெளிப்பாடே ஆகும். இங்கு தொடர்ந்து நிலவி வரும் அரசியல், நிதியியல் மற்றும் நிறுவன ரீதியான ஏற்பாடுகள், தேசிய மட்டத்திலான தேர்தல் போட்டிகளில் பெண்கள் திறம்பட பங்கேற்பதற்கான சமமான வாய்ப்புகளைத் தொடர்ந்து கட்டுப்படுத்தி வருகின்றன.

இவ்வறிக்கையிடல் போக்கானது, தற்போதைய வெளிப்படுத்துதல் கட்டமைப்பில் நிலவக்கூடிய தெளிவின்மைகளை, குறிப்பாக வேட்பாளரின் தனிப்பட்ட நிதியையும் அரசியல் கட்சியின் நிதியையும் பிரித்தறிவதில் உள்ள தெளிவின்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இவ்வாறான தெளிவான வேறுபாடுகள் காணப்படாமையானது, பிரச்சாரச் செலவுகள் மீண்டும் மீண்டும் இரட்டிப்பாக பதிவு செய்யப்படவோ (**Duplication**), தவறாகக் கணக்கிடப்படவோ (**Misattribution**) அல்லது குறைத்து அறிக்கையிடப்படவோ (**Underreporting**) ஏதுவாகலாம் என்பதுடன் இங்கு வெளிப்படுத்தப்படும் தரவுகளின் துல்லியத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை இதன் மூலம் பாதிக்கப்படலாம். மேலும், 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் கீழமைந்த தற்போதைய அறிக்கையிடல் வழிகாட்டல்கள், தேர்தல் பிரச்சார நிதியாக்கத்தில் பல தரப்பினர் ஈடுபடும்போது அதனுடன் தொடர்புடைய நிதிப் பொறுப்புகள் எவ்வாறு முறையாக பதிவு செய்யப்பட வேண்டும் என்பது குறித்த போதுமான தெளிவை வழங்குகின்றனவா என்பது தொடர்பான கேள்விகளையும் இது எழுப்புகிறது. தற்போது நடைமுறையிலுள்ள அறிக்கைப்படுத்தல் கட்டமைப்பை இன்னும் கூர்ந்து பரிசீலிக்கும் போது, அது குழப்பங்களுக்கு வழிவகுக்கக்கூடிய அதிக சாத்தியப்பாட்டை கொண்டிருப்பது தெளிவாகிறது. வேட்பாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் ஆகிய தரப்பினர் தமக்கெனப் பரிந்துரைக்கப்பட்ட அறிக்கைப்படுத்தல் படிவங்களின்படி தனித்தனியாக தேர்தல் பிரச்சார நிதி அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரப்பட்ட போதிலும், அதில் குறிப்பிடப்பட்ட வருமான மூலங்கள் மற்றும் செலவினப் பொருட்களில், எவை வேட்பாளருக்குரியவை, எவை அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவிற்குரியவை என்பதை வாக்காளர்கள், ஆய்வாளர்கள் அல்லது ஏனைய ஆர்வமுள்ள பங்குதாரர்கள் போன்றோர் தெளிவாக பிரித்தறிந்து கொள்வதற்கான எவ்வித வழிமுறைகளையும் இக் கட்டமைப்பு கொண்டிருக்கவில்லை.

போதிய வெளிப்படைத்தன்மையற்ற இந்நிலையானது, அறிக்கைப்படுத்தல் முறைமையின் பயனுறுதி மிக்க தன்மையை பலவீனப்படுத்துகின்றது. நடைமுறையில், இது தேர்தல் பிரச்சாரம் சார்ந்த வருமானம் மற்றும் செலவினங்களை வெவ்வேறு அறிக்கைப்படுத்தல் தரப்புகளின் கீழ் பிரித்துக் காட்டுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குகின்றது. இதன் காரணமாக, ஒரு வேட்பாளர் தனக்கு விதிக்கப்பட்டுள்ள செலவின உச்ச வரம்பிற்கு அமைய உண்மையாகவே செயற்பட்டுள்ளாரா என்பதை மதிப்பிடுவது கடினமாகின்றது. இதன் விளைவாக, தற்போதைய இக்கட்டமைப்பானது தேர்தல் பிரச்சார நிதி ஒழுங்குபடுத்துதலின் குறிக்கோள்களை சீர்குலைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் வேட்புமனு தாக்கல் செய்த வாக்காளர்களின் நிதி சார் நகர்வுகளும் பொறுப்புகளும் செலவின வெளிப்படுத்தல் அறிக்கைகளில் துல்லியமாகப் பிரதிபலிக்கப்படுவதை

உறுதிசெய்வதற்காக, அவ் அறிக்கைகள் மிகவும் சீரிய அறிக்கையிடல் தரநிர்ணயங்களையும் (**Reporting standards**) சரிபார்ப்புப் பொறிமுறைகளையும் (**Verification mechanisms**) கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தை இவ்வாறான நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

அட்டவணை 02 - அரசியல் கட்சிகள் மற்றும் வேட்புமனு தாக்கல் செய்த வாக்காளர்களினால் அறிக்கைப்படுத்தப்பட்ட தேர்தல் பிரச்சார செலவினங்கள் - ஜனாதிபதித் தேர்தல் 2024

அரசியல் கட்சி / வேட்புமனு தாக்கல் செய்த வாக்காளரால் அறிக்கைப்படுத்தப்பட்ட மொத்த தேர்தல் பிரச்சாரச் செலவினம் (ரூபாயில்)

நிலை	கட்சியின் பெயர் / வேட்புமனுத் தாக்கல் செய்த நபர்	அறிக்கையிடப்பட்ட செலவினம் (ரூபாயில்)	சிறப்பு அவதானிப்பு
1	தேசிய மக்கள் சக்தி	527,999,889.38	ஓர் அரசியல் கட்சியினால் அறிக்கையிடப்பட்ட மிக உயர்ந்த பிரச்சாரச் செலவினம்
2	ஐக்கிய மக்கள் சக்தி	194,087,715.04	ஓர் அரசியல் கட்சியினால் அறிக்கையிடப்பட்ட இரண்டாவது மிக உயர்ந்த பிரச்சாரச் செலவினம்
3	ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன	388,393,085.00	குறிப்பிடத்தக்க பிரச்சாரச் செலவினம் அறிக்கையிடப்பட்டுள்ளது
4	மக்கள் போராட்ட முன்னணி	10,830,699.00	-
5	ரு"ஹுணு ஜனதா பெரமுன	3,886,500.00	வேட்பாளர் அறிக்கையிலும் இதே செலவினத் தொகை அறிக்கையிடப்பட்டுள்ளது
6	சரத் நந்த சில்வா	2,722,000.00	இரு அறிக்கைகளிலும் ஒரே மாதிரியான துணை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன
7	அருணலு ஜனதா பெரமுன	2,553,858.53	-
8	சமாஜவாதி சமனத பக்ஷய	556,326.00	-
9	ஐக்கிய சோசலிச கட்சி	549,800.00	-
10	இலங்கை சோசலிச கட்சி	513,780.00	-
11	நவ சமசமாஜ கட்சி	208,990.00	இரு அறிக்கைகளிலும் ஒரே மாதிரியான துணை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன
12	புதிய சுதந்திர முன்னணி	280,100.00	-
13	எச். ஆனந்த சுனில் சாந்த பெர்னாண்டோ	114,500.00	-
14	நந்திக பிரதீப் குமார	100,000.00	-
15	அசங்க நந்தன ஸ்ரீநாத்	75,000.00	-
16	விஜயரத்ன பண்டார ரத்நாயக்க	50,000.00	-
17	ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி	50,000.00	-
18	தீகல்ல முதியான்சலாகே தனஞ்சய பண்டார தீகல்ல	50,000.00	-
19	ஹுபராதுவ நாணயக்கார கந்தம்பி கசுன் கயாஷான்	50,000.00	-
20	சஞ்சீவ குமார குணரத்ன	செலவினம் அறிக்கையிடப்படவில்லை	-

21	இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி	செலவினம் அறிக்கையிடப்படவில்லை	-
22	ஏ. பிரான்சிஸ்	செலவினம் அறிக்கையிடப்படவில்லை	-
23	தேசிய அபிவிருத்தி முன்னணி	செலவினம் அறிக்கையிடப்படவில்லை	-
24	நவ சிஹல உருமய	செலவினம் அறிக்கையிடப்படவில்லை	-
25	தேசிய ஜனநாயக முன்னணி	செலவினம் அறிக்கையிடப்படவில்லை	-
26	இலங்கை தொழிலாளர் கட்சி	செலவினம் அறிக்கையிடப்படவில்லை	-
27	அபே ஜனபல கட்சி	செலவினம் அறிக்கையிடப்படவில்லை	-

மேற்கண்ட அட்டவணையானது, 2024 ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின் போது வேட்பாளர்களுக்கு ஆதரவாக அரசியல் கட்சிகள் மற்றும் வேட்புமனு தாக்கல் செய்த வாக்காளர்களினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் விபரங்களை முன்வைக்கிறது. இத்தேர்தலில் போட்டியிட்ட 38 வேட்பாளர்களுள், தேசிய மக்கள் சக்தி மிக அதிகளவிலான செலவினங்களை அறிக்கையிட்ட அரசியல் கட்சியாகக் காணப்படுகிறது.[14] இக்கட்சியினால் முன்னிறுத்தப்பட்ட வேட்பாளரே இறுதியில் இத்தேர்தலில் வெற்றியாளராக உருவெடுத்தார் என்பதும் விசேட அவதானிப்பிற்குரியது. இதற்கு நேர்மாறாக, தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்திய வேட்பாளரான அநுர குமார திஸாநாயக்க அவர்கள், தனது தேர்தல் பிரச்சாரத்திற்காகத் தனிப்பட்ட செலவினங்கள் எதையும் மேற்கொள்ளவில்லை எனப் பிரகடனப்படுத்தியுள்ளார். இது அவரது தேர்தல் பிரச்சாரச் செயற்பாடுகள் முழுமையாகக் கட்சியினால் அல்லது அதன் ஆதரவாளர்களினால் நிதியளிக்கப்பட்டன என்பதைக் காட்டுகின்றது.

ரணில் விக்ரமசிங்க அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி வேட்புமனுத் தாக்கல் செய்த வாக்காளரான சன்ன விக்ரமசிங்க என்பவர், சட்டரீதியாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரவு மற்றும் செலவின அறிக்கைகளைத் தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கத் தவறியுள்ளார் என்பதும் இங்கு விசேட கவனத்திற்குரியது. ரணில் விக்ரமசிங்கவின் பெயரில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மட்டுமே தற்போது கிடைக்கப்பெற்றுள்ள ஒரேயொரு அறிக்கையாகும். இருப்பினும், இந்த அறிக்கையிலுள்ள விபரங்கள் வேட்புமனுத் தாக்கல் செய்த வாக்காளரின் வகிபாகத்தையோ அல்லது அறிக்கையிடப்பட்ட வருமானத்திற்கான ஆதாரங்களையோ தெளிவாகக் குறிப்பிடவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட அந்த அறிக்கையின் பிரகாரம், பதிவு செய்யப்பட்டுள்ள மொத்தத் தேர்தல் பிரச்சாரச் செலவினம் ரூ. 990,327,687,16 ஆகும்.

கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையில், அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றின் ஆதரவாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட மொத்தத் தேர்தல் பிரச்சாரச் செலவினங்களை பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்:

தேசிய மக்கள் சக்தி (**NPP**) – ரூ. 527,999,889.38

இலங்கை மக்கள் முன்னணி (**SLPP**) – ரூ. 388,393,085

ஐக்கிய மக்கள் சக்தி (**SJB**) – ரூ. 194,087,715.04

எனவே, தேசிய மக்கள் சக்தி (**NPP**) மிக உயர்ந்த மொத்தச் செலவினத்தை அறிக்கையிட்டுள்ளதுடன், அதனைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் (**SLPP**) ஐக்கிய மக்கள் சக்தியும் (**SJB**) அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளன.

ஒட்டுமொத்த தேர்தல் பிரச்சார செலவினங்களின் ஒப்பீடானது, வெற்றிபெற்ற ஜனாதிபதி வேட்பாளர் எவ்வித தனிப்பட்ட தேர்தல் பிரச்சார செலவினங்களையும் அறிக்கைப்படுத்தவில்லை என்பதை வெளிப்படுத்துவதுடன், அவரது முழுத் தேர்தல் பிரச்சார நடவடிக்கையும் அவரது அரசியல் கட்சியின் ஊடாகவே நிதியளிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டுள்ளன என்பதையும் காட்டுகின்றது. மேலும், வெற்றி ஈட்டிய கட்சியினால் அறிக்கைப்படுத்தப்பட்ட செலவினங்களுக்கும், இரண்டாவதாக ஆகக்கூடுதலான தொகையைச்

14. இப்பிரிவானது தனிப்பட்ட வேட்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட பிரச்சார செலவினங்களை உள்ளடக்கவில்லை. இப் பகுப்பாய்வானது சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் வேட்புமனு தாக்கல் செய்த வாக்காளர்களினால் அறிக்கையிடப்பட்ட செலவினங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது.

செலவிட்ட கட்சியின் செலவினங்களுக்கும் இடையே கணிசமான இடைவெளி இருப்பதும் தெளிவாகப் புலனாகிறது.

அதேவேளை, பெரும்பாலான பிரதான அரசியல் கட்சிகள் தங்கள் தேர்தல் பிரச்சார நிதி குறித்து ஒப்பீட்டளவில் விரிவான தகவல்களையும் துணை ஆவணங்களையும் வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. அவற்றுள், தேசிய மக்கள் சக்தியானது தேர்தல் பிரச்சாரத்திற்காக நிதி ரீதியான பங்களிப்புகளை வழங்கிய தனிநபர்கள், நிறுவனங்கள், குழுக்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆதரவாளர்களின் பட்டியலை சமர்ப்பித்ததன் மூலம் ஒப்பீட்டளவில் ஒரு விரிவான வெளிப்படுத்துதலை முன்னெடுத்திருந்தது. தனிப்பட்ட முறையில் நிதியளித்தோரின் தேசிய அடையாள அட்டை எண்களை உள்ளடக்கியமையானது, இப் பகுப்பாய்வின் போது பரிசீலிக்கப்பட்ட ஏனைய பல சமர்ப்பிப்புகளுடன் ஒப்பிடுகையில் ஒரு நேர்மறையான நடைமுறையாகக் காணப்படுகிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பெறப்பட்ட நிதிக்கான ரஷீதுகள் / பற்றுச்சீட்டுகளும் வழங்கப்பட்டிருந்தமையானது, தேர்தல் பிரச்சாரப் பங்களிப்புகளின் மூலத்தைத் தடமறியும் இயலுமையை (Traceability) வலுவூட்டுவதாக அமைந்தது.

சமர்ப்பிக்கப்பட்ட வெளிப்படுத்தல்களின்படி, தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரச்சார வருமானத்தின் கணிசமான பகுதி இதற்கென ஒதுக்கப்பட்ட இரு குறிப்பிட்ட வங்கிக் கணக்குகளின் மூலமாகவே கையாளப்பட்டிருந்ததுடன், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நலன்விரும்பிகள், தேர்தல் பிரச்சாரக் குழுக்கள் மற்றும் தொழிற்சங்கங்களிடமிருந்தான பங்களிப்புகளும் இதன்போது பெறப்பட்டிருந்தன. இது குறித்த தேர்தல் பிரச்சாரத்தின் நிதியுதவிக் கட்டமைப்பு பற்றி ஒப்பீட்டளவில் தெளிவானதொரு பார்வையை வழங்குகின்ற போதிலும், அனைத்து நிதி மூலங்களையும் முழுமையாக வெளிப்படுத்துவதை உறுதிப்படுத்தவும் அதனை சரிபார்க்கவும் இன்னும் மேலதிக மேம்பாடுகள் அவசியமாகின்றன.

ஐக்கிய மக்கள் சக்தியும் (SJB) நாடளாவிய ரீதியில் ரூ. 50 முதல் ரூ.1,000 வரை பெறுமதியான பங்களிப்புச் சீட்டுகளை விற்பனை செய்வதன் மூலம் திரட்டப்பட்ட நிதிகள் உட்பட, தங்கள் தேர்தல் பிரச்சார வருமானம் குறித்த விவரங்களை வழங்கியிருந்தது. இது அடிமட்ட அளவிலான நிதித் திரட்டல் நடவடிக்கைகளை ஆவணப்படுத்துவதற்கான ஒரு முயற்சியை வெளிப்படுத்துகின்ற போதிலும், இத்தகைய பொறிமுறைகளின் ஊடாக ஈட்டப்பட்ட மொத்த வருமானத்தினை முழுமையாக வெளிப்படுத்துவதிலும் அதனை கணக்கிணக்கம் (Reconciliation) செய்து சரிபார்ப்பதிலும் இன்னும் இடைவெளிகள் அல்லது குறைபாடுகள் காணப்படுகின்றன.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவானது (SLPP) ஒரு பட்டயக் கணக்காளரினால் (Chartered Accountant) சான்றளிக்கப்பட்ட வருமான மற்றும் செலவினக் கூற்றைச் சமர்ப்பித்திருந்தது. அக்கட்சியின் நிதிப் பரிவர்த்தனைகள்/கொடுக்கல் வாங்கல்கள் பிரதானமாக அதன் வங்கிக் கணக்குகளின் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், வழங்கப்பட்ட தகவல்கள் ஒப்பீட்டளவில் ஒரு முறையான வடிவில் முன்வைக்கப்பட்டிருந்தன. இருப்பினும், ஏனைய பிரதான கட்சிகளைப் போன்றே, நிதியியல் வழிகளினூடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட சில நிதிகளின் இறுதி/உண்மையான மூலங்களை (Ultimate sources) கண்டறிவதில் இன்னும் வரையறைகள் காணப்படுகின்றன.

இத்தகைய நேர்மறையான நடைமுறைகள் காணப்பட்டபோதிலும், அனைத்து பிரதான அரசியல் தரப்பினரதும் தேர்தல் பிரச்சார நிதி வெளிப்படுத்துதல்களில் ஒரு பொதுவான குறைபாடு அடையாளம் காணப்பட்டது. அதாவது, தேர்தல் பிரச்சார வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்ட நிதிகளின் ஆரம்ப நிதி மூலங்கள் (Original sources of funds) பற்றி போதியளவில் வெளிப்படுத்தப்படாமை ஆகும். கட்சிகளும் வேட்பாளர்களும் பொதுவாகப் பெற்றுக் கொண்ட நிதித்தொகைகளையும் நிதிப்பரிவர்த்தனை விவரங்களையும் அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ள போதிலும், அதன் பின்னணியில் உள்ள பங்களிப்பாளர்கள் (நிதி வழங்குநர்கள்) பற்றிய விரிவான தகவல்கள் அறிக்கைகளில் குறிப்பிடாமையானது, தேர்தல் பிரச்சார நிதியளிப்பின் ஆரம்ப மூலங்களை முழுமையாக மதிப்பிடுவதற்கான பிரஜைகள் மற்றும் மேற்பார்வை நிறுவனங்களின் திறனைக் கட்டுப்படுத்துகின்றது.

தேர்தல் காலப்பகுதியில் தேர்தல் பிரச்சாரம் சார்ந்த அனைத்துப் பரிவர்த்தனைகளுக்கும் மட்டுமேயான பிரத்தியேக வங்கிக் கணக்கொன்றை பேணுவதை, அனைத்து வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் வேட்புமனு தாக்கல் செய்த வாக்காளர்களுக்கும் ஒரு கட்டாய நிபந்தனையாக அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவத்தை இது சுட்டிக் காட்டுகிறது. குறிப்பாக, வேட்பாளர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில்

மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படும் ஒரு ஜனாதிபதித் தேர்தலில், இத்தகையதொரு நிபந்தனையை நிறுவி கண்காணிப்பது நடைமுறைக்கேற்றதும் நிறைவேற்றக்கூடியதுமான ஒரு சீர்திருத்த நடவடிக்கையாக அமையும்.

மேலும், தேர்தல் பிரச்சார நிதி ஒழுங்குபடுத்துதல் கட்டமைப்பில் எதிர்காலத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படும் போது, தேர்தல் பிரச்சாரங்களுக்குப் பங்களிப்பு செய்யும் தனியார் நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் ஏனைய பதிவுசெய்யப்பட்ட அமைப்புகளின் பதிவு எண்கள் உட்பட, நிறுவன ரீதியான நன்கொடையாளர்களின் மேலதிக அடையாள விவரங்களை வெளிப்படுத்துவதைக் கட்டாயமாக்குவது குறித்து பரிசீலிக்க வேண்டும். மீளாய்வு செய்யப்பட்ட பல சமர்ப்பிப்புகளில், பங்களிப்பாளர்கள் தொழிற்சங்கங்கள், வெளிநாட்டுக் குழுக்கள் அல்லது அமைப்புகள் போன்ற பொதுவான விளக்கங்கள் மூலம் மட்டுமே அடையாளப்படுத்தப்பட்டிருந்தனர். இப் பங்களிப்பாளர்களின் உண்மையான அடையாளம் அல்லது தேர்தல் பிரச்சார நிதி வழங்குவதற்கான அவர்களின் தகுதிநிலை ஆகியவற்றை சுயாதீன சரிபார்ப்பு மூலம் உறுதிப்படுத்துவதற்குத் தேவையான தகவல்கள் போதியளவில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

ஒட்டுமொத்த செலவினப் போக்கைக் கவனிக்கையில், சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் பிரச்சார செலவின அறிக்கைகளின்படி, தேர்தலில் போட்டியிட்ட 38 அரசியல் கட்சிகள் மற்றும் வேட்புமனு தாக்கல் செய்த வாக்காளர்களுள், மூன்று பிரதான அரசியல் கட்சிகளான தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆகியவையே செலவிடப்பட்ட தொகையில் கணிசமான பங்கைக் கொண்டுள்ளன. இக் கட்சிகள் செலவழித்த ஒட்டுமொத்தத் தொகை ரூ.1.1 பில்லியன் (ரூ. 1,110,480,689.42) ஆகும். இதனுடன் ஒப்பிடுகையில், போட்டியிட்ட ஏனைய அனைத்துக் கட்சிகளும் வேட்புமனு தாக்கல் செய்த வாக்காளர்களும் இணைந்து மேற்கொண்ட செலவினமானது, இந்த மூன்று பிரதான அரசியல் கட்சிகளினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினத்தில் 10 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது. இந்த பாரிய ஏற்றத்தாழ்வானது தேர்தல் பிரச்சார வளங்கள் பிரதான அரசியல் தரப்புகளிடம் மட்டுமே குவிந்திருப்பதைக் காட்டுவதுடன், சிறிய கட்சிகளும் சுயாதீன வேட்பாளர்களும் தேர்தல் களத்தில் சமமான நிலையில் போட்டியிடுவதற்கான நிதித் திறனில் நிலவும் சமத்துவமின்மையைப் பிரதிபலிக்கிறது.

எனவே, மூன்று பிரதான அரசியல் கட்சிகளையும் தவிர்த்து, ஏனைய அனைத்து அரசியல் கட்சிகளும் வேட்புமனு தாக்கல் செய்த வாக்காளர்களும் கூட்டுத்தொகையாக ரூ.19,489,944.00 ஐ மாத்திரமே தேர்தல் பிரச்சார செலவினமாக அறிக்கையிட்டுள்ளனர். மூன்று பிரதான அரசியல் கட்சிகளினாலும் அறிக்கையிடப்பட்ட ரூ.1,110,480,689.42 செலவினத்துடன் ஒப்பிடும்போது, ஏனைய அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் வேட்புமனு தாக்கல் செய்த வாக்காளர்களின் செலவினமானது 1.75% ஐ மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இது தேர்தல் போட்டியாளர்களிடையே தேர்தல் பிரச்சார வளங்கள் கிடைப்பதில் உள்ள பாரிய ஏற்றத்தாழ்வைப் புலப்படுத்துகின்றது.

இந்த வெளிப்படுத்துதல் நிபந்தனைகளை வலுப்படுத்துவதானது, வெளிப்படைத்தன்மையை கணிசமாக மேம்படுத்தும், கணக்காய்வு செய்யும் திறனை அதிகரிக்கும், மற்றும் இலங்கையின் தேர்தல் செயன்முறையில் பொறுப்புக்கூறல் மற்றும் பொதுமக்களின் நம்பிக்கையை மேம்படுத்துதல் எனும் தனது நோக்கத்தை தேர்தல் பிரச்சார நிதி ஒழுங்குமுறை அடைவதையும் உறுதிசெய்யும்.

அட்டவணை 03 - ஜனாதிபதி வேட்பாளர்கள் மேற்கொண்ட செலவினங்களின் வகைகள்

வேட்பாளரின் பெயர்	தேர்தல் விளம்பரப் பொருட்கள்	ஊடக விளம்பரம் - மரபுவழி ஊடகம்	ஊடக விளம்பரம் - புதிய ஊடகம்	பொதுக் கூட்டங்கள் மற்றும் மக்கள் தொடர்புப் பிரச்சாரம்	போக்குவரத்து
திலித் ஜயவீர	11,646,574	270,362,549	22,146,647.1	19,228,900.5	1,258,575
கீர்த்தி விக்ரமரத்ன	1,742,000	1,537,780	3,370,500	6,939,878	-
லலித் டி சில்வா	81,500	80,000	-	1,153,680.50	332,070
பானி விஜேசிறிவர்தன	75,700	-	-	76,018	38,166
சிறிதுங்க ஜயசூரிய	120,000	36,300	-	168,678	481,222
மயில்வாகனம் திலகராஜா	72,530	-	-	660,290	359,710
சரத் பண்டாரநாயக்க	-	145,520	-	153,873	58,107
சஜித் பிரேமதாச	16,310,200	610,372,712	58,096,013.9	124,687,846	126,791,753
சரத் பொன்சேகா	-	-	-	28,640,385	4,948,516.72
விஜயதாச ராஜபக்ஷ	10,735,500	24,378,000	8,613,300	14,718,520	2,000,000
ரணில் விக்ரமசிங்க	281,664,000	392,968,122.13	107,112,903.53	146,369,692	62,212,969.87
அக்மீமன தயாரதன தேரர்	240,200	-	-	25,000	-
அபூபக்கர் முஹம்மது இன்பாஸ்	300,000	-	-	550,000	700,000
சிறிபால அமரசிங்க	-	-	-	-	-
கே.கே. பியதாச	-	-	-	75,000	100,000
கே.ஏ. குலரத்ன	-	-	-	330,000	170,000
கே.ஆர். கிருஷான்	-	-	-	-	-
அநுர சிட்னி ஜயரத்ன	-	-	-	400,000	600,000
அகம்பொடிகே பிரசங்க சுரஞ்சீவ அனோஜ் டி சில்வா	1,294,000	-	600,000	1,606,800	198,000
அஜந்தா டி சொய்சா	1,430,600	1,386,090	75,000	585,362	334,448
அநுர குமார திஸ ாநாயக்க	-	-	-	-	-
மஹிந்த தேவகே	-	-	-	-	-
விக்டர் பெரேரா	200,000	-	-	4,000,000	700,000
அநுருந்த பொல்கம்பொல	-	-	-	25,000	67,500
திஸாநாயக்க முதியான்சலாகே பண்டாரநாயக்க	-	-	-	85,000	242,500

நுவன் போபகே	-	-	-	50,000	-
சரத் மனமேந்திர	-	-	-	-	-
பேமசிறி மானகே	500,000	-	-	950,000	550,000
அனுருந்த ரொஷான் ரணசிங்க	682,000	1,000,000	500,000	540,000	-
ஜனக ரத்நாயக்க	2,039,685	10,934,059	10,383,155	1,520,000	-
நாமல் ராஜபக்ஷ	-	-	-	-	406,566
லக்ஷ்மன் நாமல் ராஜபக்ஷ	-	-	-	-	-
ஏ.எஸ்.பி. லியனகே	-	-	-	-	-
பிரியந்த விக்ரமசிங்க	17,000	-	-	115,390	76,600
ஓஷல ஹேரத்	45,400	-	-	166,883	-

வெவ்வேறு செலவின வகைகளின் கீழ் அறிக்கையிடப்பட்ட பிரச்சாரச் செலவினங்கள் குறித்த பகுப்பாய்வானது, ஜனாதிபதி வேட்பாளர்களிடையேயான பிரச்சார மூலோபாயங்கள், நிதித் திறன் மற்றும் விவரங்களை வெளிப்படுத்தும் நடைமுறைகளில் காணப்பட்ட கணிசமான வேறுபாடுகளை வெளிப்படுத்துகிறது. தரவுகளின்படி, பிரச்சாரச் செலவினங்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான வேட்பாளர்களிடமே பெருமளவில் குவிந்திருந்த அதேவேளை, குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான வேட்பாளர்கள் பல செலவின வகைகளின் கீழ் மிகக் குறைந்த செலவினங்களையே அல்லது எவ்வித செலவினங்களுமே இல்லை என்றே குறிப்பிட்டிருந்தனர்.

ஒட்டுமொத்தமாக அதிக செலவு செய்த வேட்பாளர்களின் தேர்தல் பிரச்சாரச் செலவினங்களில், ஊடக விளம்பரப்படுத்தலே முதன்மைப் பங்கை வகித்துள்ளன. தொலைக்காட்சி, வானொலி மற்றும் அச்சு ஊடக விளம்பரங்களுக்காக கணிசமான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மரபு வழி ஊடகங்கள் மிகப்பெரிய செலவினப் பிரிவாகத் தொடர்ந்து நீடிக்கின்றது. அதே நேரத்தில், புதிய ஊடக விளம்பரங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது அதிகரித்து வருகின்றமையானது, தேர்தல் பிரச்சாரங்களில் டிஜிட்டல் தளங்களின் முக்கியத்துவம் வளர்ந்து வருவதை சுட்டிக்காட்டுகின்றது. இருப்பினும், தற்போதைய வெளிப்படுத்துகைக் கட்டமைப்பானது டிஜிட்டல் விளம்பர வழங்குநர்கள், பயன்படுத்தப்பட்ட தளங்கள், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட விளம்பரங்கள் (Targeted advertisements) மற்றும் அது சார்ந்த சேவைச் செலவுகள் குறித்து வரையறுக்கப்பட்ட தகவல்களையே வழங்குகின்றது. இது எதிர்காலச் சீர்திருத்தங்களில் மேலும் விரிவான அறிக்கையிடல் நிபந்தனைகள் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் காட்டுகிறது.

மக்கள் பேரணிகள், மக்கள் தொடர்பு செயற்பாடுகள் மற்றும் போக்குவரத்து ஆகியவையும் முதன்மையான செலவின வகைகளாகக் காணப்படுவதுடன், அவை நாடளாவிய ரீதியில் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுப்பதிலுள்ள தளவாடத் தேவைகளை (Logistical demands) பிரதிபலிக்கின்றன. அறிக்கையிடப்பட்ட புள்ளிவிவரங்கள் பிரச்சார அணுகுமுறைகளில் உள்ள குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுகின்றன. அதாவது, சில வேட்பாளர்கள் பெரிய அளவிலான மக்கள் அணிதிரட்டல்களை பெரிதும் நம்பியிருந்த அதேவேளை, ஏனையோர் ஊடகங்களை மையமாகக் கொண்ட மூலோபாயங்களையே அதிகம் கையாண்டிருந்தனர்.

கட்சி வாரியான செலவினப் பகிர்வுத் தன்மைகள் மீதான பகுப்பாய்வானது, பெரும்பாலான வேட்பாளர்கள் தங்களது பிரச்சார உத்திகளில் மரபுவழி ஊடகங்களுக்கே முன்னுரிமை அளித்துள்ளனர் என்பதை வெளிப்படுத்துகிறது. அரசியல் தகவல் பரிமாற்றத்தில் சமூக ஊடகங்களின் முக்கியத்துவம் அதிகரித்து வருகின்ற போதிலும், தேர்தல் பிரச்சாரச் செலவினங்களில் மரபுவழி ஊடகங்களே தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகின்றன. தேர்தல் பிரச்சாரத் திட்டமிடலில் டிஜிட்டல் தளங்கள் பெருகிய முறையில் உள்வாங்கப்பட்டு வருகின்ற போதிலும், பிரதான வேட்பாளர்கள் மத்தியில் வழக்கமான ஊடக வழிகள் மீதான நம்பிக்கை இன்னும் தளம்பலின்றிப் பேணப்பட்டு வருகின்றமையையே இப்போக்கு சுட்டிக்காட்டுகின்றது.

உதாரணமாக, சஜித் பிரேமதாச அவர்கள் மரபுவழி ஊடகங்களுக்காக மிக அதிக தொகையாக ரூபாய் 610,372,712.00 ஐ ஒதுக்கியுள்ளதுடன், சமூக ஊடகங்களுக்கான அவரது செலவு மொத்தமாக ரூபாய் 58,096,013.90 ஆகக் காணப்பட்டது. இதேபோல், ரணில் விக்ரமசிங்க அவர்கள் மரபுவழி ஊடகங்களுக்கு ரூபாய் 392,968,122.13 ஐயும், சமூக ஊடகங்களுக்கு ரூபாய் 610,372,712.00 ஐயும் செலவழித்துள்ளார். திலித் ஜயவீர அவர்களின் சமூக ஊடகங்களுக்கான ரூபாய் 22,146,647.10 செலவீனத்துடன் ஒப்பிடுகையில், மரபுவழி ஊடகங்களில் ரூபாய் 270,362,549.00 என்ற பாரிய தொகையை தேர்தல் பிரச்சாரத்திற்கென முதலீடு செய்துள்ளார்.

செலவினப் போக்கின் ஒரு குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் என்னவெனில், நிதி வளங்கள் ஒரு சில முன்னணி வேட்பாளர்களிடையே மட்டுமே குவிந்திருந்தமையாகும். சஜித் பிரேமதாச, ரணில் விக்ரமசிங்க மற்றும் திலித் ஜயவீர ஆகிய வேட்பாளர்கள் பிரதான வகைகளின் கீழ் அறிக்கையிடப்பட்ட செலவினங்களில் கணிசமான விகிதத்திற்குப் பொறுப்பாகக் காணப்பட்டனர். இது ஜனாதிபதி வேட்பாளர்களிடையே நிலவும் சமமற்ற நிதித் திறனை வெளிப்படுத்துகின்றது. சமநிலையானதும் போட்டித்தன்மை வாய்ந்ததுமான ஒரு தேர்தல் சூழலை உருவாக்குவதில் தேர்தல் பிரச்சார நிதி ஒழுங்குமுறைகள் கொண்டுள்ள திறன் குறித்து இது பரந்த கேள்விகளை எழுப்புகிறது.

அனைத்து வகைகளின் கீழும் எவ்வித செலவினத்தையும் மேற்கொள்ளவில்லை என அறிக்கையிட்ட பல வேட்பாளர்களையும் இந்தப் பகுப்பாய்வு அடையாளம் கண்டுள்ளது. தற்போதைய சட்டக் கட்டமைப்பின் கீழ் இத்தகைய பிரகடனங்கள் அனுமதிக்கப்படத்தக்கவை என்ற போதிலும், மிக மட்டுப்படுத்தப்பட்ட தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் கூட பொதுவாக நிர்வாக, தகவல் தொடர்பு மற்றும் தளவாடச் செலவுகளை ஏற்படுத்துகின்ற ஒரு நாடளாவிய ஜனாதிபதித் தேர்தலின் பின்னணியில், இப்பிரகடனங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியவை ஆகும். தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் அரசியல் கட்சிகள், ஆதரவளிக்கும் துணை அமைப்புகள் அல்லது மூன்றாம் தரப்பினர் ஊடாக முன்னெடுக்கப்படும் பட்சத்தில், தேர்தல் பிரச்சார நிதி ஒழுங்குமுறையின் குறிக்கோள்களுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக இத்தகைய பங்களிப்புகள் சரியான முறையில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

மேலும், செலவின வெளிப்படுத்தல்களின் தரம் மற்றும் முழுமைத் தன்மையில் கணிசமான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. சில வேட்பாளர்கள் துணை ஆவணங்களுடன் விரிவான பிரிவு வாரியான தகவல்களை வழங்கியிருந்த அதேவேளை, ஏனையோர் முறையான சரிபார்ப்பைக் கட்டுப்படுத்தும் வகையிலான வரையறுக்கப்பட்ட தகவல்களையே சமர்ப்பித்திருந்தனர். தரப்படுத்தப்பட்ட இலத்திரனியல் சமர்ப்பிப்புகள், சேவை வழங்குநர்களின் விரிவான வெளிப்படுத்துதல், மூன்றாம் தரப்பினரால் வழங்கப்படும் தேர்தல் பிரச்சார ஆதரவை அடையாளம் காணல் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆவணப்படுத்தல் நிபந்தனைகள் ஆகியவற்றின் மூலம் அறிக்கையிடல் தரநிலைகளை வலுப்படுத்துவதானது, வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதோடு மேற்பார்வை நிறுவனங்களும் பொதுமக்களும் பயனுறுதி மிக்க வகையில் கண்காணிப்பை மேற்கொள்வதனை எளிதாக்கும்.

ஒட்டுமொத்த மதிப்பீடு

ஜனாதிபதி வேட்பாளர்களின் செலவினப் போக்குகளானவை, இலங்கையில் தேர்தல் பிரச்சார நிதியளிப்பானது பெருமளவு சமத்துவமற்று நிலவுவதைப் புலப்படுத்துவதுடன், மிகக் குறைந்த எண்ணிக்கையிலான வேட்பாளர்களே அறிக்கையிடப்பட்ட செலவினங்களில் பெரும்பகுதியான செலவினங்களை மேற்கொண்டுள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. தேர்தல் பிரச்சார நிதி அறிக்கையிடல் நிபந்தனைகளை அறிமுகப்படுத்தியமையானது ஒரு முக்கியமான முன்னேற்றத்தைக் குறிக்கின்ற போதிலும், தகவல்களை வெளிப்படுத்துதலின் தரம், முழுமைத் தன்மை மற்றும் சரிபார்க்கும் தன்மை ஆகியன மேலும் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளன. எதிர்காலத் தேர்தல்களில் தேர்தல் பிரச்சார நிதி ஒழுங்குமுறையானது வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் பொது நம்பிக்கை ஆகியவற்றிற்கு காத்திரமான பங்களிப்பை வழங்குவதை உறுதி செய்வதற்கு, அறிக்கையிடல் தரநிலைகளையும் நடைமுறைப்படுத்தல் பொறிமுறைகளையும் வலுப்படுத்துவது இன்றியமையாததாகும்.

அட்டவணை 04 - அரசியல் கட்சிகள் மேற்கொண்ட செலவினங்களின் வகைகள்

கட்சியின் பெயர்	தேர்தல் விளம்பரப் பொருட்கள்	ஊடக விளம்பரம் (மரபுவழி ஊடகம்)	ஊடக விளம்பரம் (புதிய ஊடகம்)	பொதுக் கூட்டங்கள் மற்றும் மக்கள் தொடர்புப் பிரச்சாரம்	போக்குவரத்து	மொத்தத் தொகை
தேசிய மக்கள் சக்தி	124,865,801	306,722,603	13,555,230.06	78,850,821	4,005,545.08	527,999,889.38
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன	64,958,450	4,184,987	24,720,000	284,784,397	2,489,780	381,137,614
ஐக்கிய மக்கள் சக்தி	–	72,293,485.16	–	121,794,230	–	194,087,715
மக்கள் போராட்ட முன்னணி	6,168,610	2,148,950	153,880	2,123,720	235,539	10,830,699
சஞ்சீவ குமார குணரத்ன	-	-	-	-	-	0
அசங்க நந்தன ஸ்ரீநாத்	–	–	–	75,000	–	75,000
விஜயரத்ன பண்டார ரத்நாயக்க	–	–	–	50,000	–	50,000
அருணலு ஜனதா பெரமுன	1,500,000	–	–	89,958.40	963,900.13	2,553,858.53
நந்திக பிரதீப் குமார	–	–	–	–	100,000	100,000
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி	-	-	-	-	-	0
ஐக்கிய சோசலிச கட்சி	–	–	–	549,800	–	549,800
ஏ. பிரான்சிஸ்	-	-	-	-	-	0
ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி	–	–	–	50,000	–	50,000
ருஹுணு ஜனதா பெரமுன	-	-	-	-	-	0
இலங்கை சோசலிச கட்சி	352,750	–	–	130,250	30,780	513,780
எச். ஆனந்த சுனில் சாந்த பெர்னாண்டோ	–	–	–	39,500	–	39,500
சமீர தினேஷ் கலேஆரச்சி	-	-	-	-	-	0
டி.எம். தனஞ்சய பண்டார தீகல்ல	–	–	–	–	50,000	50,000
தேசிய அபிவிருத்தி முன்னணி	-	-	-	-	-	0
நவ சிஹல உருமய	-	-	-	-	-	0
எச்.என்.கே. கசுன் கயாஷான்	–	–	–	–	50,000	50,000
சரத் நந்த சில்வா	682,000	1,000,000	500,000	540,000	–	2,722,000
தேசிய ஜனநாயக முன்னணி	-	-	-	-	-	0

இலங்கை தொழிலாளர் கட்சி	-	-	-	-	-	0
அபே ஜனபல கட்சி	-	-	-	-	-	0
நவ சமசமாஜ கட்சி	17,000	–	–	115,390	76,600	208,990
சமாஜவாதி சமனத கட்சி	152,525	–	–	301,001	102,800	556,326
அபிநவ நிவஹல் பெரமுன	11,000	–	–	103,333	288,050	402,383

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அரசியல் கட்சிகள் தங்களின் தேர்தல் பிரச்சாரச் செலவினங்களை எவ்வாறு கையாண்டன என்பதை மேலே உள்ள அட்டவணை விளக்குகிறது. இத்தேர்தல் காலத்தில், செலவினங்களில் இரண்டு பிரதான போக்குகளை அவதானிக்க முடிகிறது:

1. முழுமையாக வேட்பாளர்களாலேயே நிர்வகிக்கப்படும் பிரச்சாரங்கள், மற்றும்
2. முழுமையாக அரசியல் கட்சிகளாலேயே நிர்வகிக்கப்படும் பிரச்சாரங்கள்

சில சந்தர்ப்பங்களில், வேட்பாளரும் அரசியல் கட்சியும் இணைந்து தங்கள் செலவினங்களைப் பகிர்ந்து கொள்வதுண்டு. எனினும், இத்தேர்தலில் முன்னிலையிலிருந்த முதல் ஐந்து வேட்பாளர்களிடையே இத்தகையதொரு கூட்டு ஏற்பட்டை ஒரேயொரு சந்தர்ப்பத்தில் மாத்திரமே காணக்கிடைத்தது. குறித்த சில சூழ்நிலைகளில், வேட்பாளரால் நியமிக்கப்படும் பிரதிநிதிகளும் பிரச்சாரத்தின் சார்பாக நிதியைப் பெற்றுக்கொள்வதன் மூலமோ அல்லது செலவிடுவதன் மூலமோ பங்களிக்க முடியும். எனினும், இத்தேர்தலில் அத்தகைய பிரதிநிதிகளின் தலையீடுகள் எதுவும் பதிவாகவில்லை.

- ஒட்டுமொத்த முடிவுகளின் அடிப்படையில், முதல் ஐந்து ஜனாதிபதி வேட்பாளர்களின் பிரச்சாரச் செலவின ஒப்பீடு பின்வருமாறு:

- அநுர குமார திஸாநாயக்க: பெற்ற வாக்குகள் 5,634,915 – மொத்தச் செலவு, ரூபாய் 527,999,889.38 (குறித்த வேட்பாளரின் தேர்தல் பிரச்சார நிதி அறிக்கைகள், அவருக்கு எந்த வருமானமும் கிடைக்கவில்லை எனவும் அவரால் எந்த செலவினமும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டுகின்றன. இதற்கமைய அனைத்துத் தேர்தல் பிரச்சாரச் செலவினங்களும் தேசிய மக்கள் சக்தியினால் (**NPP**) முழுமையாகப் பொறுப்பேற்கப்பட்டுள்ளன).

- சஜித் பிரேமதாச: பெற்ற வாக்குகள் 4,363,035 – மொத்தச் செலவு, ரூபாய் 1,130,346,239.64 (அவரது அரசியல் கட்சியினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் உட்பட).

- ரணில் விக்ரமசிங்க: பெற்ற வாக்குகள் 2,299,767 – மொத்தச் செலவு, ரூபாய் 990,327,687.16 (அவரது தேர்தல் செலவின அறிக்கையானது, போதிய விவரங்களற்ற, சுருக்கமான ஒற்றைப் பக்க சமர்ப்பிப்பாகக் காணப்பட்டது. அவ் அறிக்கையில் குறிப்பிட்டுருந்த செலவினத் தொகையைக் கருத்திற் கொள்ளும்போது, மீளாய்வு செய்யப்பட்ட சமர்ப்பிப்புகளுள் மிகக் குறைந்த தெளிவும் குறைந்த விரிவுத் தன்மையும் கொண்ட அறிக்கைகளில் ஒன்றாக இது காணப்படுகிறது. மேலும், அவருக்காக வேட்புமனு தாக்கல் செய்த வாக்காளர் எவ்வித செலவின அறிக்கையையும் சமர்ப்பிக்கவில்லை).

- லக்ஷ்மன் நாமல் ராஜபக்ஷ: பெற்ற வாக்குகள் 342,781 – மொத்தச் செலவு, ரூபாய் 388,939,085.00 (அனைத்துப் பிரச்சாரச் செலவுகளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினால் (**SLPP**) பொறுப்பேற்கப்பட்டிருந்தன. இருப்பினும், அக்கட்சியின் பிரதான அறிக்கையில் காட்டப்பட்டுள்ள ரூபாய் 388,939,085.00 செலவினமானது, அவர்களது பட்டயக் கணக்கறிஞரால் சான்றளிக்கப்பட்ட ரூபாய் 388,393,085.00 செலவினத்துடன் முரண்படுகின்றது. இது ரூபாய் 546,000.00 அளவிலான தீர்க்கப்படாத கணக்கு வேறுபாட்டை (**Unresolved variance**) ஏற்படுத்தியுள்ளது).

- அரியநேத்திரன் பாக்கியசெல்வம்: பெற்ற வாக்குகள் 226,343 (அவரோ அல்லது அவருக்காக வேட்புமனு தாக்கல் செய்த அரசியல் கட்சியோ/தனிநபரோ தேர்தல் ஆணைக்குழுவிற்கு எவ்வித செலவின அறிக்கையையும் சமர்ப்பிக்கவில்லை).

- திலித் ஜயவீர: பெற்ற வாக்குகள் 122,396 - மொத்தச் செலவு, ரூபாய் 324,643,246.05 (அவர் பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் கட்சி, ஒட்டுமொத்த தேர்தல் பிரச்சாரத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் எதனையும் குறிப்பிடவில்லை).

இத்தரவுகளின்படி, முன்னணியில் இருந்த முதல் ஐந்து வேட்பாளர்களுள் அனுர குமார திசாநாயக்க மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகிய இருவரது தேர்தல் பிரச்சாரச் செலவுகளையும் அவர்களது அரசியல் கட்சிகளே முழுமையாகப் பொறுப்பேற்றுள்ளமை புலனாகிறது. சஜித் பிரேமதாசவின் மொத்தத் தேர்தல் பிரச்சாரச் செலவில் 20.43% ஐ அவரது அரசியல் கட்சி பொறுப்பேற்றிருந்தது. அதேநேரம், அரியநேத்திரன் பாக்கியசெல்வம் தனது தேர்தல் பிரச்சார செலவின அறிக்கையினை தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவில்லை.

பொதுவாக, இலங்கையில் தேர்தல் பிரச்சாரங்களின் போது வேட்பாளர்களுக்கோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளுக்கோ உத்தியோகபூர்வமற்ற முறையில் முறைசாரா நன்கொடைகள் வழங்கப்படுவது வழமையாகும். எனினும், இந்த அறிக்கைகளின்படி இரண்டு சாத்தியக்கூறுகளைக் கருத்தில் கொள்ள முடியும். அதாவது, அநுர குமார திஸாநாயக்க அத்தகைய நிதி எதனையும் பெற்றுக்கொள்ளாது இருந்துள்ளார், அல்லது அவர் அதனை நிராகரித்து, கிடைக்கப்பெறக்கூடிய அனைத்து நன்கொடைகளையும் தனது அரசியல் கட்சி நிதிக்கே வழங்கச் செய்துள்ளார். அத்தோடு, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி (ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி) தனது தேர்தல் பிரச்சாரத்திற்காகத் தனிப்பட்ட முறையில் எவ்வித நிதியையும் செலவழிக்காமலேயே தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார் என்பதும் இங்கு கவனிக்கத்தக்க மற்றொரு முக்கியமான விடயமாகும்.

அட்டவணை 05 - அரசியல் கட்சிகளின் வருமான வகைகள்

கட்சியின் பெயர்	தனிநபர் பங்களிப்பு	கூட்டுப் பங்களிப்பு	பொருட்களினாலான நன்கொடை - வாகனம்/வாடகை வாகனம், எரிபொருள்	பொருட்களினாலான நன்கொடை - பொருட்கள்	பொருட்களினாலான நன்கொடை - அலுவலகம்	மொத்தத் தொகை
தேசிய மக்கள் சக்தி	68,390,484	467,373,321	2,306,000	1,042,000	783,500	539,895,305
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன	105,120,000	130,000	-	-	-	105,250,000
ஐக்கிய மக்கள் சக்தி	144,087,715.04	50,000,000	-	-	-	194,087,715.04
மக்கள் போராட்ட முன்னணி	3,900,125	6,935,217.5	-	-	-	10,835,342.50
சஞ்சீவ குமார குணரத்ன	-	-	-	-	-	0
அசங்க நந்தன ஸ்ரீநாத்	75,000	-	-	-	-	75,000
விஜயரத்ன பண்டார ரத்நாயக்க	50,000	-	-	-	-	50,000
அருணலு ஜனதா பெரமுன	2,600,000	1,500,000	-	-	-	4,100,000
நந்திக பிரதீப் குமார	-	-	-	-	-	0
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி	-	-	-	-	-	0
ஐக்கிய சோசலிச கட்சி	-	549,800	-	-	-	549,800
ஏ. பிரான்சிஸ்	4,700	-	-	-	-	4,700

ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி	50,000	-	-	-	-	50,000
ருஹுணு ஜனதா பெரமுன	4,000,000	-	-	-	-	4,000,000
இலங்கை சோசலிச கட்சி	-	513,780	-	-	-	513,780
எச். ஆனந்த சுனில் சாந்த பெர்னாண்டோ	114,500	-	-	-	-	114,500
சமீர தினேஷ் காலிஆரச்சி	-	-	-	-	-	0
தீகல்ல முதியான்சலாகே தனஞ்சய பண்டார	-	-	-	-	-	0
தேசிய அபிவிருத்தி முன்னணி	-	-	-	-	-	0
நவ சிஹல உருமய	-	-	-	-	-	0
எச்.என்.கே. கசுன் கயாஷான்	50,000	-	-	-	-	50,000
சரத் நந்த சில்வா	322,000	2,400,000	-	-	-	2,722,000
தேசிய ஜனநாயக முன்னணி	-	-	-	-	-	0
இலங்கை தொழிலாளர் கட்சி	-	-	-	-	-	0
அபே ஜனபல கட்சி	-	-	-	-	-	0
நவ சமசமாஜ கட்சி	209,000	-	-	-	-	209,000
சமாஜவாதி சமனத கட்சி	360,336	-	-	-	-	360,336
அபிநவ நிவஹல் பெரமுன	280,100	-	-	-	-	280,100

ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் காலப்பகுதி முழுவதும் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் அல்லது அவர்களது உத்தியோகபூர்வ பிரதிநிதிகளுக்குக் கிடைத்த நிதி மற்றும் நன்கொடைகளை மேலே உள்ள அட்டவணை கோடிட்டுக் காட்டுகிறது. இந்த ஆய்வானது ஐந்து பிரதான துறைகளை மையமாகக் கொண்டு பல முக்கிய பகுதிகளை ஆராய்ந்துள்ளது. அவை: தனிநபர் நிதியுதவிகள், கூட்டு நிதியுதவிகள், வாகனங்கள், வாடகை வாகனங்கள் மற்றும் எரிபொருட்களாகக் கிடைத்த பொருள் வடிவ நன்கொடைகள், பிரச்சாரப் பொருட்களாகக் கிடைத்த நன்கொடைகள் மற்றும் அலுவலக வசதிகளாகக் கிடைத்த பொருள் வடிவ நன்கொடைகள் ஆகியவையாகும்.

பிரச்சார நிதியில் பெரும்பாலானவை தனிநபர்களின் நிதியுதவிகள் மற்றும் கூட்டு நிதியுதவிகள் ஆகிய இரண்டு முக்கிய வழிகளிலேயே கிடைத்துள்ளன என்பது இத் தரவுகளிலிருந்து தெளிவாகப் புலனாகிறது.

தனிநபர் நன்கொடையாளர்களிடமிருந்து அதிகளவிலான நிதி உதவிகளைப் பெற்றுக்கொண்ட அரசியல் கட்சிகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

- ஐக்கிய மக்கள் சக்தி – ரூ. 144,087,715.04
- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன – ரூ. 105,120,000

- தேசிய மக்கள் சக்தி – ரூ. 68,390,484
- மக்கள் போராட்ட முன்னணி – ரூ. 3,900,125

இதற்கமைய, தனிநபர் நன்கொடையாளர்களிடமிருந்து அதிகளவிலான நிதியைப் பெற்றுக்கொண்ட அரசியல் கட்சியாக தேசிய மக்கள் சக்தி விளங்குவதை அவதானிக்க முடிகிறது. இக்கட்சியின் மொத்தத் தேர்தல் செலவினமான ரூபாய் 936,258,524.60 இல் (வேட்பாளரால் திரட்டப்பட்ட தொகை தவிர்ந்த), தனிநபர்களிடமிருந்து பெறப்பட்ட வருமானம் ரூபாய் 144,087,715.04 ஆகும். இது மொத்தச் செலவினத்தின் 15.39% ஐப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

மேலும், கூட்டுப் பங்களிப்புகளைக் (Collective Contributions) கருத்தில் கொள்ளும்போது, குழு அடிப்படையிலான நன்கொடைகள் மூலம் அதிகளவிலான நிதியைப் பெற்றுக்கொண்ட அரசியல் கட்சியாக தேசிய மக்கள் சக்தி விளங்குவது தெளிவாகிறது. இக்கட்சியானது இதன் மூலம் ரூபாய் 467,373,321.00 ஐத் திரட்டியுள்ளது. அவர்களின் மொத்த நிதித் தொகையான ரூபாய் 527,999,889.38 இன் அடிப்படையில் பார்க்கும்போது, பெற்றுக்கொள்ளப்பட்ட கூட்டு நிதியின் விகிதம் 88.54% ஆகக் காணப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய அரசியல் கட்சியானது தனது பிரச்சார வளங்களின் பெரும்பகுதியை கூட்டுப் பங்களிப்புகள் அல்லது பொதுநிதி திரட்டுதல் (Crowdfunding) முயற்சிகள் மூலமாகவே திரட்டியுள்ளது என்பதை இப் புள்ளிவிவரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

அட்டவணை 06 - ஜனாதிபதி வேட்பாளர்களால் மேற்கொள்ளப்பட்ட அதிகூடிய தேர்தல் பிரச்சார செலவினம் முதல் மிகக் குறைந்த தேர்தல் பிரச்சார செலவினம் வரையிலான விவரம்

சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் பிரச்சார நிதி அறிக்கைகளின்படி,

நிலை	வேட்பாளரின் பெயர்	செலவிடப்பட்ட மொத்தத் தொகை (ரூபாயில்)
1	ரணில் விக்ரமசிங்க	990,327,687.16
2	சஜித் பிரேமதாச	936,258,524.60
3	திலித் ஜயவீர	324,643,246.05
4	விஜயதாச ராஜபக்ஷ	60,445,320.00
5	சரத் பொன்சேகா	33,588,901.72
6	ஜனக ரத்நாயக்க	24,876,899.00
7	கீர்த்தி விக்ரமரத்ன	13,590,158.00
8	அஜந்தா டி சொய்சா	3,886,500.00
9	அகம்பொடிகே பிரசங்க சுரஞ்சீவ அனோஜ் டி சில்வா	3,698,800.00
10	அநுருத்த ரொஷான் ரணசிங்க	2,722,000.00
11	பேமசிறி மானகே	2,000,000.00
12	லலித் டி சில்வா	1,647,250.50
13	அபூபக்கர் முஹம்மது இன்பாஸ்	1,550,000.00
14	விக்டர் பெரேரா	1,300,000.00

15	மயில்வாகனம் திலகராஜா	1,092,530.00
16	அநுர சிட்னி ஜயரத்ன	1,000,000.00
17	சிறிதுங்க ஜயசூரிய	806,200.00
18	மஹிந்த தேவகே	513,780.00
19	கே.ஏ. குலரத்ன	500,000
20	நாமல் ராஜபக்ஷ	406,566
21	சரத் பண்டாரநாயக்க	357,499
22	திஸாநாயக்க முதியான்சலாகே பண்டாரநாயக்க	327,500
23	அக்மீமன தயாரதன தேரர்	265,200
24	ஓஷல ஹேரத்	212,283
25	பிரியந்த விக்ரமசிங்க	208,990
26	பானி விஜேசிறிவர்தன	189,884
27	கே.கே. பியதாச	175,000
28	அநுருத்த பொல்கம்பொல	92,500
29	நுவன் போபேகே	50,000
30	சிறிபால அமரசிங்க	தனிப்பட்ட செலவினங்கள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை
31	கே.ஆர். கிருஷான்	தனிப்பட்ட செலவினங்கள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை
32	அநுர குமார திஸாநாயக்க	தனிப்பட்ட செலவினங்கள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை
33	சரத் மனமேந்திர	தனிப்பட்ட செலவினங்கள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை
34	லக்ஷ்மன் நாமல் ராஜபக்ஷ	தனிப்பட்ட செலவினங்கள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை
35	ஏ.எஸ்.பி. லியனகே	தனிப்பட்ட செலவினங்கள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை
36	சரத் கீர்த்திரத்ன	தனிப்பட்ட செலவினங்கள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை
37	அரியநேந்திரன் பாக்கியசெல்வம்	தனிப்பட்ட செலவினங்கள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை
38	பத்தரமுல்லே சீலரதன தேரர்	தனிப்பட்ட செலவினங்கள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை

ஜனாதிபதி வேட்பாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் பிரச்சாரச் செலவினத் தரவுகள், மிகக் குறைந்த எண்ணிக்கையிலான முன்னணி அரசியல் போட்டியாளர்களிடையே நிதி வளங்கள் பாரியளவில் குவிந்திருப்பதை வெளிப்படுத்துகின்றன. இந்தச் செலவின போக்கானது, 2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஏனைய பெரும்பாலான வேட்பாளர்களுக்கும் அதிகூடிய செலவினத்தை மேற்கொண்ட வேட்பாளர்களுக்கும் இடையே நிலவும் கணிசமான ஏற்றத்தாழ்வை புலப்படுத்துகிறது. மீளாய்வு செய்யப்பட்ட 38 வேட்பாளர்களுள், ரணில் விக்ரமசிங்க அவர்களினால் அதிகூடிய தேர்தல் பிரச்சாரச் செலவினம் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அதன் தொகை ரூ. 990.3 மில்லியன் ஆகும். அவரைத் தொடர்ந்து சஜித் பிரேமதாச அவர்கள் ரூ, 936.3 மில்லியன் செலவினத்தை அறிக்கையிட்டுள்ளார். இவ்விரு வேட்பாளர்களும் இணைந்து ஒட்டுமொத்தமாக ரூ.1.9 பில்லியனிற்கும் அதிகமான தேர்தல் பிரச்சாரச் செலவினத்தை மேற்கொண்டுள்ளனர். இது இரு பிரதான அரசியல் பிரச்சாரங்களும் அனுபவித்த பரந்த நிதி சார் அனுகூலத்தை விளக்குகிறது. திலித் ஜயவீர அவர்கள் ரூ. 324.6 மில்லியன் செலவினத்தை அறிக்கையிட்டு மூன்றாம் நிலையில் உள்ளார். ஆயினும் கூட, மூன்றாவது அதிகூடிய செலவினத்தை மேற்கொண்டவருக்கும் இரு முன்னணி வேட்பாளர்களுக்கும் இடையே குறிப்பிடத்தக்க இடைவெளி காணப்பட்டது. அவரால் பதிவு செய்யப்பட்ட செலவினமானது, அதிகூடிய செலவினத்தை மேற்கொண்ட வேட்பாளரின் செலவில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு மட்டுமேயாகும். இது முதன்மைப் போட்டியாளர்களாகக் கருதப்படும் வேட்பாளர்களுக்கு இடையிலும் கூட நிலவும் நிதி ரீதியான ஏற்றத்தாழ்வை நிரூபிக்கிறது.

முன்னணி மூன்று வேட்பாளர்களுக்கு அடுத்ததாக, தேர்தல் பிரச்சாரச் செலவினங்கள் மிக வேகமாக குறைவடைந்துள்ளன. நான்காவது அதிகூடிய செலவினத்தை மேற்கொண்ட வேட்பாளரான கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ அவர்கள், ரூ. 60.4 மில்லியனை தனது தேர்தல் பிரச்சாரச் செலவாக அறிக்கையிட்டுள்ளார். இது முன்னணி மூன்று வேட்பாளர்களின் செலவினங்களுடன் ஒப்பிடுகையில் ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டுகிறது. இதேபோல், ஐந்தாம் நிலையிலிருந்து வரிசைப்படுத்தப்பட்ட வேட்பாளர்கள் கணிசமாகக் குறைந்த அளவிலான செலவினங்களையே அறிக்கையிட்டுள்ளதுடன், அவர்களுள் ஒரு சிலரே தேர்தல் பிரச்சாரச் செலவினங்களில் ரூ.10 மில்லியனைத் தாண்டி செலவு செய்திருந்தனர். பெரும்பாலான வேட்பாளர்கள் பெருமளவில் வரையறுக்கப்பட்ட நிதி வளங்களுடனேயே இயங்கியுள்ளனர். மீளாய்வு செய்யப்பட்ட 38 வேட்பாளர்களுள், பெரும்பாலானோர் ரூ. 5 மில்லியனிற்கும் குறைவான செலவினத்தையே அறிக்கையிட்டுள்ளதுடன், பல வேட்பாளர்கள் ரூ.1 மில்லியனிற்கும் குறைவான தொகையையே பதிவு செய்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தலில் பெருமளவிலான வேட்பாளர்கள் பங்கேற்ற போதிலும், தேர்தல் பிரச்சார வளங்களுக்கான அணுகல் தொடர்ந்து பாரிய ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டிருந்ததையே இது உணர்த்துகிறது.

நிதி சார் தகவல்களை வெளிப்படுத்துதல் தொடர்பான நடைமுறைகளில் நிலவும் வேறுபாடுகளையும் இத்தரவுகள் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. ஆறு வேட்பாளர்கள் எவ்வித தனிப்பட்ட செலவினங்களும் மேற்கொள்ளப்படவில்லை என அறிக்கையிட்டுள்ள அதேவேளை, மூன்று வேட்பாளர்கள் தங்கள் நிதிப் பிரகடனங்களைச் சமர்ப்பிக்கவில்லை. சில வேட்பாளர்கள் அரசியல் கட்சிகள் அல்லது ஏனைய தேர்தல் பிரச்சார ஆதரவுப் பொறிமுறைகளில் தங்கியிருந்திருக்கலாம் என்ற போதிலும், விரிவான நிதித் தகவல்கள் இல்லாதிருப்பது, அவர்களின் தேர்தல் பிரச்சாரங்களின் போது பயன்படுத்தப்பட்ட உண்மையான வளங்களை முழுமையாகத் மதிப்பிடும் ஆற்றலைக் கட்டுப்படுத்துகிறது.

ஒட்டுமொத்தமாக இச்செலவின போக்கானது, ஒரு சில குறிப்பிட்ட தரப்பினரிடம் மாத்திரம் முடங்கியுள்ள ஒரு தேர்தல் பிரச்சார நிதிச் சூழலை அத்தாட்சிப்படுத்துகின்றது. இங்கு பெரும்பாலான போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில், மிகக் குறைந்த எண்ணிக்கையிலான வேட்பாளர்களே பெருமளவில் அதி கூடுதலான நிதி வளங்களுக்கான அணுகலைக் கொண்டிருந்தனர். இந்த ஏற்றத்தாழ்வானது, வேட்பாளர்களுக்கு இடையிலான சமவாய்ப்புகள், அரசியல் கட்சி நிதியளிப்பின் வகிபாகம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களில் அனைவருக்கும் சமமானதொரு போட்டிக் களத்தை உறுதி செய்வதற்கு தற்போதுள்ள தேர்தல் பிரச்சார நிதி ஒழுங்குமுறைகள் போதுமானவையா என்பது குறித்த முக்கியமான கேள்விகளை எழுப்புகின்றது.

மூன்று வேட்பாளர்கள் தங்களது அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவில்லை என்பது இங்கு கவனத்திற்குரிய ஒரு முக்கிய விடயமாகும். இதனால் அவர்களின் தேர்தல் நிதி எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதைத் தீர்மானிக்க முடியாமல் போயுள்ளது. அதேநேரம், மேலே கூறியது போல, ஆறு வேட்பாளர்கள் தமக்கு எவ்வித செலவினமும் ஏற்படவில்லை என்று குறிப்பிட்டிருப்பது ஆச்சரியமளிக்கும் மற்றொரு விடயமாகும். இது ஒரு தேர்தல் பிரச்சாரக் களத்தில் வழக்கத்திற்கு மாறான ஒரு போக்காகவேப் பார்க்கப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தலானது முழு நாட்டையும் ஒரே தேர்தல் தொகுதியாகக் கருதுவதுடன், ஏறத்தாழ இரண்டு மாத கால தேர்தல் பிரச்சாரக் காலப்பகுதியைக் கொண்டிருப்பதைக் கருத்திற் கொள்ளும்போது, ஆறு வேட்பாளர்கள் தாம் எவ்வித செலவினத்தையும் மேற்கொள்ளவில்லை என வெளிப்படுத்தியமையானது மிகவும் முரணானதும் புள்ளிவிவர ரீதியாகச் சாத்தியமற்றதொன்றாகும். பொதுவான எண்கணித வழுக்களுக்கு அப்பால், இச்சமர்ப்பிப்புகள் பாரதூரமான நிர்வாகக் குறைபாடுகளையும் கொண்டிருந்தன. சில வேட்பாளர்கள் அனுமதிக்கப்பட்ட உச்ச செலவின வரம்பைத் தவறாகக் குறிப்பிட்டிருந்த அதேவேளை, ஏனையோர் தங்களது பிரகடனங்களில் கையொப்பமிடத் தவறியிருந்தனர். அத்துடன், செலவின விவரங்களின் முக்கிய பகுதிகள் தலைகீழாக ஸ்கேன் செய்யப்பட்டு ஒட்டப்பட்டிருந்தமையால், இவ்வறிக்கைகளைப் பொதுமக்கள் வாசித்துப் புரிந்துகொள்ளும் தன்மை (**Public readability**) கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

இச் செலவினத் தரவுகளில் அவதானிக்கப்பட்ட மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் யதெனில், வெற்றி பெற்ற வேட்பாளருக்கும் பிரதான எதிர்க்கட்சி வேட்பாளருக்கும் இடையே காணப்பட்ட ஒப்பீட்டடிப்படையிலான வேறுபாடு ஆகும். 2024 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற வேட்பாளர் தனது தேர்தல் பிரச்சாரத்திற்காக எவ்வித தனிப்பட்ட செலவையும் மேற்கொள்ளவில்லை என குறிப்பிட்டுள்ள அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவராகப் போட்டியிட்ட வேட்பாளர் தனிப்பட்ட ரீதியில் அண்ணளவாக ரூ. 1 பில்லியனைச் செலவழித்துள்ளதுடன், பிற வழிகளினூடாகவும் தேர்தல் நிதி உதவிகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இந்த முக்கிய வேறுபாடானது, முதன்மை அரசியல் தரப்பினரால் கையாளப்பட்ட வெவ்வேறான தேர்தல் பிரச்சார நிதி சார் அணுகுமுறைகளை சுட்டிக் காட்டுவதுடன், தேர்தல் பிரச்சாரச் செலவினம், வளத் திரட்டல் மற்றும் தேர்தல் முடிவுகள் ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்பு குறித்து பல முக்கியமான கேள்விகளை எழுப்புகிறது. அதிக தேர்தல் பிரச்சாரச் செலவினமானது தேர்தல் வெற்றிக்கான உத்தரவாதமாக அமையாது என்பதை இத்தரவுகள் உணர்த்துவதுடன், தேர்தல் முடிவுகளைத் தீர்மானிப்பதில் வாக்காளர் விருப்பத்தேர்வுகள், அரசியல் இயக்கங்கள், கட்சிக் கட்டமைப்புகள் மற்றும் தேர்தல் பிரச்சார மூலோபாயங்கள் போன்ற பரந்த காரணிகளை ஆராய்வதன் அவசியத்தையும் இது வலியுறுத்துகிறது.

அட்டவணை 07 - அரசியல் கட்சிகள் அல்லது வேட்புமனுவை தாக்கல் செய்த வாக்காளர்களில் அதிகூடிய செலவினை மேற்கொண்டோர் முதல் மிகக் குறைந்த செலவினை மேற்கொண்டோர் வரையிலான விவரம்

அரசியல் கட்சியின் பெயர் / வேட்புமனு தாக்கல் செய்த நபர்	செலவிடப்பட்ட மொத்தத் தொகை (ரூபாயில்)
தேசிய மக்கள் சக்தி	527,999,889.38
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன	388,393,085.00
ஐக்கிய மக்கள் சக்தி	194,087,715.04
மக்கள் போராட்ட முன்னணி	10,830,699.00
சரத் நந்த சில்வா	2,722,000.00
அருணலு ஜனதா பெரமுன	2,553,858.53
சமாஜவாதி சமனத கட்சி	556,326.00
ஐக்கிய சோசலிச கட்சி	549,800.00
இலங்கை சோசலிச கட்சி	513,780.00

அபிநவ நிவஹல் பெரமுன	280,100.00
நவ சமசமாஜ கட்சி	208,990.00
எச். ஆனந்த சுனில் சாந்த பெர்னாண்டோ	114,500.00
நந்திக பிரதீப் குமார	100,000.00
அசங்க நந்தன ஸ்ரீநாத்	75,000.00
விஜயரத்ன பண்டார ரத்நாயக்க	50,000.00
ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி	50,000.00
தீகல்ல முதியான்சலாகே தனஞ்சய பண்டார தீகல்ல	50,000.00
ஹபராதுவ நாணயக்கார கந்தம்பி கசுன் கயாஷான்	50,000.00
ருஹுணு ஜனதா பெரமுன	செலவினங்கள் இல்லை
சஞ்சீவ குமார குணரத்ன	செலவினங்கள் இல்லை
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி	செலவினங்கள் இல்லை
ஏ. பிரான்சிஸ்	செலவினங்கள் இல்லை
சமீர தினேஷ் காலிஆரச்சி	செலவினங்கள் இல்லை
தேசிய அபிவிருத்தி முன்னணி	செலவினங்கள் இல்லை
நவ சிஹல உருமய	செலவினங்கள் இல்லை
தேசிய ஜனநாயக முன்னணி	செலவினங்கள் இல்லை
இலங்கை தொழிலாளர் கட்சி	செலவினங்கள் இல்லை
அபே ஜனபல கட்சி	செலவினங்கள் இல்லை

அரசியல் கட்சிகள் மற்றும் வேட்புமனு தாக்கல் செய்த குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் பிரச்சாரச் செலவின அறிக்கைகள், வெறும் மூன்று தரப்பினருக்குள்ளேயே நிதி அதிகாரம் பாரியளவில் குவிந்திருப்பதை வெளிப்படுத்துகின்றன. 38 பேர் தங்கள் வருமானம் மற்றும் செலவின அறிக்கைகளை சமர்ப்பித்திருந்த போதிலும், பெரும்பாலானோர் மிகக் குறைந்ததளவான நிதியையே செலவழித்திருந்தனர். இது ஒரு சில பிரதான அரசியல் கட்சிகள் மாத்திரம் நிதியியல் களத்தில் ஆதிக்கம் செலுத்துவதற்கு வழிவகுத்துள்ளது. இப்பட்டியலில் தேசிய மக்கள் சக்தி (NPP) ரூ.527.9 மில்லியனைச் செலவிட்டு முதல் நிலையில் உள்ளது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன (SLPP) ரூ. 388.4 மில்லியனுடன் இரண்டாம் நிலையிலும், ஐக்கிய மக்கள் சக்தி (SJB) ரூ. 194.1 மில்லியனுடன் மூன்றாம் நிலையிலும் உள்ளன. கூட்டுத்தொகையாக, இம்மூன்று கட்சிகளும் தேர்தல் பிரச்சாரத்திற்காக ரூ.1.1 பில்லியனிற்கும் அதிகமான தொகையைத் தேர்தலில் முதலீடு செய்து, தேர்தல் பிரச்சார வளங்களில் பெரும்பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளன. இதற்கு நேர்மாறாக, ஏனைய அனைவரும் அந்த நிதி ஒதுக்கீட்டின் மிகச் சிறிய தொகையைக் கொண்டே இயங்கியுள்ளனர். நான்காவது அதிகூடிய செலவினத்தை மேற்கொண்ட மக்கள் போராட்ட முன்னணி ரூ.10.8 மில்லியனை மாத்திரமே தம் தேர்தல் பிரச்சார செலவினமாக குறிப்பிட்டுள்ளது. இந்தப் பெரும் வீழ்ச்சியானது, முன்னணி மூன்று கட்சிகளுக்கும் சிறிய அரசியல் குழுக்கள் அல்லது சுயேச்சை வேட்பாளர்களுக்கும் இடையே நிலவும் பாரதூரமான நிதி சார் இடைவெளியை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

நான்காவது நிலைக்கு பின்னர், இந்த எண்கள் இன்னும் வேகமாக குறைவடைகின்றன. பெரும்பாலான கட்சிகளும் வேட்புமனு தாக்கல் செய்த குழுக்களும் ரூ.1 மில்லியனிற்கும் குறைவாகவே செலவிட்டுள்ளதுடன், அவர்களில் ஒன்பது தரப்பினர் எவ்வித செலவினத்தையும் மேற்கொள்ளவில்லை எனக் குறிப்பிட்டிருந்தனர். குறைந்தளவிலான இச் செலவினங்கள், இச்சிறிய தேர்தல் பிரச்சாரங்கள் உண்மையில் எவ்வளவு தூரம் ஈடுபாட்டுடன் இயங்கின என்பது குறித்தும், அவர்களின் நிதி வரம்புகள் அல்லது அவர்கள் அறிக்கையில் குறிப்பிடாத வேறு ஆதரவு வழிமுறைகளில் தங்கியிருந்தார்களா என்பது குறித்தும் உண்மையான கேள்விகளை எழுப்புகிறது. இறுதியில் இத் தரவுகள், நன்கு நிறுவப்பட்ட இவ் அரசியல் கட்சிகள் தேர்தல் பிரச்சார நிதியளிப்பினை எவ்வாறு தங்கள் கட்டுப்பாட்டுக்குள் உறுதியாக வைத்திருக்கின்றன என்பதைக் காட்டுகின்றன. இத்தேர்தல் பல வேட்பாளர்களுக்குப் போட்டியிட வாய்ப்பளித்த போதிலும், பணம் ஒரு சிலரின் கைகளிலேயே தங்கியிருந்தது. இந்த பாரிய இடைவெளியானது, ஒரு வேட்பாளர் நாடளாவிய ரீதியில் தேர்தல் பிரச்சாரத்தை எவ்வளவு திறம்பட முன்னெடுக்க முடியும், ஊடக கவனத்தைப் பெற அல்லது ஊடக ஒளி/ஒலிபரப்பில் இடம்பெற முடியும், வாக்காளர்களை ஒன்றுதிரட்ட முடியும் மற்றும் அவர்களின் செய்தியை மக்களிடம் கொண்டு சேர்க்க முடியும் என்பதில் தவிர்க்க முடியாத தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இருப்பினும், இச்செலவின நடைமுறைகள், கட்சி நிதி மற்றும் வேட்பாளர் நிதிகளுக்கு இடையே உள்ள ஒரு தனித்துவமான விரிசல் அல்லது வேறுபாட்டினையும் புலப்படுத்துகின்றன. கட்சியளவில் ஒட்டுமொத்தமாக அதிகூடிய செலவினத்தை தேசிய மக்கள் சக்தி அறிக்கையிட்டுள்ள போதிலும், அதன் வேட்பாளரான அநுர குமார திஸாநாயக்க அவர்கள் தனிப்பட்ட ரீதியில் எவ்வித தேர்தல் பிரச்சார செலவினத்தையும் மேற்கொள்ளவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த வேறுபாடானது, தேர்தல் பிரச்சார நிதிகள் வெவ்வேறு முகாம்களில் எவ்வாறு வேறுபட்ட முறையில் கையாளப்படுகின்றன என்பதைக் காட்டுகிறது. அதாவது தேர்தல் செலவினங்கள் பற்றிய துல்லியமான ஒரு பார்வையை அல்லது படத்தை பெறுவதற்கு ஆய்வாளர்கள் கட்சி மற்றும் வேட்பாளர் தரவுகள் இரண்டையும் ஒன்றாக இணைத்து பார்க்க வேண்டும் என்பதை இது குறிக்கிறது.

தற்போதைய சட்டதிட்டங்கள் கட்டாய அறிக்கையிடல் மூலம் கூடுதல் வெளிப்படைத்தன்மையை வெற்றிகரமாகக் கொண்டு வந்திருந்தாலும், கிடைக்கப்பெறும் உண்மையான தரவுகள் சமனற்றதொரு போட்டிக் களத்தையே வெளிக்காட்டுகின்றன. குறிப்பிட்ட சில தரப்பினரிடையே பணம் இவ்வாறு குவிந்திருப்பது, நியாயமான போட்டி, சம வாய்ப்பு மற்றும் ஒரு தேசியத் தேர்தலில் சிறிய அரசியல் தரப்பினரால் உண்மையாகவே போட்டியிட முடியுமா என்பது குறித்த ஆழமான கரிசனைகளை எழுப்புகின்றது.

அட்டவணை 08 - தேர்தல் பிரச்சார நிதி தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துதல்: தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் மாவட்ட ரீதியான செலவின அறிக்கைகளின் சுருக்கம் (பாராளுமன்றத் தேர்தல் 2024)

மாவட்டம்	கட்சி/குழு	வேட்பாளரின் பெயர்	மொத்தச் செலவு (ரூபாவில்)	வருமானம் (ரூபாவில்)
களுத்துறை	NPP	நலிந்த ஜயதிஸ்ஸ	7,000.00	50,000.00 - சொந்த நிதிப் பங்களிப்பு
		நிலந்தி கொட்டஹச்சி	7,000.00	50,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		நிஹால் அபேசிங்க	7,000.00	40,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		சஞ்சீவ ரணசிங்க	7,000.00	30,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		தனுஷ்க ரங்கநாத்	7,000.00	25,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		ஓஷானி உமங்கா	7,000.00	45,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		சந்திம ஹெட்டியாரச்சி	7,000.00	100,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		நந்தன பத்மகுமார	7,000.00	25,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு
	SJB	அஜித் பெரேரா	2,220,134.20	2,220,134.20- (சொந்த நிதிப் பங்களிப்பு)
		ஜகத் விதான	4,340,900.00	574,127.00-நன்கொடையாளர் நிதிப் பங்களிப்புகள் 3,766,773.00-(சொந்த நிதிப் பங்களிப்பு
	NDF	ரோஹித அபேகுணவர்தன	2,094,723.00	2,036,973.00 (216,973.00 (சொந்த நிதிப் பங்களிப்பு) 1,219,800.00- (நன்கொடையாளர் நிதிப் பங்களிப்புகள்) 57,750.00-வெளிப்படுத்தப்படாத நிதியுதவி

மாவட்டம்	கட்சி/குழு	வேட்பாளரின் பெயர்	மொத்தச் செலவு (ரூபாவில்)	வருமானம் (ரூபாவில்)
கண்டி	NPP	கே.டி. லால் காந்த	389,400.00	449,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		ஜகத் மனுவர்ண	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-
		பிரசன்ன குணசேன	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-
		ஹன்ஸக விஜேமுனி	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-
		தனுர திஸாநாயக்க	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-
		ஈ.எம். பாஸ்நாயக்க	167,180.00	150,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		ரியாஸ் பாரூக்	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-
		துஷாரி ஜயசிங்க	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-
		முகமது பஸ்மின்	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-
	SJB	ரவூப் ஹக்கீம்	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-
		சமிந்திரானி கிரியெல்ல	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-
	NDF	அநுராத ஜயரத்ன	4,364,227.80	1,695,422.80- பொது நிதிப் பங்களிப்பு 2,668,805.00- சொந்த நிதிப் பங்களிப்பு

மாவட்டம்	கட்சி/குழு	வேட்பாளரின் பெயர்	மொத்தச் செலவு (ரூபாவில்)	வருமானம் (ரூபாவில்)
காலி	NPP	நளின் ஹேவகே	1,192,815.00	815,000.00- நன்கொடையாளர் நிதிப் பங்களிப்பு 500,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		ரத்ன கமகே	693,495.00	710,100.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		ஹசர லியனகே	212,900.00	240,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		நிஷாந்த சமரவீர	727,810.00	731,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		திலங்க ருக்மல்	846,100.00	870,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		நிஷாந்த பெரேரா	545,230.00	600,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		தி.க. ஜெயசுந்தர	855,355.00	700,000.00- பொது நிதிப் பங்களிப்பு
	SJB	கயந்த கருணாதிலக	4,772,747.00	1,000,000.00- பொது நிதிப் பங்களிப்பு மீதமுள்ள வருமானத்திற்கான நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
	SLPP	சானக சம்பத்	437,580.00	420,580.00- சொந்த நிதிப் பங்களிப்பு 17,000.00- நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
மாத்தறை	NPP	சுனில் ஹந்துன்னெத்தி	78,000.00	100,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		சரோஜா போல்ராஜ்	76,180.00	100,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		எல்.எம். அபேவிக்ரம	158,680.00	175,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		அர்கம் இலியாஸ்	234,580.00	250,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		கம்மந்தகே அஜந்தா	143,780.00	150,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		லால் பிரேமநாத்	78,000.00	100,000.00- பொது நிதிப் பங்களிப்பு
	SJB	சதுர கலபதி	3,985,575.00	4,350,000.00- பொது நிதிப் பங்களிப்பு 36,835.00- நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
ஹம்பாந்தோட்டை	NPP	நிஹால் கலபதி	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-
		அதுல ஹேவகே	சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் தேவையான போ-துமான விபரங்கள் உள்ளடக்கப்படவ-ில்லை.	-
		சாலிய மதரசிங்க	98,000.00	100,000.00-பொது நிதிப் பங்களிப்பு
		அரவிந்த விதாரண	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-
		பிரபா சேனாரத்ன	80,000.00	40,000.00-பொது நிதி (பொருளுதவி) 40,000.00-சேவைகள் வழங்கல்
	SJB	திலீப் வெதஆரச்சி	2,579,192.00	2,150,000.00- பொது நிதிப் பங்களிப்புகள் 50,632.00- நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
	SLPP	டி.வி. சானக்க	2,898,353.00	2,872,687.00- பொது நன்கொடைகள் 25,666.00 -- நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை

மாவட்டம்	கட்சி/குழு	வேட்பாளரின் பெயர்	மொத்தச் செலவு (ரூபாவில்)	வருமானம் (ரூபாவில்)
மொனராகலை	NPP	ஆர்.எம். ஜயவர்தன	185,700.00	180,000.00 பொது நிதிப் பங்களிப்பு 5,700.00- நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
		அஜித் பிரியதர்ஷன	166,500.00	150,000.00 பொது நிதிப் பங்களிப்பு 16,500.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		சதுரி கங்கானி	228,900.00	220,000.00 - தனிநபர்கள் 8,900.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		ருவன் விஜேவீர	204,900.00	190,000.00 பொது நிதிப் பங்களிப்பு 14,900.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		சரத் குமார	224,100.00	200,000.00 பொது நிதிப் பங்களிப்பு 24,100.00- சொந்த நிதிப் பங்களிப்பு
	SJB	எச்.எம். தர்மசேன	2,735,500.00	2,716,000.00-சொந்த நிதிப் பங்களிப்பு 19,500.00-நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
பதுளை	NPP	சமந்த வித்யாரத்ன	1,977,895,00	2,080,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		கிட்ணன் செல்வராஜ்	58,840.00	168,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		அம்பிகா சாமுவேல்	427,830.00	480,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		ரவீந்திர பண்டார	436,490.00	480,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		சுதத் பலகல்ல	255,000.00	280,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		தினிந்து சமன்	22,300.00	85,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு
	SJB	சமிந்த விஜேசிறி	3,564,760.00	6,000,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு 725,000.00- பொது நிதிப் பங்களிப்பு (பொருள் வடிவிலான ஆதரவு)
		நயன வாசலதிலக	3,351,285.40	3,351,285.40- பொது நிதிப் பங்களிப்பு
	NDF	சாமர சம்பத் தசநாயக்க	3,762,650.00-	1,675,000.00- கூட்டு நிதிப் பங்களிப்பு 712,650.00- பொது நிதிப் பங்களிப்பு 1,375,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு
ரத்தினபுரி	NPP	சாந்த பத்மகுமார	37,800.00	37,800.00- பொது நிதிப் பங்களிப்பு
		எஸ். பிரதீப்	37,800.00	37,800.00- பொது நிதிப் பங்களிப்பு
		ஹினிதும சுனில் செனவி	40,300.00	90,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		ஜனக சேனாரத்ன	37,800.00	37,800.00- பொது நிதிப் பங்களிப்பு
		சுனில் ராஜபக்ஷ	57,800.00	57,800.00- பொது நிதிப் பங்களிப்பு
		உபுல் கித்சிறி	37,800.00	37,800.00- பொது நிதிப் பங்களிப்பு
		வசந்த புஷ்பகுமார	37,800.00	37,800.00- பொது நிதிப் பங்களிப்பு
		நிலூஷா கமகே	37,800.00	37,800.00- பொது நிதிப் பங்களிப்பு
	SJB	ஹேஷான் விதானகே	3,002,194.00	2,898,489.00- சொந்த நிதிப் பங்களிப்பு 103,705.00- நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
		வருண பிரியந்த லியனகே	2,234,111.00	1,821,611.00- வங்கிக் கடன் மூலம் சொந்த நிதிப் பங்களிப்பு 414,500.00- நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை 47,111.00 - நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
		பாசூரியகே ஆரியவங்ச	1,566,100.00	1,547,600.00- சொந்த நிதிப் பங்களிப்பு 18,500.00- நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை

மாவட்டம்	கட்சி/குழு	வேட்பாளரின் பெயர்	மொத்தச் செலவு (ரூபாவில்)	வருமானம் (ரூபாவில்)
கேகாலை	NPP	தம்மிக படபெந்தி	139,078.00	140,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		கோசல ஜயவீர	137,500.00	140,000.00 - பொது நிதிப் பங்களிப்பு
		சாகரிகா அத்தாவுட	85,063.00	85,063.00 - பொது நிதிப் பங்களிப்பு
		மனோஜ் ராஜபக்ஷ	146,200.00	146,200.00 - பொது நிதிப் பங்களிப்பு
		நந்தன மில்லகல	36,500.00	36,500.00 - பொது நிதிப் பங்களிப்பு
		காஞ்சன வெலிபிட்டிய	134,050.00	134,050.00 - பொது நிதிப் பங்களிப்பு
		நந்த பண்டார	152,960.00	160,000.00 - பொது நிதிப் பங்களிப்பு
	SJB	கபீர் ஹாசிம்	2,526,150.00	2,497,075.00-சொந்த நிதிப் பங்களிப்பு 29,075.00-நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
		சுஜித் சஞ்சய பெரேரா	2,167,332.00	900,000.00 -பொது நிதிப் பங்களிப்பு 1,176,166.00- சொந்த நிதிப் பங்களிப்பு 78,666-நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
பொலன்னறுவை	NPP	டி.பி. சரத்	192,000.00	200,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		ஜகத் விக்ரமரத்ன	143,000.00	150,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		சுனில் ரத்னசிறி	155,000.00	160,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		பத்மசிறி பண்டார	191,160.00	200,000.00- பொது நிதிப் பங்களிப்பு
	SJB	கின்ஸ் நெல்சன்	3,076,874.00	2,812,624.00- சொந்த நிதிப் பங்களிப்பு 264,250.00- நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
அனுராதபுரம்	NPP	வசந்த சமரசிங்க	298,000.00	298,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		சேன நாணயக்கார	90,750.00	90,750.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		சுசில் ரணசிங்க	99,000.00	99,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		சுசாந்த குமார	99,000.00	99,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		பாக்ய ஸ்ரீ ஹேரத்	82,500.00	82,500.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		பி.டி.என்.கே. பாலிஹேன	82,500.00	82,500.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		திலின சமரகோன்	99,000.00	99,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு
	SJB	ரோஹண பண்டார	3,803,967.00	1,555,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு 68,643- நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
		சுரங்க ரத்நாயக்க	3,101,593.00	3,101,593.00- சொந்த நிதிப் பங்களிப்பு

மாவட்டம்	கட்சி/குழு	வேட்பாளரின் பெயர்	மொத்தச் செலவு (ரூபாவில்)	வருமானம் (ரூபாவில்)
குருநாகல்	NPP	நாமல் கருணாரத்ன	195,000.00	195,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		ஆனந்த விஜயபால	317,000.00	500,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		சுஜீவ திஸாநாயக்க	200,000.00	300,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		விஜேசிறி பஸ்நாயக்க	198,820.00	198,820.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		கீதா ஹேரத்	204,130.00	204,130.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		நாமல் சுதர்ஷன	72,000.00	201,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		ஜகத் குணவர்தன	460,723.00	50,000.00- கூட்டு நிதி 750,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		அசோக குணசேன	255,000.00	300,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		டி. சூரியபண்டார	151,700.00	151,700.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		சந்தன தென்னகோன்	225,200.00	240,500.00- பொது நிதிப் பங்களிப்பு
		தர்மப்பிரிய திஸாநாயக்க	368,500.00	368,500.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		முஹம்மது அஸ்லம்	244,500.00	300,000.00- பொது நிதிப் பங்களிப்பு
	SJB	நளின் பண்டார	3,191,428.00	600,000.00- கூட்டு நிதி 2,006,250.00- பொது நிதிப் பங்களிப்பு 600,000.00- கூட்டு ஆதரவு மொத்தத் தொகையின் கணக்கீடு தவறானது 311,000.00- நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
		தயாசிறி ஜயசேகர	4,719,880.00	2,269,880.00- பொது நிதிப் பங்களிப்பு 2,450,000- சொந்த நிதிப் பங்களிப்பு
		ஜே.சி. அலவத்துவல	3,441,498.71	3,441,498.71- நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
மாத்தளை	NPP	கமகெதர திஸாநாயக்க	228,746.00	250,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		சுனில் பியன்வில	100,000.00	100,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		தீப்தி வாசலகே	205,000.00	205,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		தினேஷ் ஹேமந்த பெரேரா	100,000.00	100,000.00- பொது நிதிப் பங்களிப்பு
	SJB	ரோஹிணி கவிரத்ன	1,652,636.00	1,584,960-பொது நிதிப் பங்களிப்பு மற்றும் சொந்த நிதிப் பங்களிப்பு 35,815- நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
வன்னி	NPP	செல்வத்தம்பி திலகநாதன்	68,400.00	68,400.00 - பொது நிதிப் பங்களிப்பு
		ஆறுமுகம் ஜெகதீஸ்வரன்	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-

மாவட்டம்	கட்சி/குழு	வேட்பாளரின் பெயர்	மொத்தச் செலவு (ரூபாவில்)	வருமானம் (ரூபாவில்)
	ITAK	துரைராசா ரவிகுமார்	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-
	SJB	ரிஷாத் பதியுதீன்	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-
	DTNA	ஏ. அடைக்கலநாதன்	640,000.00	640,000.00 - பொது நிதிப் பங்களிப்பு
	SLLP	காதர் மஸ்தான்	935,000.00	935,000.00 - பொது நிதிப் பங்களிப்பு
நுவரெலியா	NPP	மஞ்சுள சுரவீர ஆரச்சி	24,500.00	24,500.00 - பொது நிதிப் பங்களிப்பு
		மதுர செனவிரத்ன	307,109.07	307,109.07 -கூட்டு நிதிப் பங்களிப்பு
		ஆர்.ஜி. விஜேரத்ன	189,600.00	189,600.00 கூட்டு நிதிப் பங்களிப்பு
		அனுஷ்க திலகரத்ன	65,000.00	65,000.00 கூட்டு நிதிப் பங்களிப்பு
		கிருஷ்ணன் கலைச்செல்வி	75,000.00	75,000.00 - கூட்டு நிதிப் பங்களிப்பு
	SJB	பழனி திகாம்பரம்	2,700,000.00	1,744,500.00 - கூட்டு நிதிப் பங்களிப்பு
		வேலுசாமி ராதாகிருஷ்ணன்	3,524,142.00	3,524,142.00 - கூட்டு நிதிப் பங்களிப்பு
	UNP	ஜீவன் தொண்டமான்	3,539,680.00	3,539,680.00 - பொது நிதிப் பங்களிப்பு
யாழ்ப்பாணம்	NPP	கருணாநந்தன் இளங்குமரன்	1,075,470.00	1,075,470.00 - கூட்டு நிதிப் பங்களிப்பு
		ஸ்ரீ பவானந்தராஜா சண்முகநாதன்	869,395.00	869,395.00 - பொது நிதிப் பங்களிப்பு
		ராஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி	602,399.00	602,399.00 - பொது நிதிப் பங்களிப்பு
	ITAK	சிவஞானம் ஸ்ரீதரன்	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-
	ACTC	கஜேந்திரகுமார் பொன்னம்பலம்	3,093,260.00	பொது நிதிப் பங்களிப்பு எனினும் சரியான நிதி ஆதாரங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.
	IG 17	இராமநாதன் அர்ச்சுனா	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-
	ITAK	சாணக்கியன் ராசமாணிக்கம்	3,694,840.00	3,694,840.00 - பொது நிதிப் பங்களிப்பு
		ஞானமுத்து ஸ்ரீநேசன்	2,671,760.00	2,671,760.00 - பொது மற்றும் கூட்டு நிதிப் பங்களிப்பு
மட்டக்களப்பு		இளையதம்பி ஸ்ரீநாத்	193,270.00	193,270.00 - பொது நிதிப் பங்களிப்பு
	SLMC	எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-
	NPP	கந்தசாமி பிரபு	306,620.00	306,620.00 - கூட்டு நிதிப் பங்களிப்பு

மாவட்டம்	கட்சி/குழு	வேட்பாளரின் பெயர்	மொத்தச் செலவு (ரூபாவில்)	வருமானம் (ரூபாவில்)
திகாமடுல்லை	NPP	வசந்த பியதிஸ்ஸ	3,220.00	3,220.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		மஞ்சுள ரத்நாயக்க	3,220.00	3,220.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		பிரியந்த விஜேரத்ன	3,220.00	3,220.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		முத்துமெனிகே ரத்வத்தே	3,220.00	3,220.00- சொந்த நிதிப் பங்களிப்பு
	SLMC	மீராசாஹிபு உதுமாலெப்பை	3,576,600.00	600,000.00 - சொந்த நிதிப் பங்களிப்பு 1,650,000.00- பொது நிதிப் பங்களிப்பு 800,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு (நகைகளை விற்பனை செய்தல்) 50,000.00 - பொருள் வடிவிலான நன்கொடைகள் 50,000.00- பொருள் வடிவிலான சேவைகள் 503,800.00- நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
கொழும்பு	NPP	ஹரினி அமரசூரிய	வேட்பாளர் தனிப்பட்ட முறையில் எந்தவொரு தேர்தல் பிரச்சார வருமானத்தையோ செலவினத்தையோ மேற்கொள்ளவில்லை முழு பிரச்சாரமும் அரசியல் கட்சியால் மட்டுமே நிர்வகிக்கப்பட்டது.	-
		சதுரங்க அபேசிங்க	861,150.00	861,150.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		சுனில் வடகல	503,375.00	500,000.00-பொது நிதிப் பங்களிப்பு 5,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		லக்ஷ்மன் நிபுண ஆரச்சி	281,250.00	300,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		அருண பனாகொடகே	368,120.00	370,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		எரங்க குணசேகர	515,250.00	515,250.00- பொது நிதிப் பங்களிப்பு
		ஹர்ஷன நாணயக்கார	338,500.00	340,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		கௌசல்யா ஆரியரத்ன	285,000.00	300,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		அசித எகொடவிதானகே	685,000.00	700,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		எம்.ஆர். சாலி	1,403,680.00	1,425,000.00- பொது நிதிப் பங்களிப்பு 1,425.00- நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
		சுசாந்த தொடவத்தே	351,400.00	351,400.00- சொந்த நிதிப் பங்களிப்பு
		சந்தன சூரியஆரச்சி	437,500.00	450,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		சமன்மலி குணசிங்க	266,000.00	275,000.00- பொது நிதிப் பங்களிப்பு
		தேவானந்த சுரவீர	335,000.00	350,000.00-பொது நிதிப் பங்களிப்பு
	SJB	சஜித் பிரேமதாச	1,933,618.19	1,933,618.19- பொது நிதிப் பங்களிப்பு

மாவட்டம்	கட்சி/குழு	வேட்பாளரின் பெயர்	மொத்தச் செலவு (ரூபாவில்)	வருமானம் (ரூபாவில்)
		ஹர்ஷ டி சில்வா	5,612,166.75	மொத்தத் தொகையில் ரூ. 140,000.00 வெளிப்படுத்தப்பட்ட ஆதாரங்களிலிருந்து பெறப்பட்டது மீதமுள்ள நிதி சொந்தமாகப் பங்களிக்கப்பட்டது.
		முஜிபுர் ரஹ்மான்	5,718,980.00	4,000,000.00- பொது நிதிப் பங்களிப்பு 1,750,000.00- சொந்த நிதிப் பங்களிப்பு 25,230.00- நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
		எஸ்.எம். மரிக்கார்	5,315,380.00	5,477,870.00- பொது நிதிப் பங்களிப்பு 27,352.00- நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை
திருகோணமலை	NPP	அருண் ஹேமச்சந்திர	275,000.00	250,000.00 - பொது நிதிப் பங்களிப்பு
	NPP	ரொஷான் அகீமன	100,000.00	81,500.00 - பொது நிதிப் பங்களிப்பு
	SJB	இம்ரான் மஹ்ரூப்	2,095,000.00 - கூட்டு நிதிப் பங்களிப்புகள்	அறிக்கையில் இலங்கை ரூபா 556,000.00 பெறுமதியான செலவுகள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளன.
	ITAK	சண்முகம் கே.எஸ். குகதாசன்	2,565,000.00 - நிதி ஆதாரம் குறிப்பிடப்படவில்லை	வழங்கப்பட்ட தகவல் தெளிவற்றது.
புத்தளம்	NPP	அன்டன் சரத் ஜயக்கொடி	200,550.00	200,550.00 - சொந்த நிதிப் பங்களிப்பு
		விஜேசிங்க முதியன்சேலாகே ஹிருணி மதுஷா விஜேசிங்க	203,000.00	203,000.00 - சொந்த நிதிப் பங்களிப்பு
		ஹேரத் முதியன்சேலாகே கயான் ஜனக குமார	249,300.00	249,300.00 - சொந்த நிதிப் பங்களிப்பு
		முஹம்மது ஜலீல் முஹம்மத் பைசல்	161,000.00	161,000.00 - சொந்த நிதிப் பங்களிப்பு
		அன்டன் சரத் ஜயக்கொடி	141,000.00	145,000.00 - சொந்த நிதிப் பங்களிப்பு
		அபயரத்ன ஹேரத் முதியன்சேலாகே ஹரிச்சந்திர அபயரத்ன அஜித் கிஹான்	315,200.00	315,200.00 - சொந்த நிதிப் பங்களிப்பு
	SJB	அப்புஹாமி மாகவிட்ட ஆராச்சிகே டொன் ஹெக்டர் ஹிஜினாஸ்	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-
		மிஹிந்துகுலசூரிய வீபத்தகே ஜனத் சித்ரால் பெர்னாண்டோ	அவரது உத்தியோகபூர்வ செலவின வெளிப்படுத்துதலைக் கண்டறிய முடியவில்லை.	-

தேசிய மக்கள் சக்தி – NPP
புதிய ஜனநாயக முன்னணி - NDF
இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் - SLMC
ஐக்கிய மக்கள் சக்தி - SJB
ஐக்கிய தேசிய கட்சி - UNP
இலங்கை தமிழரசுக் கட்சி – ITAK
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி – DTNA
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் - ACTC
ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன – SLPP

பகுப்பாய்வின் உள்ளடக்கம்: தரவுச் சேகரிப்பு செயன்முறையின் போது ஏற்பட்ட தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக, இப்பகுப்பாய்வானது இலங்கையின் 22 தேர்தல் மாவட்டங்களில் 21 மாவட்டங்களின் தகவல்களை மாத்திரமே உள்ளடக்கியுள்ளது. கம்பஹா தேர்தல் மாவட்டத்துடன் தொடர்புடைய தரவுகளை இதில் உள்ளடக்க முடியவில்லை.

2024 பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களினால் தேர்தல் பிரச்சார வருமான மற்றும் செலவின அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டமையானது, இலங்கையின் தேர்தல் செயன்முறையில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாகும். 1977 ஆம் ஆண்டு விருப்பு வாக்கு முறைமை (Preferential voting

system) அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர், பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தேர்தலைத் தொடர்ந்து தேர்தல் பிரச்சார நிதி வெளிப்படுத்துதல்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என சட்டரீதியாகக் கோரப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவேயாகும். எனவே, பாராளுமன்ற வேட்பாளர்களினால் தேர்தல் பிரச்சார செலவின அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டமையானது, தேர்தல் நிதியளிப்பில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் தன்மையை மேம்படுத்துவதற்கான பாதையில் எட்டப்பட்ட முக்கியமானதொரு நிறுவன ரீதியான முன்னேற்றத்தை அடையாளப்படுத்துகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களினாலும், அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களாலும் சமர்ப்பிக்கப்பட்ட 225 தேர்தல் பிரச்சார செலவின மற்றும் வருமான அறிக்கைகளை பகுப்பாய்வு செய்ததில், சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளில், கணிசமான எண்ணிக்கையிலான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் பெரும்பாலானவை புதிய ஒழுங்குமுறை பொறிமுறையின் கீழ் கொண்டு வரப்பட்ட அறிக்கையிடல் கட்டமைப்பு மற்றும் நிபந்தனைகளைப் பின்பற்ற முயன்றுள்ளன என்பதும் தெளிவாகிறது. இருப்பினும், இவ் அறிக்கைகளின் தரம், முழுமைத்தன்மை மற்றும் துணைத் தகவல்களின் அளவு என்பன வேட்பாளர்கள் மற்றும் பிற அரசியல் தரப்பினருக்கிடையே பெருமளவில் வேறுபட்டுக் காணப்பட்டன. இந்த மீளாய்வானது, இலங்கையின் தேர்தல் பிரச்சார நிதியளிப்பின் மாறிவரும் இயல்புகளைப் பற்றிய ஆழமான புரிதல்களை வழங்குகின்ற பல முதன்மைப் போக்குகளை அடையாளப்படுத்தியுள்ளது.

அவற்றுள் மிகக் குறிப்பிடத்தக்க அவதானிப்புகளில் ஒன்றாக, வேட்பாளர் மற்றும் கட்சி மட்ட தேர்தல் பிரச்சார நிதி மாதிரிகளுக்கு இடையே நிலவும் வேறுபாடு காணப்படுகின்றது. பல மாவட்டங்களில், தேசிய மக்கள் சக்தியிலிருந்து (NPP) தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களை எதிர்க்கட்சிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களுடன் ஒப்பிடுகையில், அவர்கள் மிகக் குறைந்தளவிலான செலவினத்தை மேற்கொண்டனர் என்றோ அல்லது தனிப்பட்ட ரீதியில் எவ்வித தேர்தல் பிரச்சார செலவையும் மேற்கொள்ளவில்லை என்றோ குறிப்பிட்டுள்ளனர். உதாரணமாக, கொழும்பு தேர்தல் மாவட்டத்தில் தனிநபர் வேட்பாளர் ஒருவருக்கு அனுமதிக்கப்பட்ட உச்ச செலவின வரம்பு ரூ. 5.75 மில்லியனாக இருந்த நிலையில், தேசிய மக்கள் சக்தியின் மாவட்டத் தலைவரான ஹரினி அமரசூரிய அவர்கள், தான் எவ்வித தனிப்பட்ட பிரச்சார செலவினங்களையும் மேற்கொள்ளவில்லை எனவும், தேர்தல் பிரச்சாரத்திற்காக எவ்வித நேரடி நிதிப்பங்களிப்புகளையும் பெறவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். இதற்கு நேர்மாறாக, ஐக்கிய மக்கள் சக்தியை (SJB) பிரதிநிதித்துவப்படுத்தி கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட அதன் தலைவர் சஜித் பிரேமதாச அவர்கள், ரூ. 1,933,618.19 ஐத் தனது சொந்த நிதியில் இருந்து தேர்தல் பிரச்சாரத்திற்காக செலவழித்ததாக குறிப்பிட்டுள்ளார். இருப்பினும், இந்தச் செலவினங்களை மேற்கொள்வதற்கான தேர்தல் பிரச்சார நிதி எந்த வருமான மூலத்திலுருந்து பெறப்பட்டது என்பது குறித்து போதிய தகவல்கள் அவரது வெளிப்படுத்துதல் ஆவணத்தில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் ஒப்பீட்டளவில் குறைந்தளவிலான தனிப்பட்ட செலவினங்களையே அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர் என்பதை கவனத்தில் கொள்வது அவசியமாகும். மேலும், அவர்கள் பெற்ற அனைத்து தேர்தல் பிரச்சார வருமானங்களுக்கும் அவற்றை வழங்கிய நன்கொடையாளர்களின் பெயர்களை வெளிப்படுத்தியிருந்த போதிலும், தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டமானது ஒவ்வொரு பங்களிப்பாளரினதும் தேசிய அடையாள அட்டை எண்ணையும் உள்ளடக்குவதைக் கட்டாயமாக்குகிறது. ஏனைய பல அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் சமர்ப்பிப்புகளுடன் ஒப்பிடும்போது, தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் மட்ட வெளிப்படுத்துதல்களில் இத்தகைய விரிவான விவரங்கள் குறைவாக இருந்தபோதிலும், வெளிப்படைத்தன்மையை நோக்கிய அவர்களின் ஒட்டுமொத்த முயற்சி பாராட்டுக்குரியதாகும். இந்த வேட்பாளர்களின் ஒட்டுமொத்த தேர்தல் பிரச்சாரமும் அரசியல் கட்சியினால் நேரடியாகக் நிரவகிக்கப்பட்டு, மையப்படுத்தப்பட்ட ஒரு கட்டமைப்பைக் கொண்டிருந்ததால், அவர்கள் தங்கள் நிதி சார் தகவல்களை முறைப்படி அறிக்கையிடுவதற்கான தனித்துவமானதொரு வாய்ப்பைக் அல்லது சாதக நிலையைக் கொண்டிருந்தனர். இதன் விளைவாக, கட்சி மட்டத்திலான வெளிப்படுத்துதலும் ஒப்பீட்டளவில் நன்கு கட்டமைக்கப்பட்டிருந்தது. உதாரணமாக, கொழும்பு மாவட்டத்திற்கான தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கையின்படி, கட்சி ரூ. 68,582,205.26 ஐ வருமானமாகவும், ரூ. 74,293,405.26 ஐ தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கான செலவினமாகவும் குறிப்பிட்டிருந்தது. வருமானம் பெறப்பட்ட சரியான மூலங்கள் குறித்து வழங்கப்பட்ட தகவல்கள் முழுமையானதாக இல்லாதபோதிலும், நிதிப் பங்களிப்பாளர்களின் அடையாளத்தை வெளிப்படுத்தி, துணை ஆவணங்களை அறிக்கையுடன் இணைப்பதற்காக அக் கட்சி மேற்கொண்ட திட்டமிட்ட முயற்சியானது, வழமையான ஏனைய அறிக்கைகளின் தரத்தை விடப் பலமடங்கு உயரியதொரு நேர்மறையான நகர்வாகக் கருதப்படுகிறது.

இதேபோல், ஐக்கிய மக்கள் சக்தியானது கொழும்பு மாவட்ட தேர்தல் பிரச்சாரத்திற்காக ரூ. 35,528,984.41 ஐ செலவிட்டதாக அறிக்கை சமர்ப்பித்திருந்தது. அதேவேளை இம்மாவட்டத்தில் ஓர் அரசியல் கட்சிக்கான அனுமதிக்கப்பட்ட உச்ச செலவின வரம்பு ரூ.79,493,756.00 ஆகும். இருப்பினும், ஐக்கிய மக்கள் சக்தியின் வெளிப்படுத்துதலில் காணப்பட்ட முதன்மைக் குறைபாடு யாதெனில், தேர்தல் பிரச்சார நிதியளிப்பின் வருமான மூலங்கள் மற்றும் அதன் கட்டமைப்பு பற்றிய போதியளவிலான தகவல்கள் குறிப்பிடப்படாமை ஆகும். செலவினத் தொகையை வெளிப்படுத்தியிருந்த போதிலும், அதற்கான நிதி எவ்வாறு திரட்டப்பட்டது போன்ற அதனுடன் தொடர்புடைய ஏனைய தகவல்களை குறிப்பிடாதிருப்பது, தேர்தல் பிரச்சார நிதியளிப்பின் ஒட்டுமொத்த வெளிப்படைத்தன்மையை மதிப்பிடுவதில் சிரமங்களை ஏற்படுத்துகிறது.

இப் பிரச்சினையானது, அனேகமான அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் நிதியறிக்கைகளில் கண்டறியப்பட்ட பொதுவான சவாலாகும். செலவின வெளிப்படுத்துதல்கள் தேர்தல் பிரச்சார வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பது பற்றிய தகவல்களை வழங்குகின்ற போதிலும், பல சமர்ப்பிப்புகள் பெறப்பட்ட நிதிகளின் ஆரம்ப மூலத்தை போதியளவில் வெளிப்படுத்தத் தவறியுள்ளன. தெளிவான வருமான மூலத் தகவல்கள் இல்லாதிருப்பது, தேர்தல் ஆணைக்குழு, சிவில் சமூக அமைப்புகள், ஆய்வாளர்கள் மற்றும் பிரஜைகள் ஆகியோர் தேர்தல் பிரச்சார நிதியளிப்பின் வெளிப்படைத்தன்மையை சுயாதீனமாக மதிப்பிடக் கூடிய ஆற்றலை பெருமளவில் கட்டுப்படுத்துகிறது.

மேலதிகக் கவனத்தைக் கோரிநிற்கும் மற்றுமொரு முக்கிய காரணி யாதெனில், தேர்தல் பிரச்சாரங்களின் போது தலையிடும் மூன்றாம் தரப்பினரின் வகிபாகமாகும். பல வருடங்களாக, தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் ஆய்வாளர்களும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை நிர்வகிப்பதில் விளம்பர முகவர் நிறுவனங்கள், தகவல் தொடர்பு நிறுவனங்கள் மற்றும் ஏனைய சேவை வழங்குநர்கள் உள்ளிட்ட இடைத்தரகர்களின் (இடைநிலை தரப்பினர்) பங்களிப்பு அல்லது ஈடுபாடு அதிகரித்து வருவதைச் சுட்டிக்காட்டியுள்ளனர். இருப்பினும், தற்போதைய தகவல் வெளிப்படுத்துதல் கட்டமைப்பின் மூலம் இத்தகைய ஈடுபாட்டின் தன்மை மற்றும் அதன் எல்லை குறித்து மட்டுப்படுத்தப்பட்ட பார்வையையே பெற முடிகிறது. சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில், இந்த மூன்றாம் தரப்பினர் வகித்த உண்மையான பங்கைத் தீர்மானிப்பது கடினமாகவே உள்ளது. அதே போல், அவர்கள் கட்டணம் அடிப்படையிலான சேவைகளை வழங்கினார்களா, வளங்களை வழங்கினார்களா அல்லது பிற ஏற்பாடுகள் மூலம் பிரச்சார நடவடிக்கைகளை வழிநடத்தினார்களா என்பதையும் அறிந்து கொள்ள முடியாதுள்ளது.

முதற்தடவையாக அமுல்படுத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலுக்கான, தேர்தல் பிரச்சார நிதி சார் தகவல்களை வெளிப்படுத்துதல் செயன்முறையானது, எதிர்கால சட்ட சீர்திருத்தங்களுக்கு ஒரு காத்திரமான அடித்தளத்தை வழங்குகிறது. அறிக்கைகளைச் சமர்ப்பித்தமை ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பிரதிபலித்தாலும், பயனுறுதி மிக்க தேர்தல் பிரச்சார நிதி ஒழுங்குமுறைக்கு நிதியளிப்பு மூலங்களின் வலுவான வெளிப்படுத்துதல், அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கான தெளிவான கடப்பாடுகள், மேம்படுத்தப்பட்ட ஆவணப்படுத்தல் நிபந்தனைகள் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் மேம்பட்ட மேற்பார்வைத் திறன் என்பன அவசியமாகின்றன என்பதை இப் பகுப்பாய்வு முடிவுகள் நிரூபிக்கின்றன. இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யாவிடின், தேர்தல் பிரச்சார நிதி அறிக்கையிடலானது, இலங்கையின் தேர்தல் செயற்பாட்டில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் பொது நம்பிக்கையை உறுதி செய்வதற்கான பயனுள்ள ஒரு பொறிமுறையாக அமைவதற்குப் பதிலாக, வெறும் நடைமுறைசார் இணக்கப்பாட்டுப் பயிற்சியாக மாறும் அபாயத்தைக் கொண்டுள்ளது.

அட்டவணை 09 - தேசிய பட்டியலின் மூலம் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சமர்ப்பித்த பிரச்சாரச் செலவினங்களின் விவரம்:
பாராளுமன்றத் தேர்தல் - நவம்பர் 14, 2024

இல	வேட்பாளரின் பெயர்	அரசியல் கட்சி / சுயேச்சைக் குழு	அறிக்கையிடப்பட்ட செலவு (ரூபாயில்)	அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச செலவு (ரூபாயில்)	குறிப்புகள்
01	ரத்நாயக்க வீரகோன் பிமல் நிரோஷன்	தேசிய மக்கள் சக்தி (NPP)	செலவினங்கள் இல்லை	34,698	தேர்தல் பிரச்சாரத்திற்காக எந்தவொரு செலவும் செய்யப்படவில்லை என்றும், எவ்வித நன்கொடைகளோ அல்லது நிதிப் பங்களிப்புகளோ பெறப்படவில்லை என்றும் வேட்பாளர் பிரகடனப்படுத்தியுள்ளார். அறிக்கையின்படி, அனைத்துப் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளும் கட்சி, அதனுடன் இணைந்த அரசியல் குழுக்கள் மற்றும் தனிப்பட்ட ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், வாகனப் பதிவு எண்கள் மற்றும் தொலைபேசி/கைப்பேசி எண்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனை இருந்தபோதிலும், இந்த விவரங்கள் உத்தியோகபூர்வ தேர்தல் செலவின அறிக்கையில் வழங்கப்படாமல், அதனுடன் இணைக்கப்பட்ட சத்தியக்கடதாசியில் (Affidavit) மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப ரீதியாக இது அறிக்கையைக் குறைபாடுடையதாக்குகிறது
02	நியகம கமகே அனுர கருணாதிலக	NPP	செலவினங்கள் இல்லை	35,677	முதலாம் வேட்பாளருக்குக் குறிப்பிடப்பட்ட அதே அவதானிப்பு.
03	உபாலி பன்னிலகே	NPP	செலவினங்கள் இல்லை		முதலாம் வேட்பாளருக்குக் குறிப்பிடப்பட்ட அதே அவதானிப்பு.
04	பி. எரங்க உதேஷ் வீரரத்ன	NPP	செலவினங்கள் இல்லை		முதலாம் வேட்பாளருக்குக் குறிப்பிடப்பட்ட அதே அவதானிப்பு.
05	குருந்து படபந்திகே அருண ஜயசேகர	NPP	செலவினங்கள் இல்லை		முதலாம் வேட்பாளருக்குக் குறிப்பிடப்பட்ட அதே அவதானிப்பு.
06	ஹர்ஷன பீரிஸ் சூரியப்பெரும	NPP	செலவினங்கள் இல்லை		முதலாம் வேட்பாளருக்குக் குறிப்பிடப்பட்ட அதே அவதானிப்பு.
07	ஜனித் ருவன் கொடிதுவக்கு	NPP	செலவினங்கள் இல்லை		முதலாம் வேட்பாளருக்குக் குறிப்பிடப்பட்ட அதே அவதானிப்பு.

08	புண்ய ஸ்ரீ குமார ஜயகொடி	NPP	செலவினங்கள் இல்லை		முதலாம் வேட்பாளருக்குக் குறிப்பிடப்பட்ட அதே அவதானிப்பு.
09	ராமலிங்கம் சந்திரசேகரன்	NPP	செலவினங்கள் இல்லை		முதலாம் வேட்பாளருக்குக் குறிப்பிடப்பட்ட அதே அவதானிப்பு.
10	கே.டப்ளியூ.பி. நஜித் இந்திக	NPP	செலவினங்கள் இல்லை		முதலாம் வேட்பாளருக்குக் குறிப்பிடப்பட்ட அதே அவதானிப்பு.
11	சுகத் திலகரத்ன	NPP	செலவினங்கள் இல்லை		முதலாம் வேட்பாளருக்குக் குறிப்பிடப்பட்ட அதே அவதானிப்பு.
12	ஹேவா ஹீன்பல்லகே லக்மாலி காஞ்சனா ஹேமச்சந்திர	NPP	செலவினங்கள் இல்லை		முதலாம் வேட்பாளருக்குக் குறிப்பிடப்பட்ட அதே அவதானிப்பு.
13	அலபட கமகே சுனில் குமார	NPP	செலவினங்கள் இல்லை		முதலாம் வேட்பாளருக்குக் குறிப்பிடப்பட்ட அதே அவதானிப்பு.
14	ரத்நாயக்க முதியான்சேலாகே காமினி ரத்நாயக்க	NPP	செலவினங்கள் இல்லை		முதலாம் வேட்பாளருக்குக் குறிப்பிடப்பட்ட அதே அவதானிப்பு.
15	ஜயசூரிய வன்ஷி ாதிரத்ன பத்திரன்னேஹேலாகே ருவன் சமிந்த ரணசிங்க	NPP	செலவினங்கள் இல்லை		முதலாம் வேட்பாளருக்குக் குறிப்பிடப்பட்ட அதே அவதானிப்பு.
16	சுகத் வசந்த டி சில்வா	NPP	செலவினங்கள் இல்லை		முதலாம் வேட்பாளருக்குக் குறிப்பிடப்பட்ட அதே அவதானிப்பு.
17	அபூபக்கர் ஆதம் பாவா	NPP	செலவினங்கள் இல்லை		முதலாம் வேட்பாளருக்குக் குறிப்பிடப்பட்ட அதே அவதானிப்பு.
18	ரத்நாயக்க ஹெட்டிகே உபாலி சமரசிங்க	NPP	செலவினங்கள் இல்லை		முதலாம் வேட்பாளருக்குக் குறிப்பிடப்பட்ட அதே அவதானிப்பு.
19	திலித் சுசந்த ஜயவீர	சர்வஜன பலய	இவர் கம்பஹா தேர்தல் மாவட்டத்தில் மாவட்ட வேட்பாளராகப் போட்டியிட்டு, பிரச்சாரச் செலவினங்களை அறிக்கையிட்டார். ஆனால் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகவில்லை.	பொருந்தாது	கிடைக்கப்பெற்ற ஆவணங்களில் நிலவிய தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, இந்த வேட்பாளரின் தேர்தல் செலவின அறிக்கையைக் கண்டறிய முடியவில்லை. இவர் கம்பஹா தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்ட போதிலும் நேரடியாகத் தெரிவாகவில்லை. பின்னர், கட்சிக்கு ஒதுக்கப்பட்ட ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தின் மூலம் இவர் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். கம்பஹா மாவட்ட வேட்பாளர் என்ற வகையில், இவருக்குப் பொருந்தக்கூடிய செலவின உச்சவரம்பானது, தேசியப் பட்டியல் வரம்பாகவன்றி, ரூ. 5,683,347 ஆக இருந்தது.

20	ரத்நாயக்க முதியான்சேலாகே ரஞ்சித் மந்தும பண்டார	ஐக்கிய மக்கள் சக்தி (SJB)	300,000	7,570	கட்சியின் பொதுச் செயலாளராகப் பணியாற்றும் இந்த வேட்பாளர், தேசியப் பட்டியலுக்கான செலவின உச்சவரம்பு ரூ. 7,570 ஆக இருந்தபோதிலும், 300,000 ரூபாவைத் தனது தேர்தல் பிரச்சாரச் செலவாக அறிக்கையிட்டுள்ளார்.
21	அர்ஜுன சுஜீவ சேனசிங்க	SJB	செலவினங்கள் இல்லை	34,698	தேர்தல் பிரச்சாரத்திற்காக எந்தவொரு செலவும் செய்யப்படவில்லை என்று வேட்பாளர் பிரகடனப்படுத்தியுள்ளார். எனினும், கைப்பேசி எண் போன்ற அத்தியாவசியத் தகவல்கள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புச் செலவுகளுக்குச் செலவின வரம்புகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தாலும், வாகனங்கள் மற்றும் தகவல் தொடர்பு விவரங்களை வெளிப்படுத்துவது வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் மேம்படுத்தும்.
22	முகமது நிஸாம் காரியப்பர்	SJB	செலவினங்கள் இல்லை	34,698	வேட்பாளரின் கைப்பேசி எண் போன்ற அத்தியாவசியத் தகவல்கள் வெளிப்படுத்தப்படாததால், இந்த அறிக்கை முழுமையற்றதாகக் காணப்படுகிறது.
23	முஹம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது	SJB	செலவினங்கள் இல்லை		இவர் 2025 நவம்பர் 28 அன்று தனது தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்தார். அக்காலப்பகுதியில் இவர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ACMC) கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார்.
24	அகிலன் மனோஹரன் கணேசன்	SJB	சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் செலவின விவரங்கள், கொழும்பு தேர்தல் மாவட்டத்தில் இவர் போட்டியிட்ட மாவட்ட வேட்பாளர் பதவிக்குரியவை ஆகும். இவர் தேசியப் பட்டியல் வேட்பாளராக மட்டுமன்றி, மாவட்ட வேட்புமனுப் பட்டியலின் கீழும் போட்டியிட்டிருந்தார்.	34,698	இந்த வேட்பாளர் ஜனநாயக மக்கள் முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்திய அதேவேளை, SJB வேட்புமனுப் பட்டியலின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டார். அதற்கமைய, பிரச்சாரச் செலவுகள் தேசியப் பட்டியல் வேட்பாளராக அன்றி, மாவட்ட வேட்பாளர் என்ற ரீதியிலேயே அறிக்கையிடப்பட்டுள்ளன.

25	முகமது பைசர் முஸ்தபா	புதிய ஜனநாயக முன்னணி (NDF)	செலவினங்கள் இல்லை	34,698	தேர்தல் பிரச்சாரத்திற்காக எந்தவொரு செலவும் செய்யப்படவில்லை என்று வேட்பாளர் பிரகடனப்படுத்தியுள்ளார். எனினும், கோரப்பட்டிருந்த பல அத்தியாவசிய விவரங்கள் வெளிப்படுத்தப்படாததால் இந்த அறிக்கை முழுமையற்றதாக உள்ளது.
26	ரவீந்திர சந்தேஷ் கருணாநாயக்க	NDF	செலவினங்கள் இல்லை	34,698	தேர்தல் பிரச்சாரச் செலவுகள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை. வாகனப் பதிவு எண்கள் மற்றும் கைப்பேசி எண்கள் போன்ற அத்தியாவசியத் தகவல்களை இந்த அறிக்கை வெளிப்படுத்தவில்லை.
27	முஹம்மது சாலி நலீம்	ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC)	மாவட்ட வேட்பாளராகப் போட்டியிட்டுத் தெரிவாகவில்லை.	பொருந்தாது	2025 மே 6 அன்று நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக, இவர் 2025 மார்ச் 14 அன்று பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்தார்.
28	பத்மநாதன் சத்தியலிங்கம்	இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK)	1,698.785	4,327	இந்த வேட்பாளர் வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். வெளிப்படுத்தப்பட்ட தேர்தல் செலவினங்கள் அவரது தேசியப் பட்டியல் நியமனத்திற்குரியதாகவன்றி, மாவட்ட வேட்பாளர் பதவிக்குரியவையாக காணப்பட்டன. சமர்ப்பிக்கப்பட்ட ஏனைய பல அறிக்கைகளுடன் ஒப்பிடுகையில், இவ் அறிக்கை பரிந்துரைக்கப்பட்ட உத்தியோகபூர்வ மாதிரி வடிவத்திற்கு அமையச் சரியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

29	லக்ஷ்மண் நாமல் ராஜபக்ஷ	ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன (SLPP)	315,000	9,970	தேசியப் பட்டியலுக்கான தேர்தல் செலவின உச்சவரம்பு ரூ. 9,970 ஆக இருந்தபோதிலும், இவ் வேட்பாளர் விலைப்பட்டியல் (Invoices) ஆதாரங்களுடன் ரூ. 315,000 ஐத் தனது தேர்தல் பிரச்சாரச் செலவாக அறிக்கையிட்டுள்ளார். இது தேர்தல் செலவின உச்சவரம்பின் நடைமுறைப்படுத்தல் அல்லது அறிக்கையிடல் தேவைகளின் விளக்கம் குறித்து கேள்விகளை எழுப்புகிறது. இவர் கட்சியின் தேசிய அமைப்பாளராகப் பணியாற்றுகிறார்.

தேசியப் பட்டியல் உறுப்பினர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தேர்தல் பிரச்சாரச் செலவின வெளிப்படுத்துதல்களின் பகுப்பாய்வானது, நேரடியாகப் போட்டியிட்ட வேட்பாளர்களுடன் ஒப்பிடும் போது முற்றிலும் மாறுபட்டதொரு போக்கை வெளிப்படுத்துகின்றது. தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் தனிநபர் விருப்பு வாக்குகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை என்பதால், அவர்கள் பாரம்பரியப் பாணியிலான பிராந்திய/தொகுதி வாரியான தேர்தல் பிரச்சாரங்களை பொதுவாக முன்னெடுப்பதில்லை என்பது உண்மையே. ஆயினும், தேசியப் பட்டியல் வேட்பாளர்களுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள மிகக் குறைந்த செலவின உச்ச வரம்புகள், ஓர் ஒழுங்குமுறைப் பொறிமுறையாக அவற்றின் நடைமுறைத் பொருத்தப்பாடு மற்றும் போதியதன்மை குறித்த கேள்விகளை எழுப்புகின்றன.

இதில் சுவாரஸ்யமான விடயம் என்னவெனில், இந்த வரம்புகள் அடிப்படை தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்குக் கூடப் போதுமானதாக இருக்காது என்ற ஆரம்பக்கட்ட ஐயப்பாடுகள் நிலவிய போதிலும், அந்தந்தக் கட்சிகளின் ஊடாக நியமிக்கப்பட்ட பல முக்கிய அரசியல் ஆளுமைகள் உட்பட பெரும்பாலான தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் தாம் எவ்வித தேர்தல் பிரச்சார செலவினத்தையும் மேற்கொள்ளவில்லை என்றே குறிப்பிட்டிருந்தனர். இது, பெரும்பாலான தேசியப் பட்டியல் நியமனங்கள் தனிநபர் சார்ந்த தேர்தல் பிரச்சாரங்களின் மூலம் அன்றி, அரசியல் கட்சி மட்டத்திலான தேர்தல் பிரச்சார கட்டமைப்புகளின் மூலமே பெருமளவில் ஆதரிக்கப்பட்டுள்ளன என்பதை நிரூபிக்கின்றது. இருப்பினும், எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படவில்லை எனப் பரவலாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமையானது, அரசியல் கட்சிகள், அதனுடன் இணைந்த குழுக்கள் அல்லது தனிப்பட்ட ஆதரவாளர்களால் வழங்கப்படும் தேர்தல் பிரச்சாரக் கால உதவி எதுவாக இருந்தாலும், அது வெளிப்படுத்துதல் கட்டமைப்பிற்குள் போதியளவில் உள்வாங்கப்படுவதை உறுதிசெய்வதன் முக்கியத்துவத்தை சுட்டிக் காட்டுகிறது.

இந்த மீளாய்வின் மூலம் கண்டறியப்பட்ட மற்றொரு குறைபாடு யாதெனில், அடிப்படை வெளிப்படுத்துதல் நிபந்தனைகளுக்கு இணங்குவதில் காணப்பட்ட சீரற்ற தன்மையாகும். வெளிப்படைத்தன்மை நோக்கங்களுக்காக இத்தகைய தகவல்கள் அவசியமானவையாக இருந்தபோதிலும், பல தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் தேர்தல் பிரச்சாரக் காலப்பகுதியில் தங்களால் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி எண்கள் தொடர்பான தகவல்களை வழங்கத் தவறியுள்ளதுடன், சிலர் வாகன விவரங்களையும் வெளிப்படுத்தவில்லை. தற்போதைய கட்டமைப்பின் கீழ் போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புச் செலவுகளுக்குச் செலவின வரம்புகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கலாம் என்ற போதிலும், தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை திறம்பட கண்காணிக்கவும் சரிபார்க்கவும் இத்தகைய தகவல்களை வெளிப்படுத்துவது இன்றியமையாத தேவையாக நீடிக்கிறது.

வேட்பாளர்கள் அனுமதிக்கப்பட்ட செலவின உச்ச வரம்பினை தவறாகப் புரிந்து கொண்ட அல்லது தவறாகப் பயன்படுத்திய சந்தர்ப்பங்களையும் இந்த மீளாய்வு அடையாளம் கண்டுள்ளது. உதாரணமாக, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் மற்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் உள்ளிட்ட சிரேஷ்ட கட்சிப் பிரதிநிதிகள், பொருந்தக்கூடிய வரம்புகளுடன் ஒத்துப்போகாத செலவின

வரம்புகளைக் குறிப்பிட்டுச் செலவின தொகையை பதிவு செய்திருந்தனர். இத்தகைய முரண்பாடுகள், தேர்தல் பிரச்சாரச் செலவினங்கள் பரிந்துரைக்கப்பட்ட ஒழுங்குமுறை கட்டமைப்பிற்கு இணங்கி இருக்க வேண்டும் என திட்டமிடப்பட்டு பதிவு செய்யப்பட்டனவா என்ற கேள்விகளை எழுப்புகின்றன. இவ்வாறான முரண்பாடுகள் தீர்க்கப்படாமல் தொடருமானால், அவை சட்டரீதியான கூர்ந்தாய்வுக்கு/மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படலாம் என்பதுடன், தொடர்புடைய அதிகாரிகளிடமிருந்து தெளிவுபடுத்தல்களையும் கோரிநிற்கலாம்.

தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் வேட்பாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளும் ஒரு குறிப்பிடத்தக்க ஒழுங்குமுறைச் சவாலை முன்வைக்கின்றன. இவர்களது 18 வேட்பாளர்களும் பெருமளவில் ஒத்த தன்மையுடைய வெளிப்படுத்துதல்களைச் சமர்ப்பித்துள்ளனர். இது ஒட்டுமொத்த தேர்தல் பிரச்சாரமும் தனிநபர் வேட்பாளர்களால் அன்றி, அரசியல் கட்சியினாலேயே முன்னெடுக்கப்பட்டு நிதியளிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்கின்றது. இது ஒரு கட்சியால் முகாமை செய்யப்படுகின்ற தேர்தல் பிரச்சாரக் கட்டமைப்பின் யதார்த்த நிலையை பிரதிபலித்த போதிலும், தற்போதைய சட்டக் கட்டமைப்பானது ஒவ்வொரு வேட்பாளரும் தனிப்பட்ட தேர்தல் பிரச்சாரச் செலவின அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோருகிறது. கட்சி தலைமையிலான தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் எனக் குறிப்பிட்டு வெறும் சத்தியக்கடதாசியை (Affidavit) மாத்திரம் சமர்ப்பிப்பது, தேர்தல் பிரச்சார நிதி வெளிப்படுத்துதலின் பரந்த நோக்கத்தை முழுமையாக நிறைவு செய்யாது. ஏனெனில் ஒவ்வொரு வேட்பாளர் மட்டத்திலும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதே இதன் முதன்மை நோக்கமாகும்.

இந்த ஆய்வு முடிவுகள், தற்போதைய தேர்தல் பிரச்சார நிதி கட்டமைப்பிற்குள் காணப்படும் ஓர் ஒழுங்குமுறை இடைவெளியை அடிகோடிட்டுக் காட்டுகின்றன. இச்சட்டம் வேட்பாளர்களுக்கான அறிக்கையிடல் கடப்பாடுகளை விதித்துள்ள போதிலும், தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் சார்பாக தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் முழுமையாக அரசியல் கட்சிகளினால் நிர்வகிக்கப்பட்டு நிதியளிக்கப்படும் சூழ்நிலைகள் குறித்து வரையறுக்கப்பட்ட வழிகாட்டுதலையே வழங்குகிறது. எனவே, எதிர்காலச் சீர்திருத்தங்கள் தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பொறுப்புகளைத் தெளிவுபடுத்த வேண்டும் என்பதுடன், கட்சியினால் நிதியளிக்கப்படும் தேர்தல் பிரச்சாரங்களுக்கான பொருத்தமான அறிக்கையிடல் பொறிமுறைகளையும் கொண்டுவர வேண்டும். மேலும் அனைத்து வடிவங்களிலான தேர்தல் பிரச்சார ஆதரவுகளும் வெளிப்படையாகப் பதிவு செய்யப்படுவதையும், முறையான பொது கூர்ந்தாய்வுக்கு உட்படுத்தப்படுவதையும் உறுதி செய்தல் அவசியமாகும்.

பரிந்துரைகளும் எதிர்கால முன்னெடுப்புகளும்

இலங்கையின் தேர்தல் முறையின் ஸ்திரத்தன்மை மற்றும் அதன் தற்போதைய தேவைகளைக் கவனிக்கும் போது, தேர்தல் பிரச்சாரச் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் என்பது மிக முக்கியமான சட்ட மற்றும் நிறுவன ரீதியான முன்னேற்றமாகும். தேர்தல் நிர்வாகத்தை நடத்தும் முதன்மை அமைப்பு என்ற ரீதியில், இலங்கைத் தேர்தல் ஆணைக்குழு எடுத்துள்ள ஒரு முற்போக்கான நடவடிக்கையாகவும் இதனைக் கருதலாம். எனவே, இந்த நடைமுறையை மறுபரிசீலனை செய்து இன்னும் வலுவானதாக மாற்றுவதில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் சமமான பொறுப்பு இருக்கிறது. அண்மையில் நடந்து முடிந்த இரண்டு தேசிய தேர்தல்களின் போது சமர்ப்பிக்கப்பட்ட செலவின அறிக்கைகளை ஆய்வு செய்ததன் அடிப்படையில், பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

1. அறிக்கையிடல் முறைமையினை இலகுபடுத்தல்

வருமானம் மற்றும் செலவின அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கான ஒரு நியமப் படிவத்தையும் அதற்கான வழிகாட்டுதல்களையும் தேர்தல் ஆணைக்குழு ஏற்கனவே அறிமுகப்படுத்தியுள்ளது. இப்படிவமானது பொதுவாக முறைப்படுத்தப்பட்டதாகக் காணப்படுவதால், தற்போதைய சூழலில் இதில் பெரிய மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. எனினும், இவ் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும் செயன்முறையை நவீனமயமாக்குவதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

தற்போது, அறிக்கைகள் அஞ்சல் மற்றும் மின்னஞ்சல் மூலம் நேரடியாகப் பெறப்படுகின்றன. இதனால் ஆணைக்குழுவின் ஊழியர்கள் அவற்றை மீண்டும் ஸ்கேன் செய்து, மறுவடிவமைப்பு (Reformatting) செய்ய வேண்டியுள்ளது. இது நேரம் அதிகளவில் விரயமாகும் ஒரு செயற்திறனற்ற பணியாகும். இதனைத் தவிர்ப்பதற்காக, தேர்தல் ஆணைக்குழுவினால் நிர்வகிக்கப்படும் பிரத்தியேக இணைய அடிப்படையிலான மென்பொருள் செயலி (Web-based application) ஒன்றின் ஊடாகவே இனி அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும் முறை கொண்டுவரப்பட வேண்டும். நிதி வெளிப்படுத்தல் பிரகடனங்களில் தரவுகள் விடுபடுவதையோ அல்லது பிழையாகப் பதிவாவதையோ முற்றாகத் தவிர்ப்பதற்கு, ஆணைக்குழுவானது இணைய அடிப்படையிலான அறிக்கை சமர்ப்பிக்கும் செயலி ஒன்றினை அறிமுகப்படுத்த வேண்டும். இந்த டிஜிட்டல் தளமானது தானியங்கி சரிபார்ப்பு சோதனைகளை (Automatic validation checks) நிகழ்நேரத்தில் மேற்கொள்வதன் மூலம், வேட்பாளர்கள் தங்களது விவரங்களை உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்கு முன்னரே, அவற்றில் உள்ள தவறுகளை உடனுக்குடன் கண்டறிந்து திருத்திக்கொள்வதற்கு வழிவகுக்கும்.

செயற்திறனை உறுதிப்படுத்துவதற்காக, ஒவ்வொரு தேர்தலும் நிறைவடைந்த உடனேயே 25 மாவட்டத் தேர்தல் அலுவலகங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு முதன்மை பொறுப்பதிகாரி (Focal Point) ஒருவரை நியமிப்பதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது. மத்தியமயப்படுத்தப்பட்ட முறைமையின் ஊடாக அறிக்கைகளைச் சேகரித்தல், சரிபார்த்தல் மற்றும் பதிவேற்றம் செய்தல் ஆகிய பணிகளை இந்த அதிகாரிகள் மேற்பார்வை செய்யலாம். இச்செயன்முறையானது, மாவட்டங்களிலுள்ள உள்ளூர் முதன்மை பொறுப்பதிகாரிகளை அறிக்கை சமர்ப்பிக்கும் மற்றும் வெளிப்படுத்தும் காலம் முழுவதும் மத்திய தரவுத்தளத்துடன் இணைப்பதன் மூலம், மாவட்ட உதவி மற்றும் பிரதி ஆணையாளர்களுக்குக் கிடைக்கின்ற பணிச்சுமையைப் பாரியளவில் குறைக்கும்.

2. தேர்தல் ஆணைக்குழுவின் மேற்பார்வை அதிகாரங்களை வலுப்படுத்தல்

வருமான மற்றும் செலவின அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், அது தொடர்பான சட்டப் பின்பற்றுதலை ஊக்குவிப்பதற்கும் ஊடகப் பிரச்சாரங்களைப் பயன்படுத்துதல் வரை தேர்தல் ஆணைக்குழு கணிசமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இத்தகைய முயற்சிகளுக்கு மத்தியிலும், பல அறிக்கைகள் பூரணமற்றதாக அல்லது சரிபார்க்கப்படாததாகவே காணப்படுகின்றன. எனவே, தற்போதுள்ள சட்டக் கட்டமைப்பின் கீழ் ஆணைக்குழுவிற்கு வலுவான மேற்பார்வை அதிகாரங்களை வழங்குவது இன்றியமையாததாகும்.

தற்போது, ஆணைக்குழுவினால் காலதாமதங்கள் அல்லது அறிக்கைகளைச் சமர்ப்பிக்காமை குறித்து மாத்திரமே காவல்துறைக்கு (பொலிஸாருக்கு) அறிவிக்க முடியும். இதைத் தாண்டி, ஒரு குடிமகன், நிறுவனம் அல்லது அரசியல் கட்சியினால் முறைப்பாடு ஒன்று பதிவுசெய்யப்பட்டாலன்றி, அதன் அதிகாரம் வரையறுக்கப்பட்டதாகவே உள்ளது. இது போன்ற வரம்புகள், பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆணைக்குழு தலையிடுவதற்கான திறனைக் கட்டுப்படுத்துகிறது:

- சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் உண்மைத்தன்மை கேள்விக்குரியதாக இருக்கும் போது,
- தேர்தல் செலவுகள் சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட வரம்பை மீறும் போது, அல்லது
- செலவுகளுக்கான பற்றுசீட்டுகளும் வருமான வழிகளும்/மூலங்களும் குறிப்பிடப்படாத போது

இத்தகைய சந்தர்ப்பங்களில், தேர்தல் ஆணைக்குழுவே ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குள் நேரடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாகும் வகையில் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது, வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் அதிகரிக்கும்.

3. அரசியல் கட்சிச் செயலாளர்களுக்கும் சுயேச்சைக் குழுத் தலைவர்களுக்கும் வழிகாட்டல் மற்றும் உதவிகளை வழங்குதல்

இரு தேர்தல்களினதும் அறிக்கைகளினை மீளாய்வு செய்த போது, முறையான வழிகாட்டல்களும் தொழில்நுட்ப உதவிகளும் கிடைக்கப்பெற்றிருந்தால் பல தரவுப் பிழைகளையும் விடுபடல்களையும் எளிதாகத் தவிர்த்திருக்கலாம் என்பது தெளிவாகிறது. தேர்தல் ஆணைக்குழுவானது தேர்தல் பிரச்சாரச் செலவினங்களை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு நடைமுறைப் பிரிவை (Functional Unit) ஏற்கனவே நிறுவியுள்ள போதிலும், மேலதிக உதவிப் பொறிமுறைகள் அவசியமாகின்றன.

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும், படிப்படியான வழிகாட்டல்களை வழங்குவதற்கும் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தின் உதவியுடனான கருவிகளைப் பயன்படுத்தி, ஒரு 24/7 உதவிச் சேவையை நிறுவ முடியும். ஓர் இணையச் செயலி (Web application) மூலம் அறிக்கை சமர்ப்பிக்கும் செயன்முறை டிஜிட்டல் மயமாக்கப்பட்டால் (பரிந்துரை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி), அறிக்கைகளைப் பதிவேற்றும் போதே அதில் ஏதேனும் விவரங்கள் விடுபட்டிருந்தாலோ அல்லது முரண்பாடுகள் இருந்தாலோ இம்முறைமை தானாகவே கண்டறிந்து சுட்டிக்காட்ட (Flag) முடியும்.

இத்தகைய ஆதரவுப் பொறிமுறைகள் இல்லாதவிடத்து, பூரணமற்ற அல்லது பிழையான அறிக்கைகள் தொடர்ந்து ஏற்றுக்கொள்ளப்படும் நிலை ஏற்படலாம். இந்நிலையானது, 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இலஞ்ச ஊழல் ஒழிப்புச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனச் செயன்முறையில் காணப்பட்ட கடந்தகால வரையறைகளை ஒத்ததாகும். அவ்வாறான சூழலில் செயற்படுவதற்கான அதிகாரம் தற்போது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு (CIABOC) வழங்கப்பட்டுள்ளதைப் போலவே, தேர்தல் ஆணைக்குழுவிற்கும் அறிக்கை சமர்ப்பிக்கும் காலப்பகுதியில் சட்டப் பின்பற்றுதலை ஆதரிப்பதற்கும் அதனை கண்காணிப்பதற்கும் போதிய பொறிமுறைகள் மற்றும் கட்டமைப்புகள் வழங்கப்பட வேண்டும்.

4. நிகழ்நேரத் தகவல் வெளிப்படுத்துதல் தளமொன்றை அறிமுகப்படுத்துதல்

தேர்தல் பிரச்சார நிதி ஒழுங்குபடுத்துதல் முறையின் மிக முக்கியமான மற்றும் நுட்பமான விடயங்களில் ஒன்று வருமான மூலங்களை வெளிப்படையாக அறிவிப்பதாகும். இரு தேர்தல்களினதும் பகுப்பாய்வுகள், தெளிவான சட்டத் தேவைகள்/விதிமுறைகள் இருந்தபோதிலும், பல பங்குதாரர்கள் தங்களின் வருமான மூலங்களை வெளிப்படுத்துவதற்குத் தயக்கம் காட்டினர் என்பதை வெளிப்படுத்துகின்றன.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், தேர்தல் சார்ந்த அனைத்து நிதியியல் கொடுக்கல் வாங்கல்களையும் உடனுக்குடன் இணையவழியில் அறிக்கையிடுவதற்கு ஏதுவாக "நிகழ்நேரத் தகவல் வெளிப்படுத்துதல் தளமொன்று" (Real-Time Disclosure Platform) வடிவமைக்கப்பட வேண்டும். இத்தகையதொரு நவீன முறைமையானது, ஒட்டுமொத்த தேர்தல் செயன்முறையின் வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்துவதோடு, அதன் மீதான பொதுமக்களின் நம்பிக்கையையும் பெருமளவில் கட்டியெழுப்பும். மேலும், பொதுமக்கள் மற்றும் ஊடகங்கள் வேட்பாளர்களின் தேர்தல் பிரச்சார நிதி சார்ந்த நடவடிக்கைகளை உடனுக்குடன், மிக நெருக்கமாகக் கண்காணிக்க முடியும் என்பதால், இது சட்டதிட்டங்களைச் சரியாகப் பின்பற்றும் போக்கினை இயல்பாகவே ஊக்குவிக்கும். தகுந்த தொழில்நுட்பத் துணையைப் பெற்றுக்கொண்டு, இத்தகையதொரு காத்திரமான தளத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதில் தேர்தல் ஆணைக்குழு முன்னின்று வழிநடத்த முடியும்.

5. வருமான மற்றும் செலவின அறிக்கைகளை பொதுமக்கள் அணுகும் வாய்ப்பினை உறுதிசெய்தல்

வருமானம் மற்றும் செலவின அறிக்கைகள் தேர்தல் ஆணைக்குழுவிற்குரிய உத்தியோகபூர்வ சொத்தாகக் கருதப்பட்ட போதிலும், பொதுமக்கள் அவற்றை எளிதாக அணுகிப் பார்வையிடுவதற்கான முழுமையான வாய்ப்பு தாராளமாக வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், தற்போதைய சூழலில், இவ்வறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு பத்து நாட்களிலேயே ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்து நீக்கப்பட்டுவிடுகின்றன. இத்தகைய குறுகிய கால அவகாசம், தேர்தல் செயன்முறையின் வெளிப்படைத்தன்மையைக் கணிசமான அளவில் கட்டுப்படுத்துவதுடன், பொதுமக்கள் நீண்டகால அடிப்படையில் இவ்விவரங்களை முறையாகக் கூர்ந்தாய்வு செய்வதையும் தடுக்கிறது.

வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு, அனைத்து நிதி வெளிப்படுத்துதல் ஆவணங்களும் அடுத்த தேர்தல் நடைபெறும் வரை அதற்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட ஓர் இணையச் செயலியிலேயே தொடர்ந்து பேணப்பட வேண்டும். ஜனாதிபதித் தேர்தலின் போது முழுமையான சமர்ப்பிப்புகள் மிகக் குறுகிய காலத்திற்கு இணையத்தில் வெளியிடப்பட்டிருந்த போதிலும், பாராளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து சமர்பிக்கப்பட்ட அறிக்கைகளின் பாரிய எண்ணிக்கை காரணமாக, அவற்றை டிஜிட்டல் வழியில் அணுகும் சாத்தியக்கூறுகள் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டன. இதன் விளைவாக, பொதுமக்கள் அலுவலக நேரங்களின் போது மாவட்டச் செயலகங்கள் உள்ளிட்ட நியமிக்கப்பட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று ஆவணங்களைப் பார்வையிடும் நிலையே காணப்பட்டது. இந்த பின்னடைவானது, உயர் திறன் கொண்ட பிரத்தியேகமான வலைத்தளம் ஒன்றினை அறிமுகப்படுத்துவதன் அத்தியாவசியத் தேவையை மிகத் தெளிவாக உணர்த்துகிறது.

எதிர்காலத் தேர்தல்களைக் கருத்திற் கொண்டு, வாக்காளர்களின் விழிப்புணர்வைச் செழுமைப்படுத்தவும், அவர்கள் சரியான தரவுகளின் அடிப்படையில் தமது முடிவுகளை எடுப்பதை உறுதிசெய்யவும், இந்தத் தகவல்களுக்கான பொதுமக்களின் தொடர்ச்சியான அணுகலைப் பேணுவது கட்டாயமானதாகும்.

6. சுதந்திரமான சட்ட அமுலாக்கப் பொறிமுறையொன்றை நிறுவுதல்

ஒட்டுமொத்த அறிக்கை சமர்ப்பிக்கும் செயன்முறையையும் தேர்தல் ஆணைக்குழுவே கையாண்டு வருகின்ற போதிலும், சட்ட விதிமீறல்களுக்கு எதிரான அமுலாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வரையறுக்கப்பட்ட அதிகாரமே அதற்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அல்லது அதனுடன் தொடர்புடைய பிறிதொரு நிறுவனத்துடன் இணைந்து செயற்படுவதனூடாக, ஒரு சுயாதீனமான சட்ட அமுலாக்க அமைப்பொன்றை (Independent enforcement agency) நிறுவுவது அல்லது நியமிப்பது அவசியமாகின்றது.

இத்தகையதொரு வலுவான சட்ட அமுலாக்கப் பொறிமுறை இல்லாதவிடத்து, ஒரு தேர்தலில் தங்களின் நிதி அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் வேட்பாளர்கள், எவ்வித சட்டரீதியான பின்விளைவுகளையோ அல்லது தடைகளையோ எதிர்கொள்ளாமல், வருங்காலத் தேர்தல்களிலும் தடையின்றிப் போட்டியிடும் நிலை தொடரும். எனவே, புலனாய்வு மற்றும் வழக்குத் தொடுப்பு சார் அதிகாரங்களை ஒரு பிரத்தியேக நிறுவனத்திற்கு வழங்குவதன் மூலம் விதிமீறல்கள் துரிதமாக கையாளப்படுவதை உறுதி செய்ய முடியும். அத்துடன், வழக்குகள் சாதாரண நடைமுறையின் கீழ் பொலிஸாருக்கும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் மாற்றப்படும் போது ஏற்படும் வழக்கமான நிர்வாகக் காலதாமதங்களையும் இதன் மூலம் முற்றாகத் தவிர்க்க இயலும்.

முடிவுரை

2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் ஊடாக தேர்தல் பிரசார நிதி ஒழுங்குமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டமையானது, தேர்தல் நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கான இலங்கையின் முயற்சிகளில் அது எட்டியுள்ள குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். வரலாற்றில் முதற்தடவையாக, வேட்பாளர்களும் அரசியல் கட்சிகளும் தங்களது தேர்தல் பிரசார வருமானம் மற்றும் செலவினங்களை வெளிப்படுத்துவது சட்டரீதியாகக் கட்டாயமாக்கப்பட்டு, மேலும் வெளிப்படையான தேர்தல் சூழலுக்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது. இது ஒரு பாராட்டத்தக்க சாதனையாக இருந்தபோதிலும், இந்த புதிய சட்டக் கட்டமைப்பின் பயனுறுதி மிக்க தன்மையானது, இறுதியில் அதன் நடைமுறைப்படுத்தல், சட்ட அமுலாக்கம் மற்றும் தொடர்ச்சியான மேம்படுத்தல்களிலேயே தங்கியுள்ளது என்பதை இந்த அறிக்கையின் முடிவுகள் தெளிவுபடுத்துகின்றன.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களின் அனுபவங்கள் உணர்த்துவது யாதெனில், தேர்தல் ஆணைக்குழுவிடம் கணிசமான எண்ணிக்கையிலான தேர்தல் பிரச்சார நிதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், சட்டத்தின் நோக்கம் மற்றும் அதன் தேவைகள் ஆகிய இரண்டையும் பின்பற்றுவதில் காணப்பட்ட இணக்கப்பாடு சீரற்றதாகவே காணப்பட்டது என்பதாகும். பல சந்தர்ப்பங்களில், செலவின அறிக்கைகளில் அத்தியாவசியத் தகவல்கள் விடுபட்டிருந்ததுடன், அதிக எண்ணிக்கையிலான வேட்பாளர்களும் அரசியல் கட்சிகளும் தங்கள் தேர்தல் பிரச்சார வருமானத்திற்கான மூலங்களை போதியளவில் வெளிப்படுத்தத் தவறியுள்ளனர் அல்லது வரையறுக்கப்பட்ட தகவல்களையே வழங்கியுள்ளனர். இதன் விளைவாக, சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் பெரும்பாலானவை தேர்தல் பிரச்சாரங்களுக்கு எவ்வாறு நிதியளிக்கப்பட்டது என்பது குறித்த விரிவான அல்லது அர்த்தமுள்ள ஒரு பார்வையை வழங்க தவறியுள்ளன.

தற்போதைய சட்ட மற்றும் நிறுவனக் கட்டமைப்பிற்குள் காணப்படும் கட்டமைப்பு ரீதியான பலவீனங்களை இந்த அறிக்கை மேலும் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இச்சட்டம் அறிக்கையிடல் கடப்பாடுகளை நிறுவுகின்ற போதிலும், முறையான சரிபார்ப்பு, கூர்ந்தாய்வு மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றிற்கான வரையறுக்கப்பட்ட வழிமுறைகளையே வழங்குகிறது. வலுவான மேற்பார்வை அதிகாரங்கள், போதிய தொழில்நுட்பத் திறன் மற்றும் பயனுறுதி மிக்க இணக்கப்பாட்டுப் பொறிமுறைகள் இல்லாத பட்சத்தில், தேர்தல் பிரச்சார நிதி அறிக்கையிடலானது பொதுப் பொறுப்புக்கூறலுக்கான ஓர் அர்த்தமுள்ள கருவியாக மாறுவதற்குப் பதிலாக, வெறும் நடைமுறைச் சடங்காக அல்லது பயிற்சியாக மாறும் அபாயம் காணப்படுகின்றது. அதேபோன்று, பிரஜைகள், ஆய்வாளர்கள், ஊடக நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகம் ஆகியோர் தேர்தல் பிரச்சார நிதியளிப்பை சுயாதீனமாக ஆய்வு செய்யக்கூடிய வகையில், தேர்தல் பிரச்சார நிதி சார் தகவல்களைப் பயனாளர்கள் இலகுவாக கையாளக்கூடிய வடிவங்களில் பொதுமக்களுக்கு உரிய நேரத்தில் அணுகக் கிடைப்பதை உறுதிசெய்வதும் சம அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

எனவே, இலங்கையின் தேர்தல் பிரச்சார நிதி ஒழுங்குமுறையை வலுப்படுத்துவதற்கு வெறும் சட்ட இணக்கப்பாடு மாத்திரம் போதுமானதாக அமையாது. நடைமுறைச் செயலாக்கத்தின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான திருத்தச் சட்டங்களை இயற்றுதல், தேர்தல் பிரச்சார நிதி வெளிப்படுத்துதல்களைக் கண்காணிக்கவும் விசாரணை செய்யவும் தேர்தல் ஆணைக்குழுவிற்கு கூடுதல் நிறுவன அதிகாரங்களை வழங்குதல், மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் அறிக்கையிடல் முறைமைகள், தெளிவான அறிக்கையிடல் நிபந்தனைகள் மற்றும் சட்ட மீறல்கள் இடம்பெறும் போது அதன் தீவிரத்திற்கேற்ப சட்ட நடவடிக்கையெடுத்தல் போன்ற வழிமுறைகளை இது கோரிநிற்கின்றது. இத்தகைய சீர்திருத்தங்கள் சட்ட இணக்கப்பாட்டை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், தேர்தல் செயன்முறையின் நேர்மைத்தன்மை மீதான பொதுமக்களின் நம்பிக்கையையும் பலப்படுத்தும்.

தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் பயனுறுதி மிக்க தன்மையானது இறுதியில் தேர்தல் பிரச்சார நிதி அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதை மட்டும் சார்ந்திருக்காது, அதனுடன் தொடர்புடைய அதிகார அமைப்புகளால் அதன் விதிகள் சீரான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதிலும் சட்ட அமுலாக்கத்திற்கு உட்படுத்தப்படுவதிலும் தான் முழுமையாக தங்கியுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவானது ஒரு தகுந்த அறிக்கையிடல் பொறிமுறையை நிறுவி, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் கணிசமான எண்ணிக்கையிலான தேர்தல் பிரச்சார நிதி அறிக்கைகளைப் பெறுவதில் வெற்றியடைந்த போதிலும், இந்தச் சட்டத்தின் நடைமுறைத் தாக்கம் என்பது, அந்த வெளிப்படுத்துதல்கள் முறையாகக் கூர்ந்தாய்வு செய்யப்படுகின்றனவா மற்றும் இணக்கப்பாடற்ற தன்மைகள் கண்டறியப்படும் போது தகுந்த சட்ட அமுலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா என்பதிலேயே பொதிந்துள்ளது.

இங்கு கவனத்திற்குரிய ஒரு முக்கிய அம்சம் என்னவெனில், ஏனைய அரச நிறுவனங்களுக்கு, குறிப்பாக இலங்கை பொலிஸ் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சட்ட அமுலாக்கப் பொறுப்புகள் ஆகும். 2024 ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் 8900 இற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிட்ட போதிலும், இச்சட்டத்தின் கீழ் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக இலங்கை பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள், தொடங்கப்பட்ட வழக்குத் தொடரல்கள் அல்லது சட்டமா அதிபரின் கவனத்திற்குப் பரிந்துரைக்கப்பட்ட வழக்குகள் பற்றிய தகவல்கள் பொதுவெளியில் மிகக் குறைவாகவே கிடைக்கின்றன. இதேபோல், சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு சட்ட அமுலாக்க நடவடிக்கைகளின் முன்னேற்றம் அல்லது விளைவு குறித்தும் பொதுமக்களுக்கு மிகக் குறைந்தளவிலான தகவல்களே கிடைக்கப் பெறுகின்றன.

முறையான சட்ட அமுலாக்கம் மற்றும் இணக்கப்பாட்டு நடவடிக்கைகள் குறித்த வழக்கமான பொதுத் தகவல் பரிமாற்றங்கள் இல்லாமை, இச்சட்டத்தின் நடைமுறைப்படுத்தல் குறித்து ஒரு நிச்சயமற்ற தன்மையை உருவாக்குவதுடன், தேர்தல் பிரச்சார நிதி ஒழுங்குமுறைக் கட்டமைப்பு மீதான பொதுமக்களின் நம்பிக்கையையும் பலவீனமடையச் செய்யும். மேலும், இச்சட்டத்தின் கீழ் தற்போது கிடைக்கக்கூடிய அதிகாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்ற கவலையையும் இது தோற்றுவிக்கிறது. பயனுறுதி மிக்க தேர்தல் பிரச்சார நிதி ஒழுங்குமுறைக்கு ஒரு வலுவான சட்டக் கட்டமைப்பு மட்டுமன்றி, பொறுப்பு வாய்ந்த அனைத்து நிறுவனங்களினதும் காலத்திற்கேற்ற, வெளிப்படையான மற்றும் விகிதாசாரப்படியான (குற்றத்தின் தீவிரத்தன்மைக்கேற்ற) சட்ட அமுலாக்கமும் இன்றியமையாததாகும்.

எனவே, இணக்கப்பாடு மற்றும் பொறுப்புக்கூறல் சார்ந்த ஒரு வலுவான கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு, கண்காணிப்பு, விசாரணை, அமுலாக்கம் மற்றும் பொது அறிக்கையிடல் ஆகியவற்றில் அதிக நிறுவன அர்ப்பணிப்பு அவசியமாகிறது. தேர்தல் பிரச்சார நிதி ஒழுங்குமுறையானது வெளிப்படைத்தன்மையை நிலைநாட்டவும், சட்ட மீறல்களைத் தடுக்கவும், இலங்கையின் தேர்தல் செயன்முறை மீதான பொது நம்பிக்கையை வலுப்படுத்துவதற்குமான ஒரு நம்பகமான பொறிமுறையாகச் செயற்பட வேண்டுமாயின், சட்டத்தின் தெளிவான மற்றும் சீரான அமுலாக்கம் என்பது மிக முக்கிய தேவையாகும்.

ஆதலால், தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டமானது ஒரு முற்றுப்புள்ளியாக பார்க்கப்படாது, காலத்திற்கேற்ப மாற்றமடைய வேண்டியதொரு சட்டச் சீர்திருத்தப் பயணத்தின் ஆரம்பப் புள்ளியாகவே கருதப்பட வேண்டும். அண்மைக்காலத்தில் நமது தேசம் கண்ட ஆகச்சிறந்த ஜனநாயகச் சீர்திருத்தங்களில் ஒன்றாகத் திகழும் இச்சட்டம், தனது நோக்கங்களை முழுமையாக எய்த வேண்டுமாயின், கொள்கை வகுப்பாளர்கள், தேர்தல் ஆணைக்குழு, அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், சிவில் சமூகம், ஊடகம் மற்றும் பிரஜைகள் என அனைத்துத் தரப்பினரதும் தளராத அர்ப்பணிப்பு இப்போது அவசியமாகிறது.

தேர்தல் பிரச்சார நிதி ஒழுங்குமுறையின் நடைமுறைப்படுத்தலை வலுப்படுத்தவும், தேர்தல் நிதியாக்கத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் கலாசாரத்தை கட்டியெழுப்பவும், எதிர்காலத் தேர்தல்களின் நேர்மைத் தன்மையை பேணுவதற்குத் தேவையான சட்ட மற்றும் நிறுவனச் சீர்திருத்தங்களை முன்னெடுக்கவும் கூட்டாக ஒன்றிணைந்து செயற்படுமாறு தொடர்புடைய அனைத்துத் தரப்பினருக்கும் இதன் மூலம் அழைப்பு விடுக்கப்படுகிறது. இத்தகைய தொடர்ச்சியான மேம்படுத்தல்கள் மற்றும் பயனுறுதி மிக்க மேற்பார்வையின் மூலமாக மட்டுமே, தேர்தல் பிரச்சார நிதி ஒழுங்குமுறையானது பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்துதல் மற்றும் இலங்கையின் ஜனநாயகச் செயன்முறைகளின் நம்பகத்தன்மையைப் பாதுகாத்தல் ஆகிய தனது நோக்கங்களை முழுமையாக அடைய முடியும்.

Transparency International Sri Lanka
366, Nawala Road, Nawala,
Rajagiriya,
Sri Lanka.

Phone: +94 11 4 369 781
Fax: +94 11 2 865 777
Email: tisl@tisrilanka.org
Web: www.tisrilanka.org

twitter.com/tisrilanka
lk.linkedin.com/company/tisrilanka
facebook.com/tisrilanka
instagram.com/transparency_sri_lanka
youtube.com/user/tisrilankatube